
HINTS FOR HEALTH
Sound Sleep
an important factor......
அதன் நுரை சருமத்திற்
குள் வெகு தூரம்
சென்று அசுத்தங்களை
போக்கி, சருமத்தை
மிருதுவாக்கி, உங்களு
க்கு அழகிய மேனி அழகு
அளிக்கிறது. உங்களுக்
கேற்ற ஸோப் அதுவே
சிறந்த ஆரோக்யத்துடன்
விளங்க அயர்ந்த நித்திரை ஓர்
முக்கியமான அம்சம். தேகம்.
நரம்புகள் மற்றும் மூளை இவை
கள் மறுநாளைக்கு வேண்டிய
புதிய சக்திக்கு நல்ல தூக்கத்
தையே நம்பி யிருக்கின்றன.
அதே போல் நல்ல சரும
ஆரோக்கியத்துடன் விளங்க
மலபார் லிம்டா ஸோப்
மிக முக்கியமானது.
MALABAR
LIMDA
LIMDA
மலபார்
லிம்டா
ஸோப்
FAS L-3.
வெஜிடபில் ஸோப் வொர்க்ஸ்
கள்ளிக்கோட்டை
புரோப்ரைடர்ஸ்: சேட் N.P.&கோ கள்ளிக்கோட்டை. பம்பாய் 2. சென்னை 1.



வசீகரமான

வாரிவிடப்பட்ட கூந்தல்

ஆண்கள் தலைக்குகந்தது
ஜேம்ஸ் பொமேட்.
நாள் பூராவும்
மயிர் கலையாது;
எண்ணெய்ப் பிசுக்கான
தோற்றமளிக்காது.



ஜேம்ஸ்


பொமேட்

ஜேம்ஸ் பெர்ப்யூமரி கம்பெனி.
சென்னை

32-10


இலங்கை, சிங்கப்பூர்,
பர்மா முதலிய இடங்களுக்கு
சோல் ஏஜெண்டுகள் தேவை

குழந்தைகளின் சுரல்
குலைக் கட்டிகளுக்கு
இன்றியமையாத மருந்து!



குழந்தைகளின் சுரல் குலைக் கட்டிகளை குணப்படுத்தும் ஜம்பியின் லிவர்க்யூர் வைத்திய சாஸ்திரத்திற்கே அவசியமானதும் பெருமை அளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

இந்த அற்புத நிவாரணியால், முற்றிப் போய் கைவிடப்பட்ட சுரல் குலைக் கட்டி வியாதிகளும் ஆச்சரியகரமான முறையில் குணப்படுத்தப் பட்டிருக்கிறது என்று இந்தியாவில் உள்ள பிரக்யாதி பெற்ற பல டாக்டர்களால் பாராட்டப் பட்டுள்ளது.



ஜம்மியின்

லிவர்க்யூர்

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாப்பூர் மதராஸ் 4 (போன் நெ. 8133)
தெப்பகுளம் திருச்சி, பெரிய தெரு கும்பகோணம்,
பெங்களூர், பம்பாய் 4. (போன் நெ. 41583)
மற்றும்: டில்லி, கல்கத்தா.

எல்லோரும்

ஏகோபித்துப் பாராட்டும்
இனிமையான பொழுதுபோக்கு

AVM புரொடக்ஷன்ஸ்

வேதாள உலகம்

முழுவதும் சங்கீதமும் நாட்டியமும் நிறைந்தது
கீழ்க்கண்ட இடங்களில்.....
வெற்றிகரமாக நடைபெறுகிறது



கோவை - லைட் ஹவுஸ் & கர்னாடிக்
கும்பகோணம் - விஜயலெக்ஷ்மி
சேலம் - அம்பிகா டாக்கீஸ்
திருநெல்வேலி - பாப்புலர்
தூத்துக்குடி - கார்னேஷன் & பாலகிருஷ்ணா
திருவனந்தபுரம் - சித்ரா

மற்றும்

நாகர்கோவில், கொல்லம், சிதம்பரம், கடலூர், பாண்டிச்சேரி, மாயவரம், நாகபட்டிணம், காரைக்குடி, கொழும்பு, யாழ்ப்பாணம்


AVM PRODUCTIONS

12-9-48 முதல் திருச்சி — ராஜா

விரைவில் எதிர்பாருங்கள்!

மதராஸ் — பிரபாத் & பாரகன் :: பெங்களூர் — சாகர், சிவாஜி & லெக்ஷ்மி
மதுரை — செண்ட்ரல் :: விருதுநகர் — நியூ முத்து


திரையிடத் தயார்
நரேந்த்ரா பிக்சர்ஸ்...
ராஜமுக்தி
டைரக்ஷன்: ராஜா சந்திர சேகர்
தியாகராஜ பாகவதர்.....பானுமதி.....ஜானகி
சாமா.........சாமிநாதன்..........வெங்கடேசன்..........சக்ரபாணி........வீரப்பா
..........ராஜகாந்தம்........சந்திரா மற்றும் பலர் நடித்தது..........
ஆந்திரா, ஸீடட், நைஜாம் :
நந்தா பிலிம்ஸ், 1, மோதிலால் தெரு, சென்னை - 17
மைசூர் & குடகு
கர்நாடகா பிலிம்ஸ், லிமிடெட், பெங்களூர் ஸிடி.
திருச்சி & தஞ்சாவூர் :
முத்துமாணிக்கம் கம்பெனி, சிதம்பரம்
மலபார் : ஸ்வாமி பிலிம்ஸ், கோட்டயம்
வட ஆற்காடு, தென் ஆற்காடு & செங்கல்பட்டு :
எ. கிருஷ்ணசாமி, பெங்களூர் ரோட், வேலூர்
சித்தூர் : கராபி பிக்சர்ஸ், நகரி
சேலம் : தனலெக்ஷிமி பிலிம்ஸ், சேலம்
கோயமுத்தூர் & நீலகிரி :
வெரைட்டி ஹால் டாக்கீஸ், கோயமுத்தூர்
மதுரை ராமநாதபுரம் & திருநெல்வேலி :
ஜி. பெருமாள்சாமி நாடார், போரையார், தஞ்சாவூர் ஜில்லா
சிலோன் :
சிலோன் என்டர்டேய்ன்மென்ட்ஸ், கொழும்பு
சென்னை நகரம், பர்மா, எப். எம். எஸ்., வட இந்தியா :
பயனீர் பிக்சர்ஸ் லிமிடெட், ஜெயகுமார் பிலிம்ஸ் லிமிடெட் - குடியாத்தம், வட ஆற்காடு ஜில்லா.



கல்கி
பொருளடக்கம்

மலர் 8 இதழ் 7	செப்டம்பர் 12	சர்வதாரி ஆவணி 28

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 7

என்ன சேதி?

தீபாவளி இல்லை

இந்த வருஷம் ஜனவரி மீ 30உ காந்தி மகான், பாவி ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி அறிந்தபோது இந்திய மக்கள் அடைந்த துயரத்துக்கு அளவே கிடையாது. ஒவ்வொருவரும் தம்முடைய குடும்பத்தைச் சேர்ந்த பக்திக்குரிய பந்து ஒருவர் காலமானதாகவே எண்ணித் துயரடைந்தோம். இந்தியாவில் ஒரு குடும்பத்தில் யாராவது மரணமடைந்தால் அந்த வருஷம் முடிய அக்குடும்பத்தில் பண்டிகைகளும் விழாக்களும் கொண்டாடுவதில்லை யென்ற முறைமை இருந்து வருகிறது. ஆதலின் நம் ஒவ்வொருவருக்கும் உற்ற பந்துவாய் விளங்கிய காந்தி மகான் காலமான வருஷத்தில் பண்டிகைகள் கொண்டாடுவது முறைமை யல்ல. இதையே காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாத் அவர்களும் குறிப்பிட்டு "இந்த வருஷத்தில் ராமலீலா-தீபாவளிப் பண்டிகைகள் கொண்டாட வேண்டாம்" என்று மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆகஸ்டு மீ 15உ நாடெங்கும் மக்கள் கொண்டாடிய சுதந்திரத் திருநாளன்றும் தீபாலங்காரம் முதலிய ஆர்ப்பாட்டங்கள் வேண்டாமென்று தலைவர்கள் கட்டளை யிட்டிருந்தார்கள்.

"கல்கி" ஸ்தாபனம் இந்த வருஷம் தீபாவளி கொண்டாடுவதில்லை யென்று தீர்மானித்திருக்கிறது. ஆகையால் இந்த வருஷம் "கல்கி" தீபாவளி மலர் வெளியாகாது. (பொங்கல் அடுத்த ஜனவரி 30உக்குள் வருவதால் பொங்கல் மலரும் வெளியாகாது.) காந்திமகானிடம் அளவில்லாத பக்தி கொண்ட "கல்கி" நேயர்கள் இந்த முடிவை முழுமனதுடன் அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

காந்தி மலர் உண்டு

அடுத்த அக்டோபர் மாதம் 2-ந் தேதி காந்தி மகான் அவதரித்த புனிதமான நாள். அன்று வெளியாகும் "கல்கி" இதழைக் காந்தி மகான் மலராக வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம். அதிகமான பக்கங்களும், படங்களும், விஷயங்களும் அடங்கிய மலராயிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆனால் "கல்கி" காந்தி மலரின் விலையில் மட்டும் அதிகம் கிடையாது. வழக்கம்போல் நாலு அணாத்தான்.

நியாய புத்தியும் நேர்மையும்

இந்தியாவில் என்றென்றும் எதேச்சாதிகாரம் செலுத்தி வரலாம் என்று கனவு கண்டு வந்த பிரிட்டிஷார் அடங்கிய ஒரு கோஷ்டியினருக்கு, இந்தியா சுதந்திரம் பெற்றது இடி இடித்தது போலாகியது. அடிமை இந்தியாவில் ஜனங்களுக்கு எஜமானர்களாக இருந்த அவர்கள் சுதந்திர இந்தியாவில் ஜனங்களுக்கு ஊழியர்களாக இருப்பதைச் சகிப்பார்களா? எனவே அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினர். இந்தியா அவர்களை விட்டு விட்டதெனினும், தங்களுடைய கனவைத் தவிடு பொடியாக்கிய இந்தியா மீது வஞ்சம் தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் விடவில்லை!

ஆகையால் அந்தக் கோஷ்டியைச் சேர்ந்த சிலர் பாகிஸ்தானுக்குச் சென்று இந்தியாவுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். மற்றும் சிலர் காஷ்மீரத்தில் பாகிஸ்தான் சார்பில் போரை நடத்தி வருகிறார்கள். வேறு சிலர் நைஜாமின் சகுனிகளில் ஒருவரான மாங்டனின் அடிச்சுவடுகளைப் பின் பற்றி வெளிநாடுகளில் இருந்த

கொண்டு இந்தியாவுக்குத் தங்களால் இயன்ற இடையூறுகளைச் செய்து வருகிறார்கள். இன்னும் சிலர் இந்தியாவின் விரோதிகளுக்குத் திருட்டுத்தனமாக போர்த் தளவாடங்களைக் கொண்டு போய்க் கொடுப்பதில் முனைந்திருக்கிறார்கள்.

ஆனால், அத்தகைய கோஷ்டியில் சேராமல் இந்தியாவின் கஷ்ட நஷ்டங்களைக் கண்டு இந்தியாமீது அனுதாபம் காட்டிய ஒரு சிவில் சென்னை கவர்னராக இருந்தவர் ஆர்ச்சிபால்டு நை ஒருவர். எனவே கவர்னர் பதவியிலிருந்து விலகிச் சென்ற அவரும், சமூகத் தொண்டில் ஈடுபட்டு வந்த அவரது மனைவியாரும் சென்னை மகாஜனங்களுடைய அன்புக்குப் பாத்திரமானதில் ஆச்சரியமில்லை. இந்தியா சுதந்திரம் பெற்றும் கூட பிரிட்டிஷாரான ஒரு கவர்னரிடம் சென்னை மந்திரிகளும் மகாஜனங்களும் காட்டிய அன்பும், மதிப்பும், இந்தியர்களின் நியாய புத்திக்கும் நேர்மைக்கும் பெருந்தன்மைக்கும் சிறந்த உதாரணமாகும்.

புகார் பொய்த்தது

இந்திய சர்க்கார் மீது கூறப்பட்டு வரும் புகார்களில் மேற்படி சர்க்கார் முதலாளிகளின் சர்க்கார் என்பது ஒன்றாகும். அந்தப் புகார் எவ்வளவு தூரம் அபத்தம் என்பதை, சமீபத்தில் இந்தியா பார்லிமெண்டில் நிறைவேறிய மசோதாக்கள் நிரூபித்திருக்கின்றன. அங்கு நிறைவேறிய தொழிற்சாலைகள் மசோதாவைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். தொழிலாளர்களுக்கு ஆரோக்கிய வசதிகளைச் செய்து கொடுக்கும்படி முதலாளிகளை வற்புறுத்துவதே அந்த மசோதாவின் நோக்கமாகும்.

இந்திய ரிசர்வ் பாங்கியின் நிர்வாகத்தைச் சர்க்கார் ஏற்றுக் கொள்வதென்று இந்தியா பார்லிமெண்டில் மற்றொரு மசோதா நிறைவேறியிருக்கிறது. இதுவும் முதலாளிகளைப் பாதிக்கும் ஒரு மசோதா என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இதன்படி அடுத்த வருஷத்திலிருந்து மேற்படி பாங்கியின் நிர்வாகத்தைச் சர்க்காரே ஏற்றுக் கொண்டு நடத்துவார்கள். சென்ற வருஷம் கூட பிரிட்டிஷ் தொழிற் கட்சி சர்க்கார் பிரிட்டிஷ் முதலாளிகளின் கூக்குரலைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் இங்கிலாந்து பாங்கியின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டது நேயர்களுக்கு ஞாபக மிருக்கலாம். இந்தியாவின் பொருளாதார சுபிட்சத்துக்கும் நாணயச் செலாவணி நிர்ணய முறைகளுக்கும் உயிர் நாடியான ரிசர்வ் பாங்கியை இந்திய சர்க்கார் சிறிதும் தாமதமின்றி தங்களுடைய நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ள முற்பட்டதின் மூலம், தங்கள் மீது ஆத்திரப்படும் அவசரவாதிகளுக்குச் சரியான பதில் கொடுத்திருக்கிறார்கள்.

பர்மா இந்தியர்களின் பரிதவிப்பு

பர்மாவிலுள்ள இந்தியர்களின் பிரதிநிதிகள் இந்திய சர்க்காருக்கு ஒரு மகஜர் அனுப்பி யிருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. பர்மிய சர்க்கார் இந்தியர்களிடமிருந்து ஆர்ஜிதம் செய்து கொள்ளும் சொத்துக்களுக்கு, நியாயமான ஈடுத் தொகை கொடுக்க வேண்டுமென்று பர்மாவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளும்படி அவர்கள் இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பர்மாவில் இந்தியர்களுக்குச் சொந்தமான நிலங்களின் பெறுமானம் சுமார் நூறு கோடி ரூபாய் என்பதைக் கவனிப்பவர்கள் அந்தப் பிரச்னையின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

இலங்கை சர்க்காரைப்போலவே பர்மா சர்க்காரும் பொருளாதார, அரசியல், கலாசாரத் துறைகளில் இந்தியர்கள் செய்துள்ள தொண்டை அடியோடு மறந்து மமதையுடன் காரியங்களைச் செய்து வருகிறார்கள். பர்மாவைப் பலபல வருஷங்களாகச் சுரண்டி வந்த ஆங்கிலேயர்களுக்குக் கூட ஓரளவு சலுகைகள் காட்டும் பர்மா சர்க்கார், பர்மாவுக்கு எக்காலத்திலும் எவ்வித இன்னலும் இழைக்காத, பர்மாவின் சுகதுக்கங்களில் பங்கெடுத்து வந்த இந்திய மக்கள் விஷயத்தில் இரக்கமின்றி நடந்துகொள்ள முற்பட்டிருக்கிறார்கள்.

அவ்விஷயமாக பர்மா பார்லிமெண்டில் ஒரு மசோதா இம் மாதம் விவாதத்துக்கு வருவதால், இந்திய சர்க்கார் காலதாமதமின்றி பர்மா இந்தியர்களுக்குப் பாதுகாப்பாகத் தகுந்த முறைகளைக் கைக் கொள்ள வேண்டும். அங்கு இந்தியர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் உழைப்பினாலும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டும் சேகரிக்கப் பட்டவை. அப்படியிருக்க அவற்றை பர்மா சர்க்கார் தங்கள் இஷ்டப்படி கைப்பற்ற முற்படுவது புதிதாகக் கிடைத்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும்.

அதிர்ஷ்டம் யாருக்கு?



பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் காயிதே ஆஜம் ஜின்னாவின் தேக நிலைமையைப் பற்றிப் பத்திரிகைகளில் வெளியாகும் பல செய்திகளைப் பார்த்துவிட்டு பாகிஸ்தான் மந்திரிகள் எல்லோரும் தயாராக கராச்சியிலேயே இருக்கிறார்களாம். ஒருவேளை, அவர்கள் தங்கள் வீட்டு விலாசத்தை மாற்றுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்களோ, என்னவோ?



அத்தியாயம் 11

தாஜ்மகால்

புது மணம் புரிந்த மங்கை தன்னுடைய காதலன் அருகில் நெருங்கி வரும்போது ஆசையும் நாணமும் கலந்த தோற்றத்துடன் நிற்பது போலத் தங்க நிலாவில் தாஜ்மகால் என்னும் மோகினி நின்றாள். நுரைப் பூவை யொத்த வெண்மையும் மென்மையும் பொருந்திய டக்கா மஸ்லினைக் கொண்டு மேனியை மட்டுமன்றி முகத்தையும் முக்கால் பங்கு மறைத்துக் கொண்டு அந்தப் புவன மோகினி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அரச குமாரியின் கண்ணில் படாமல் அவளை நாலு புறமும் காவல் புரியும் தோழிப் பெண்களைப் போல் நெடிதுயர்ந்த ஸ்தம்பக் கோபுரங்கள் நாலு மூலையிலும் நிமிர்ந்து நின்றன.

உலகம் தோன்றிய நாள் தொட்டுக் காதலர்களுக்கு வேதனை தருவதையே தொழிலாகக் கொண்ட பூரணச் சந்திரன் தனது கர்ம பலனை இந்தத் தாஜ்மகால் மோகினியிடம் அநுபவித்தான். தன்னுடைய ஆயிரமாயிரம் தங்கக் கரங்களினால் அந்த இணையில்லா அழகியைத் தழுவ ஆசைகொண்டு எவ்வளவோ முயன்றான். எனினும் தாய்மையே உருவெடுத்த அந்த நங்கையின் மேனியை அவனுடைய கரங்கள் தொட முடியாமல் அப்பால் நழுவி விழுந்தன. ஒரு வேளை நாணங்காரணமாகத் தன்னைப் புறக்கணிக்கிறாளோ என்று எண்ணி இருள் நிழலைத் தன் உதவிக்கு அழைத்தான். ஆனால் நிழல் அந்தக் கற்பரசியின் மேனிக்கு ஒரு கவசமாகிக் காமுகனுடைய கரங்களை அப்பால் நிற்கச் செய்தது.

சந்திரனுக்குக் காதல் வேதனை பொறுக்க முடியாமற் போயிற்று. "தாஜ்மகால் மோகினியினால் நிராகரிக்கப்பட்ட பிறகு இந்த ஜன்மம் என்னத்திற்கு?" என்று நிராசை யடைந்தான். அவள் கண்ணுக்கெதிரே தன் உயிரை விட்டுவிட எண்ணி அங்கிருந்த அழகிய நீர் ஓடையில் தலை குப்புற விழுந்தான். அப்போதுதான் அந்த வெண்மலர் மேனியாளுக்கு மனதில் இரக்கம் உண்டாயிற்று. சந்திரனைக் காப்பாற்றத் தானும் ஓடையில் குதித்தாள்! பளிங்குக் கல் ஓடையில் ஸ்படிகம் போலத் தெளிந்திருந்த நீரில் தங்கச் சந்திரனும் தாஜ்மகால் மோகினியும் ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொண்டு காதல் புரிவதாகக் கற்பனை உலகத்தில் மெய்மறந்து சஞ்சரித்துக் கொண்டிருந்த சீதாவின் கற்பனைக் கண்களுக்குத் தோன்றியது. ஆஹா! எத்தனை காலமாக இந்தத் தாஜ்மகாலைப் பார்ப்பதற்கு அவள் ஆவல் கொண்டிருந்தாள்! எத்தனை முறை மானஸிக யாத்திரை செய்து இங்கே அவள் வந்திருக்கிறாள்! எத்தனை தடவை தாஜ்மகாலைப் பற்றிக் கனவு கண்டிருக்கிறாள்?—அந்தக் கனவெல்லாம் இன்றைய தினம் உண்மையாகி விட்டது. சீதாவின் வாழ்க்கையில் இது ஒரு மகத்தான தினம் என்பதில் சந்தேகம் என்ன?

தாஜ்மகாலின் முன் வாசலில் பிரவேசித்த பிறகு பிரதான கட்டடம் வரையில் உள்ள நிலா முற்றம் ஏறக் குறைய இரண்டாயிரம் அடி நீளமும்

ஆயிரம் அடி அகலமும் உள்ளது. இந்த நிலா முற்றத்தில் குறுக்கும் நெடுக்குமாக நீலோத்பலம் மலர்ந்த நீரோடைகள் பல இருக்கின்றன. வெள்ளைப் பளிங்குக் கல் ஓடைகளில் நீலவர்ண ஜலமும் நீலோத்பலமும் நீலவானத்தின் பிரதிபலிப்பும் நட்சத்திரங்களின் கிலுகிலுப்பும் வர்ணிக்க முடியாத சௌந்தரியக் காட்சியாகத் திகழ்கின்றன. கட்டிடத்தை நெருங்கும்போது நீர் ஓடைகளில் தாஜ்மகாலின் பிரதிபிம்பத்தையும் காணலாம். பௌர்ணமி யன்று பூர்ண சந்திரனுடைய பிரதிபிம்பமும் ஓடை நீரில் ஜொலித்துக்கொண்டிருக்கும் என்று சொல்லவா வேண்டும்?

தங்க நிலவின் ஒளியில், வெள்ளைப் பளிங்குக் கல் தரையில், நீல ஓடைக் கரையில், சீதா, ராகவன், சூரியா, தாரிணி, நிருபமா, அவளுடைய கணவர் வேணிப்பிரஸாத் ஆகியவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

மாலை நேரமெல்லாம் அவர்கள் தாஜ்மகாலைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள். உள்ளே சென்று ஷாஜகான்—மும்தாஜ் சமாதிகளைப் பார்த்தார்கள். சமாதிகளைச் சுற்றிலும் சலவைக்கல்லில் அமைத்திருந்த அதி அற்புதமான சித்திர விசித்திர வேலைகளைப் பார்த்தார்கள். தூர தூர தேசங்களிலிருந்து தருவித்துப் பதித்திருந்த இரத்தினக் கற்களிலான புஷ்ப ஹாரங்களைப் பார்த்தார்கள். நாலு மூலையிலும் நூற்றறுபது அடி உயரம் நிமிர்ந்து நின்ற காவல் கோபுரங்களிலே அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஏறி உச்சியிலிருந்து நாலாபுறமும் பார்த்து மகிழ்ந்தார்கள். யமுனை நதியில் இறங்கிக் களித்தார்கள். அங்கு மிங்கும் ஓடி யாடினார்கள். ஓடியவர்களைத் துரத்திப் பிடித்தார்கள். கலகல வென்று சிரித்தார்கள். விளையாட்டாக ஒருவரை யொருவர் அடித்தார்கள்.

இப்படி யெல்லாம் குதூகலமாக மாலை நேரத்தைக் கழித்த பிறகு எல்லாரும் ஓரளவு உடல் சோர்ந்து ஓடைக் கரையில் உட்கார்ந்தார்கள். இரவு சுமார் ஒன்பது மணி இருக்கும். புற உலக மெங்கும் அமைதி நிலவியது. ஆனால் நம்முடைய நண்பர்கள் எல்லாருடைய உள்ளத்திலும் அமைதி நிலவியது என்று சொல்ல முடியாது. சீதா, ராகவன், தாரிணி, சூரியா ஆகிய ஒவ்வொருவருடைய உள்ளமும் வெவ்வேறு காரணத்தினால் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

"மனித ஜன்மம் எடுத்துத் தாஜ்மகாலைப் பார்க்காமலிருப்பதில் என்ன பயன்? அப்படிப்பட்ட ஜன்மமும் ஒரு ஜன்மமா?" என்றாள் சீதா.

"தாஜ்மகாலைப் பார்ப்பதிலும், பகலில் பார்த்தால் மட்டும் போதாது. இந்த மாதிரி பௌர்ணமி நிலவிலே பார்க்கவேண்டும்" என்றான் ராகவன்.

"பார்த்து விட்டு உடனே உயிரை விட்டுவிட வேண்டும்! அப்புறம் உயிர் என்னத்திற்கு?" என்றான் சூரியா.

அவன் பரிகாசமாகச் சொல்கிறான் என்பதைத் தெரிந்துகொண்ட சீதா, "ஆமாம், அம்மாஞ்சி! தாஜ்மகாலைப் பார்த்த பிறகு உயிரோடிருப்பது அவசியமில்லைதான்!" என்றாள்.

"தீப ஒளியைப் பார்க்கிற விட்டில் பூச்சி அப்படித்தான் எண்ணிக் கொள்கிறது!" என்றான் சூரியா.

"என்னைப் பொறுத்த வரையில், இந்த மாதிரி ஒரு கட்டிடம் என்னைப் புதைக்கு மிடத்துக்கு மேலே கட்டுவதா யிருந்தால், நான் இங்கேயே இந்த நிமிஷமே உயிரைவிடத் தயார்!" என்றாள் நிருபமா.

"அப்படி ஏதாவது செய்து வைக்காதே! இப்போதெல்லாம் உயிரோடிருப்பவர்கள் வசிப்பதற்கு வீடு கட்டுவதே கஷ்டமா யிருக்கிறது. செத்துப் போனவர்களுக்கு எப்படிக் கட்டிடம் கட்ட முடியும்? நிச்சயமாக என்னால் முடியாது!" என்றார் நிருபமாவின் கணவர் வேணிபிரஸாத்.

"மிஸ்டர் பிரஸாத்! தங்களுடைய மனைவிதான் இம்மாதிரி முதல் முதலில் சொன்னார் என்பதில்லை. இதற்குமுன் இங்கு வந்து பார்த்த எத்தனையோ ஸ்திரீகள்—வெள்ளைக்கார துரைசானிமார்கள் உள்பட — இம்மாதிரியே சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் இதுவும் யோசனையின்றித்தான் சொல்லி யிருக்கிறார்கள். செத்துப் போனபிறகு உடம்பைச் சுடுகாட்டில் வைத்து எரித்தால் என்ன? அல்லது அதைப் புதைத்துத் தாஜ்மகால் போன்ற ஒரு கட்டடத்தை அதன் மேலே கட்டினால்

என்ன? இறந்தவர்களுக்கு எப்படிச் செய்தாலும் ஒன்றுதான்!'' என்று சூரியா சொன்னான்.

"சரியான பேச்சு! என்னுடைய கட்சியும் அதுதான். செத்துப்போன ஷாஜஹானுடைய ராணிக்கு இந்தத் தாஜ்மகால் கட்டிடத்தினால் யாதொரு பயனும் இல்லை. ஆனால் நம்மைப் போல் உயிரோடிருப்பவர்கள் எத்தனையோ பேர் இந்த அற்புதக் காட்சியைப் பார்த்து அநுபவிக்க முடிகிறது. உமர் கயாமின் கவிதை இந்தமாதிரி இடத்துக்குத்தான் பொருந்தும். **தங்குவதற்குத் தாஜ்மகால்: ஒரு கூஜா திராட்ச ரஸம்: ஒரு கவிதைப் புத்தகம்: என்னருகில் நீ: இதைக் காட்டிலும் வேறு சொர்க்கமும் உண்டோ?''** என்று கூறிச் சௌந்தர ராகவன் தாரிணியை உற்று நோக்கினான்.

"இத்தகைய மனோரதம் உங்களுக்கும் வேணி பிரஸாதுக்கும் நிறைவேற இடம் உண்டு. ஆனால் தாரிணியையும் மிஸ்டர் சூரியாவையும் போன்றவர்கள் என்ன செய்வது?'' என்று நிருபமா சொன்னாள்.

"அவரவர்களுக்கும் ஒருநாள் கலியாணம் நடந்துவிடுகிறது. சூரியா விஷயத்தில் கலியாணத்தைப் பற்றிக் கவலையேயில்லை. அவன் சம்மதிக்க வேண்டியதுதான்! மணப்பெண் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறாள்!'' என்றாள் சீதா.

"அத்தங்கா! உனக்கு எப்போதும் காதலும் கலியாணமுந்தான் நினைவு. காதலைத் தவிர உலகத்தில் வேறொன்றும் கிடையாதா?'' என்றான் சூரியா.

"சந்தேகம் என்ன? காதலைக் காட்டிலும் உலகத்தில் முக்கியமானது ஒன்றுமில்லைதான். கவிதைகள், காவியங்கள் எல்லாம் காதலை அடிப்படையாகக் கொண்டுதானே புனைகிறார்கள்? காதல் இல்லாவிட்டால் வால்மீகியின் ராமாயணம் ஏது? காளிதாஸனின் சாகுந்தலம் ஏது? ஷேக்ஸ்பியரின் நாடகம் ஏது? மற்றும் இந்த நாளில் நவீன ஆசிரியர்கள் நவ நவமாக எழுதி வெளியிடும் அற்புதமான நாவல்களைத்தான் அவர்கள் எப்படி எழுத முடியும்?'' என்றான் ராகவன்.

"ஆகா! உங்கள் நாவல்களைக் கொண்டு போய்க் குப்பையிலே போடுங்கள். வேறு ஒன்றும் விஷயம் இல்லாதவர்கள் காதற் கதைகள் எழுதுகிறார்கள். வேலையற்ற வீணர்கள் காதற் கவிதைகள் புனைகிறார்கள்!'' என்று சூரியா சொன்னான். நிமிஷத்துக்கு நிமிஷம் அவனுடைய உள்ளத்தில் ஆவேசமும் குரலில் ஆத்திரமும் பெருகிக் கொண்டிருந்தன.

"பின்னே எல்லாரும் காரல் மார்க்ஸைப் போலவே எழுத வேண்டும் என்கிறாயாக்கும்!'' என்று ராகவன் கேலியாகக் கேட்டான்.

"எல்லாரும் காரல் மார்க்ஸைப் போல் எழுத வேண்டாம்; எழுத முயன்றாலும் முடியாது; ஆனால் டால்ஸ்டாயைப் போல் எழுதட்டுமே? காந்தி மகானைப்போல் எழுதட்டுமே? ஜவாஹர்லால் நேருவைப்போல் எழுதட்டுமே? பெர்னார்ட் ஷாவைப் போல் எழுதட்டுமே?''

"அம்மாஞ்சி! பாரதியாரைப்போல் எழுதலாமா, கூடாதா? பாரதி, பாரதி என்று ஓயாமல் அடித்துக் கொள்வாயே? பாரதியார் காதலைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்? நினைவிருக்கிறதா?'' என்றாள் சீதா.

"பாரதியார் என்ன சொல்லியிருந்தால் இப்போது என்ன? அவர் சொன்னதெல்லாம் சரி என்று நான் ஒப்புக்கொள்ளவில்லையே? பாரதியாருக்கு அறிவு தெளிந்திருந்தபோது தேசத்தின் சுதந்திரத்தைப் பற்றிப் பாடினார். கொஞ்சம் மயக்கமாயிருந்த போது காதலைப் பற்றிப் பாடினார்!'' என்றான் சூரியா.

"இவர் பேசுவதைப் பார்த்தால் ஏதோ காதலில் ஏமாற்றமடைந்தவர் போலத் தோன்றுகிறது!'' என்று தாரிணி கூறிப் புன்னகை புரிந்தபோது அவளுடைய முல்லைப் பற்கள் நிலா வெளிச்சத்தில் முத்தைப்போல் பிரகாசித்தன. அவளுடைய முகபாவத்தில் அநுதாபம் காணப்பட்டது.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை'' என்று சொல்லிச் சூரியா வெட்கத்தினால் தலையைக் குனிந்து கொண்டான்.

"சூரியா இப்படித்தான் ஏதாவது எட்டிக்குப் போட்டியாகச் சொல்வான். அவனுடைய போக்கே ஒரு தனி. சீதா! பாரதியார் காதலைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்? அதைச் சொல்லு! நாங்கள் கேட்கிறோம்'' என்றான் ராகவன்.

"அன்பு வாழ்கென்ற அமைதியில் ஆடுவோம்!
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்!"

என்று மெல்லிய பொய்க் குரலில் பாடிக் காட்டினாள் சீதா.

"பாரதியார் நல்ல கவிஞர்போலத்தான் தோன்றுகிறது. இவ்வளவுதானா? காதலைப் பற்றி இன்னும் பாடியிருக்கிறாரா?" என்றான் ராகவன்.

"கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடுவோமடா!"

என்று சீதா முன் போலவே மெல்லிய குரலில் முனகி விட்டு, "இம்மாதிரி எத்தனையோ பாடல் பாரதியார் பாடியிருக்கிறார்!" என்றாள்.

"அந்தப் பாட்டை முழுவதும் பாடுங்கள்! கேட்க விருப்பமாயிருக்கிறது" என்றாள் தாரிணி.

"ஆம்; பாடுவதற்கேற்ற சமயம் இது. இவ்வளவு நேரம் வீண் பேச்சில் போய்விட்டது. சங்கோசப்படாமல் குரலை நன்றாக விட்டுப் பாடுங்கள்!" என்றாள் நிருபமா.

சீதா, ராகவனுடைய முகத்தைப் பார்த்தாள். "அபஸ்வரமில்லாமல் பாடுவதாயிருந்தால் பாடு!" என்றான் ராகவன். சங்கீதத்தில் பெரிய 'கிரிடிக்' ஸ்ரீ சௌந்தர ராகவன். சீதாவின் பாட்டு அவனுக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை.

ராகவனுடைய பதில் சீதாவுக்குக் கோபத்தை ஊட்டியது. ஆயினும் சமாளித்துக் கொண்டு, "அபஸ்வரமோ, ஸுஸ்வரமோ எனக்குத் தெரிந்தபடிதானே பாட முடியும்?" என்றாள்.

"எங்களுக்கு ஸுஸ்வரமும் தெரியாது; அபஸ்வரமும் தெரியாது. எல்லா ஸ்வரமும் எங்களுக்கு ஒன்றுதான். தைரியமாகப் பாடுங்கள்!" என்றாள் நிருபமா. பிறகு ராகவனைப் பார்த்து, "உங்களுக்குப் பிடிக்காவிட்டால் காதை அடைத்துக் கொள்ளுங்கள்!" என்றாள்.

"பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா!"

என்ற பாட்டைச் சீதா பாடினாள். பாடும்போது எல்லாரும் சீதாவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ராகவன் மட்டும் தாரிணியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். காதல் என்ற வார்த்தை வந்தபோதெல்லாம் அர்த்த புஷ்டியுடன் அவன் பார்த்த பார்வையைத் தாரிணி சிறிதும் கவனிக்கவில்லை.

பாட்டு முடிந்ததும், தாரிணியும் நிருபமாவும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். நிருபமாவுக்கும் அவளுடைய கணவனுக்கும் தாரிணி பாட்டின் கருத்தை விளக்கினாள்.

ராகவன், "இது என்ன பாட்டு, டா, டு, என்று? எனக்கு ஒன்றும் அவ்வளவாகப் பிடிக்கவில்லை" என்றான்.

"நீங்கள் சொல்வதுபோல் அவ்வளவு ஒன்றும் மோசமில்லை. இந்தப் பாட்டில் நல்ல கருத்துக்கள் பல இருக்கின்றன. ஆனால் காதலைப் பற்றி இவ்வளவு பிரமாதப்படுத்த வேண்டாம்.

'காற்றி லேறி அவ்விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே!'

என்பதெல்லாம் மிகைப்படுத்துவதில் சேர்ந்தது. காதற் பெண்கள் கடைக்கண்ணால் பணித்தால் என்ன வேணுமானாலும் செய்துவிடலாமாக்கும்! சுத்த அபத்தம்! இந்த மாதிரி காரியம் செய்தவர்களால்தான் இந்தியா தேசம் அடிமைப் பட்டுப் பாழாய்ப் போயிற்று, பிரிதிவிராஜனைப் போல! —அத்தங்கா! பாரதியாரின் தேசிய கீதம் ஒன்று பாடு!" என்றான் சூரியா.

"எனக்குத் தேசிய கீதம் ஒன்றும் தெரியாது. பாடினாலும் அபஸ்வரமாயிருக்கும்; டா, டு என்று கர்ணகடூரமாயிருக்கும்!" என்றாள் சீதா.

"தாரிணி! உனக்கு ஹிந்துஸ்தானியில் ஒரு தேசியகீதம் தெரியுமே! அதைப் பாடு!" என்றான் ராகவன்.

"ஆமாம், தாரிணி! 'ஸாரே ஜஹான்ஸெ அச்சா' என்ற கீதம் உனக்குத் தெரியுமே? அதைப் பாடு! கராச்சியிலிருந்து பம்பாய்க்குக் கப்பலில் போனபோது கடைசியாக நீ பாடிக் கேட்டது; அப்புறம் கேட்கவே இல்லை" என்றாள் நிருபமா.

தாரிணி சூரியாவின் முகத்தைப் பார்த்து "இவருக்குப் பாட்டு என்றால் பிடிக்கவே யில்லை. எதற்காக என்னைப் பாடச் சொல்கிறீர்கள்? அவர் காதைப் பொத்திக் கொள்ள வேண்டியதாயிருக்கும்!" என்றாள்.

"அவனுக்குப் பிடிக்காவிட்டாலும் மோசம் இல்லை. கேட்பதற்கு நாங்கள் இருக்கிறோம்" என்றான் ராகவன்.

"இல்லவே இல்லை. எனக்குத் தேசிய கீதங்களும் சுதந்திர கீதங்களும் ரொம்பப் பிடிக்கும்!" என்றான் சூரியா.

தாரிணி பாடினாள். இரவு நேரத்தில் சப்தம் செய்யும் பட்சிகளும் வண்டுகளும் காற்றும்கூட அடங்கி நின்றன. பூரண சந்திரன் தாஜ்மகால் மோகினியை ஒரு கணம் மறந்து தாரிணியின் கீதத்தில் கவனம் செலுத்தினான். நட்சத்திரங்கள் கண் கொட்டுவதைக் கூட நிறுத்தி ஆர்வத்தோடு கேட்டன. நிலா வெளிச்சத்தில் புகைப் படம் எடுக்க முயன்று கொண்டிருந்த ஒரு வெள்ளைக்காரரும் அவருடைய துரைசானியும்கூடத் தங்கள் காமிராவை மூடிவிட்டுக் காது கொடுத்துக் கேட்டனர்.

பாடி முடித்ததும் நிருபமாவும் அவளுடைய கணவரும் "அச்சா! பஹுத் அச்சா!" என்றார்கள்.

"பலே பேஷ்!" என்றான் சூரியா.

"பாடினால் இப்படிப் பாட வேண்டும்; இல்லாவிட்டால் சும்மா இருக்க வேண்டும்" என்றான் ராகவன்.





சீதாவின் உள்ளம் புண்பட்டது என்பதைச் சூரியா கவனித்தான். அவளைப் பார்த்து, "அத்தங்கா! நீ கூட இந்தப் பாட்டைக் கற்றுக் கொள்ளலாம். இதன் அர்த்தம் என்ன தெரியுமா? 'உலகில் உள்ள எல்லாத் தேசங்களிலும் சிறந்தது நம்முடைய ஹிந்துஸ்தானம்' என்பது முதல் வரியின் கருத்து" என்றான்.

"அதற்குக்கூட சந்தேகமா? உலகத்திலெல்லாம் மிகச் சிறந்த தேசம் நம் இந்தியா தேசந்தான். அதை நிரூபிக்க இந்தத் தாஜ்மகால் ஒன்று போதுமே?" என்றாள் சீதா.

"நீ சொல்வது தப்பு. இந்தியாவின் மகிமை தாஜ்மகாலினால் ஏற்படவில்லை. இமய மலையினாலும் கங்கை நதியினாலும் புத்தராலும் அசோகராலும் சிவாஜியினாலும் ஜான்ஸி ராணியினாலும் இந்தியாவுக்கு மகிமை ஏற்பட்டது" என்றான் சூரியா.

"இமய மலையையும் கங்கை நதியையும் போல் வேறு தேசங்களில் மலையும் நதியும் இருக்கின்றன. ஆனால் தாஜ்மகாலைப் போன்ற ஒரு கட்டிடம் கிடையாது. ஆகையால் இந்தியா தாஜ்மகாலினாலேதான் பெருமையடைந்திருக்கிறது" என்று சொன்னான் ராகவன்.

"இந்தப் பெருமை இந்தியாவுக்கு வேண்டாம் என்று நான் நினைக்கிறேன்" என்றான் சூரியா.

"உலகத்தின் ஒன்பதாவது அதிசயம் உனக்குமட்டும் அதிசயமாயில்லையாக்கும்!" என்றான் ராகவன்.

"மிஸ்டர் சூரியாவுக்கு அதிசயமாயில்லா விட்டால் உலகம் அஸ்தமித்து விடாது. இந்தத் தாஜ்மகால் கட்டிடத்திலும் இந்தியாவின் மகிமை விளங்குகிறது; சீதாதேவி கூறுவது போல், சலனமில்லாத காதலின் பெருமையும் இதன்மூலம் வெளியாகிறது!" என்றார் பிரஸாத்.

"ஆ! நீங்கள் கூடக் காதலைப் புகழ ஆரம்பித்து விட்டீர்களா?" என்று சூரியா அருவருப்பு நிறைந்த குரலில் கேட்டான்.

"நீங்கள் ஏன் காதல் என்றால் கரிக்கிறீர்கள்? இந்தத் தெய்வீக அழகு வாய்ந்த தாஜ்மகால் ஷாஜஹானுடைய காதலிலிருந்துதானே உற்பவித்தது?" என்று நிருபமா கூறினாள்.

"அம்மணி! தயவு செய்து கேளுங்கள். ஷாஜஹானுடைய காதலிலிருந்து இந்தத் தாஜ்மகால் கட்டிடம் பிறக்கவில்லை. பாதுஷா ஷாஜஹானுடைய கொடுங்கோன்மையிலிருந்து பிறந்தது. அந்தக் கொடுங்கோன்மை அவனுடைய மகன் அவுரங்கஜீப்புக்கே பொறுக்கவில்லை. அதற்காக அவன் தன் சொந்தத் தகப்பனைச் சிறையில் அடைத்து வைத்தான்."

"ஆ! அவுரங்கஜீப் கலை உணர்ச்சி என்பது அறவே இல்லாதவன். அவனுடைய உதாரணம் யாருக்கு வேண்டும்? அவுரங்கஜீப் கொடுங்கோலன் என்பது சரித்திரப் பிரசித்தமானது. ஷாஜஹான் எப்படிக் கொடுங்கோலனாவான்? அவன் ரொம்ப நல்லவன் என்று சரித்திரம் சொல்கிறதே!"

"ஆமாம்; நல்லவன்தான். ரொம்ப ரொம்ப நல்லவன். ஆனால் அந்த ஒரு நல்லவனுடைய தற்பெருமைக்காக எத்தனை ஜனங்கள் கஷ்டப்பட வேண்டியிருந்தது, தெரியுமா? இந்தத் தாஜ்மகாலைக் கட்டி முடிக்க இருபது வருஷம் ஆயிற்று என்று உங்களுக்குத் தெரியுமா? இருபதாயிரம் தொழிலாளிகள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ இரவுபகல் பாடு பட்டார்கள் என்று தெரியுமா? மக்களைக் கசக்கிப் பிழிந்து வசூலித்த வரிப்பணத்தில் கோடா கோடி ரூபாய் செலவழிந்தது என்பது தெரியுமா? ஒரு தனி மனிதனுடைய தற்பெருமைக்காக இருக்கட்டும்; அல்லது அவனுடைய அதிசயமான காதலுக்காகவே இருக்கட்டும்; இருபதினாயிரம் பேர் இருபது வருஷம் உழைத்து உழைத்து உயிர் விட வேண்டுமா? இதை ஒருநாளும் நான் ஒப்புக்கொள்ள முடியாது. எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் நான் என்ன செய்வேன் தெரியுமா?" என்று ஆங்காரத்துடன் கூறிச் சூரியா மூச்சு விடுவதற்காக நிறுத்தினான்.

"உமக்கு அதிகாரம் இருந்தால் என்ன செய்வீர்?" என்று தாரிணி புன்னகை புரிந்தவண்ணம் கேட்டாள்.

சூரியாவின் ஆத்திரமும் ஆங்காரமும் அங்கிருந்த எல்லாருக்குமே விநோதமாக இருந்தது. அவர்களுடைய உள்ளத்தில் மறைந்திருந்த பரிகாச உணர்ச்சி குபீரென்ற சிரிப்புடன் வெளியாவதற்குத் தயாராகக் காத்திருந்தது. ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. யாரும் எதிர்பாராத சம்பவம் ஒன்று அப்போது நிகழ்ந்துவிட்டது.

அன்று மாலை தாஜ்மகால் வாசலில் இருந்த விளையாட்டுச் சாமான் கடையில் சீதா ஒரு பளிங்குக் கல் 'மாடல்' தாஜ்மகாலை வாங்கியிருந்தாள். அது சூரியாவின் பக்கத்தில் இருந்தது. சூரியா அதைக் கையில் எடுத்துக் கொண்டான். "ஆயிரம் பதினாயிரம் மக்களைக் கொடுமைப் படுத்தி ஒரு மூட அரசன் தன்னுடைய தற்பெருமைக்காகக் கட்டிய இந்தத் தாஜ்மகாலை, எனக்கு அதிகாரமிருந்தால், இந்த நிமிஷமே இடித்துத் தள்ளிச் சுக்கு நூறாக்குவேன்!" என்று இரைந்து கத்திய வண்ணம் கையில் எடுத்திருந்த தாஜ்மகால் பொம்மையை வீசி எறிந்தான். எறிந்த தாஜ்மகால் பொம்மை தாரிணியை நோக்கிச் சென்றது! அவளுடைய தலையிலோ முகத்திலோ அது விழப்போகிறது என்ற பயத்தினால், பார்த்திருந்தவர்கள் எல்லாரும் "ஆஹா!" என்றார்கள். தாரிணியும் திடுக்கிட்டுச் சிறிது தன் தலையைப் பின் வாங்கிக் கொண்டாள். நல்ல வேளையாக, எறியப்பட்ட தாஜ்மகால் தாரிணியின் மேல் விழாமல் பக்கத்தில் விழுந்தது; விழுந்த வேகத்தில் சுக்குநூறாயிற்று. உடைந்த பகுதி ஒன்று எகிறிக் கிளம்பிச் சென்று தாரிணியின் நெற்றியில் தாக்கியது.

மூன் கூந்தலுக்குக் கீழே காயம்பட்டு இரத்தம் கசியத் தொடங்கியது. தாரிணியின் தந்த நிற நெற்றியி லிருந்து கசிந்த இரத்தத் துளியை வெண்ணிலவின் கிரணம் தழுவி அதை ஜோதி மயமான நாகரத்தினம் போலத் திகழச் செய்தது.

தாஜ் மகால் தாரிணியின் மேல் விழாமல் கீழே விழுந்ததினால் பயம் நீங்கப் பெற்றவர்களை இந்த விபரீதம் மீண்டும் திடுக்கிடச் செய்தது. சூரியாவைத் தவிர மற்றவர்கள் "ஆஹா!" என்று சத்த மிட்டுக் கொண்டு தாரிணியைச் சூழ்ந்து கொண்டார்கள். முதலில் அவளை அணுகிச் சென்று நெற்றியில் கையை வைத்து இரத்தத்தை நிறுத்த முயன்ற வன் ராகவன்தான். நிருபமா பலாத்காரமாக அவனுடைய கையை அப்புறப்படுத்தி விட்டுத் தன்னுடைய கைக் குட்டையினால் காயம் பட்ட இடத்தில் கட்டினாள்.

மற்றவர்களைப் போலவே கவலை யுடன் தாரிணியின் அருகில் சென்ற சீதா, ராகவனுடைய செய்கையைப் பார்த்து நெஞ்சிலே அம்பு பாய்ந்த வளைப் போன்ற வேதனையடைந்தாள்.

சிறிது நேரம் தாரிணியைச் சுற்றி ஒரே அல்லோல கல்லோலமாயிருந் தது. சிறிது நேரத்துக்குப் பிறகு அமைதி ஏற்பட்டது. எல்லாரும் அவரவர்களுடைய இடத்தில் உட் கார்ந்தார்கள்.

வேணிப் பிரஸாத் ராகவனைப் பார்த்து "உங்கள் சிநேகிதர் வெறும் முரடர் போலிருக்கிறதே!" என்றார்.

"திடீரென்று ஏதோ ஆவேசம் வந்துவிட்டது!" என்றாள் நிருபமா.

"சுத்த இடியட்! செய்ததற்காக மன்னிப்புக்கூடக் கேட்டுக் கொள்ளா மல் தூரத்திலேயே உட்கார்ந்திருக் கிறான்!" என்றான் ராகவன்.

"இந்தச் சின்ன விஷயத்துக்கு இவ்வளவு எதற்காக தடபுடல் படுத்துகிறீர்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை!" என்றாள் தாரிணி.

"நல்ல வேளை, நெற்றியில் பட்ட தோடு போயிற்று! ஒரு வேளை கண் ணிலே பட்டிருந்தால் என்ன ஆகும்?" என்றான் ராகவன்.

"அதுதான் படவில்லையே? பின் எதற்காக இந்தப் பேச்சு! நீங்கள் எல்லாரும் சும்மா இருந்தாலே எனக் குப் பெரிய உதவியாயிருக்கும்!" என்று தாரிணி கூறினாள்.

சீதா மட்டும் மௌனமாயிருந் தாள். அவளுடைய உள்ளத்தில் ஒரு பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருந் தது. அதன் காரணம் என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை. ஒரு சிறு கடுகத்தனை காயம் நெற்றியில் ஏற் பட்டதற்கு இவ்வளவு உபசாரமா, இவ்வளவு தடபுடலா என்று ஒரு கணம் நினைத்தாள். 'இவளுக்கு நன்றாக வேண்டும்! காயம் இன்னும் கொஞ்சம் பெரிதாகப் பட்டிருக்கக் கூடாதா?" என்று மறு கணம் நினைத்தாள். 'இந்தக் காயம் நமக் குப் பட்டிருக்கக் கூடாதா? நம்மை யும் இப்படி எல்லாரும் சூழ்ந்து கொண்டு உபசாரம் செய்வார்கள் அல்லவா?' என்ற எண்ணமும் ஒரு பக்கத்தில் இருந்தது. 'பாவம்! சூரியா என்ன செய்வான்? தவறிப் பட்டதற்கு அவன் பேரில் இவ்வளவு எரிந்து விழுகிறார்களே?' என்று அநு தாபப் பட்டாள். 'இந்த உலகத்தி லேயே நம்மிடம் உண்மையான அபி மானம் உள்ளவன் சூரியா ஒருவன் தான். முன்னே யெல்லாம் அவனை நாம் கண்டபடி பரிகாசம் செய்து அவ மானப்படுத்தினோமே? என்ன முட் டாள் தனம்?' என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள். தன்னுடைய அநுதாபத்தைப் பார்வையின் மூலம் தெரியப்படுத்த எண்ணிச் சூரியாவை அடிக்கடி நோக்கினாள்.


ஆனால் அவனோ ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனை யில் மூழ்கி யிருந்தான்.

தாஜ்மகால் நொறுங்கித் தாரிணிக் குக் காயம் பட்ட சம்பவத்துக்குப் பிறகு பேச்சு ஒன்றும் அவ்வளவாகச் சுவாரஸ்யப்படவில்லை.

"போதும் இன்றைக்குத் தாஜ் மகால் பார்த்த இலட்சணம்; ஓட்ட லுக்குத் திரும்பிப் போகலாமே?" என்றாள் சீதா.

"சரி" என்று சொல்லி எல்லாரும் உடனே எழுந்தார்கள்.

ஓட்டலுக்குச் சென்றதும் சூரியா தன் சாமான்களை எடுத்துக் கொண்டு அவசரமாக டில்லிக்குப் போக வேண் டும் என்று சொல்லிவிட்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டான்.



45. அன்னையின் மன உறுதி

தென்னாப்பிரிக்காவில் காந்தி மகான் உலகம் வியக்குமாறு சத்தியாக்கிரஹ இயக்கம் தொடங்கி நடத்திய வரலாற்றைத் தொடங்குவதற்கு முன்னால் அவரது குடும்ப வாழ்க்கை சம்பந்தமான இன்னும் ஒரு முக்கிய சம்பவத்தைச் சொல்லிவிட வேண்டும். அன்னை கஸ்தூரி பாய் எத்தகைய மன உறுதி படைத்தவர் என்பதை இந்தச் சம்பவம் நன்கு விளக்குவதாகும்.

கஸ்தூரி பாய்க்கு ஒரு சமயம் அடிக்கடி இரத்த நஷ்டம் ஏற்பட்டு அதனால் உடல் நலம் குன்றியிருந்தது. இரண சிகிச்சை செய்துகொள்ள வேண்டும் என்று வைத்தியர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். டர்பனில் ஒரு பிரபல வைத்தியரின் சிகிச்சைச் சாலையில் இரண சிகிச்சை நடந்தது. உடல் மெலிவு காரணமாக மயக்க மருந்து கொடாமலே சிகிச்சை செய்யவேண்டியிருந்தது. இதனால் ஏற்பட்ட பெருந் துன்பத்தை அன்னை கஸ்தூரிபாய் ஆச்சரியமான தைரியத்துடன் சகித்துக்கொண்டார். சிகிச்சை செய்த டாக்டரும், தாதியாகப் பணி செய்த அவருடைய மனைவியும் கஸ்தூரிபாயை நன்கு கவனித்துக் கொண்டார்கள். இனி ஒன்றும் கவலை இல்லை என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு கஸ்தூரிபாயை மேற்படி வைத்தியரின் வசத்தில் விட்டு விட்டு மகாத்மா ஜோகானிஸ்பர்க் சென்றார்.

ஆனால் சில தினங்களுக்கெல்லாம் கவலைக்கிடமான செய்தி வந்தது. கஸ்தூரிபாய் மிக்க பலவீனமடைந்து படுக்கையில் எழுந்து உட்காரவும் முடியாத நிலையையடைந்திருக்கிறார் என்று தெரிந்தது. வைத்தியம் பார்த்த டாக்டர் டெலிபோனில் காந்திஜியைக் கூப்பிட்டு "நிலைமை நெருக்கடியாயிருக்கிறது. நோயாளிக்கு மாட்டிறைச்சி ரஸம் உடனே கொடுத்தால் பிழைப்பார். அதற்குத் தங்கள் அநுமதி வேண்டும்" என்றார். மது மாமிசங்களைப் பற்றி மகாத்மாவின் கடுமையான கொள்கை தெரிந்திருந்தபடியால் டாக்டர் இந்த அநுமதி கேட்டார். மகாத்மாவோ, "நான் அத்தகைய அநுமதி கொடுக்க முடியாது. கஸ்தூரி பாயையே கேளுங்கள். அவள் சிந்தித்துப் பதில் சொல்லக்கூடிய நிலையில் இருந்தால் அவள் விருப்பம்போல் செய்யுங்கள்!" என்றார். "அதெல்லாம் முடியாது. நோயாளியிடம் அபிப்பிராயம் கேட்பது தவறு. என் இஷ்டப்படி உணவு கொடுக்கக் கூடாது என்றால் நோயாளியின் உயிருக்கு நான் பொறுப்பாளியல்ல. உடனே தாங்கள் புறப்பட்டு வந்து பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும்" என்றார் டாக்டர்.

காந்திஜி அடுத்த ரயிலில் புறப்பட்டு டர்பனுக்குப் போனார். டாக்டரைப் பார்த்ததும் "கஸ்தூரிபாய் விரும்பினாலன்றி அவளுக்கு மாட்டிறைச்சி ரஸம் கொடுக்க நான் ஒரு நாளும் சம்மதியேன். அதனால் உயிருக்கு அபாயம் வருவதாயிருந்தாலும் சரிதான்!" என்று உறுதியாகச் சொன்னார்.

"அப்படியானால் உம் மனைவியை இங்கிருந்து அகற்றிக்கொண்டு போய்விடும். அவர் என் வீட்டில் மரணமடைவதை நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!" என்றார் டாக்டர்.

"உடனே அகற்றிவிட வேண்டும் என்கிறீர்களா?" என்று மகாத்மா கேட்டார்.

டாக்டர் கோபத்துடன், "இது என்ன கேள்வி? அகற்றிவிட வேண்டும் என்று எப்போது சொன்னேன்? சிகிச்சை விஷயத்தில் எனக்குப் பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்றுதானே கேட்கிறேன்? அப்படிக் கொடுத்தால் நானும் என் மனைவியும் கூடியதையெல்லாம் செய்யத் தயாராயிருக்கிறோம். இந்தச் சின்ன விஷயத்தை உம்மால் அறிந்துகொள்ள முடியவில்லையே!" என்றார்.

நயத்தினாலும் பயத்தினாலும் டாக்டர் கூறியது ஒன்றும் மகாத்மாவிடம் பலிக்கவில்லை. அவர் உடனே கஸ்தூரி பாய் அம்மையிடம் சென்றார். மிகப் பலவீன முற்ற நிலையில் இருந்தபோதிலும் அவரிடம் கேட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்து டாக்டரின் கருத்தைத் தெரிவித்தார். டாக்டருக்கும் தமக்கும் நடந்த சம்பாஷணை விவரத்தையும் கூறினார்.

அன்னை கஸ்தூரிபாய் உறுதியான குரலில் பதில் சொன்னதாவது. "மாட்டிறைச்சி ரசம் எனக்கு வேண்டாம். ஒரு நாளும் சாப்பிட மாட்டேன். மானிட ஜன்மம் கிடைத்தல் அரிது. அப்படிக் கிடைத்த ஜன்மத்தை இம்மாதிரி காரியத்தினால் அசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமா? கூடவே கூடாது. அதைக் காட்டிலும் தங்கள் மடியில் படுத்து நிம்மதியாய் உயிரை விடுவேன். இந்தச் சமயத்தில் நீங்கள் வந்து சேர்ந்தீர்களே, அதுவே எனக்குப் போதும்."

காந்திஜி கொஞ்சம் வாதம் செய்து பார்த்தார். இது விஷயத்தில் தம்முடைய அபிப்பிராயத்துக்காகக் கஸ்தூரிபாய் தீர்மானம் செய்யக்கூடாது என்று எடுத்துச் சொன்னார். வைதிக ஹிந்துக்களில் சிலர் சிகிச்சையை முன்னிட்டு மது மாமிசம் அருந்தியிருப்பதை உதாரணமாக எடுத்துக் காட்டினார். அதெல்லாம் கஸ்தூரி பாயின் மன உறுதியை அசைக்கவில்லை. "முடியாது. முடியாது. என்னை இந்த இடத்திலிருந்து உடனே அப்புறப்படுத்துங்கள். இங்கே இருக்கவே நான் விரும்பவில்லை" என்றார்.

கஸ்தூரிபாயின் தைரியம் மகாத்மாவுக்கு மிக்க மகிழ்ச்சி தந்தது. ஆயினும் பொறுப்பின் பாரம் அதிகமாயிற்று. கஸ்தூரிபாயின் கருத்தை டாக்டரிடம் கூறியபோது அவர் மேலும் கடுமையாகப் பேசினார்.

"எத்தகைய ஈவிரக்கமற்ற மனிதர் நீர்? நோயாளியிடம் இதைப் பற்றிக் கேட்க உமக்கு வெட்கமாயில்லையா? அப்புறப் படுத்தக்கூடிய நிலையில் உம் மனைவி இல்லை. ஒரு வேளை வழியிலேயே மரண மடைந்தாலும் அடையலாம். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். என் கடமை தீர்ந்தது. அப்புறம் உம் இஷ்டப்படி செய்துகொள்ளும்!" என்றார் டாக்டர்.

கஸ்தூரி பாய் அம்மையை எப்படியாவது காப்பாற்ற விரும்பிய இந்த வெள்ளைக்கார டாக்டரை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. "அவர் சொன்னபடி இந்த காந்திஜி கேட்டால்தான் என்ன?" என்று நமக்குத் தோன்றுவதும் இயல்புதான். "ஆபத்துக்குப் பாவமில்லை" என்ற பழ

ஓட்டடா ரதத்தை!

பாரதியார் புதுவையில் அஞ்ஞாதவாசம் செய்துகொண்டிருந்தபோது, ஒரு நாள் மனக்கவலையாலோ அல்லது வேறு ஏதோ காரணத்தாலோ, பகல் முழுவதும் சாப்பிடவே இல்லை. அன்று மாலை ஸ்டேஷனுக்குப் போவதற்காக அவர் ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு புறப்பட்டார். அப்போது திடீரென்று ஒரு கிழவி வண்டியை நிறுத்தி, "பாரதி, இந்தா, இதைச் சாப்பிடு!" என்று அவருடைய கையில் ஏதோ ஒரு பொருளைக் கொடுத்தாள். சிந்தனையில் ஆழ்ந்திருந்த பாரதியார் திடீரென்று விழித்து அந்தக் கிழவியையும் அவள் கொடுத்த பொருளையும் பார்த்தார். அவருடைய முகம் மலர்ந்தது.

அந்தக் கிழவிக்குத் தொழில் தெருவில் சுண்டல் விற்பது. அவளுக்குப் பாரதியாரிடம் எப்படியோ ஒரு வகையான பெருமதிப்பும் பேரன்பும் இருந்து வந்தது. அழுக்குச் சேலை உடுத்திக்கொண்டு, பார்ப்பதற்குச் சற்று விகாரமாயிருந்த அந்தக் கிழவி அன்புடன் வழங்கிய சுண்டலையும் பாரதியார் ஆவலாக உண்டார். "அமிர்தம்!" "அமிர்தம்!" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் ஒரு முறை வாங்கி வயிறு நிறையத் தின்றார். பிறகு திருப்தியுடன் வண்டிக்காரனைப் பார்த்து, கம்பீரமாக "தம்பி, ஓட்டடா ரதத்தை!" என்றார்.

கிழவி அன்புடன் கொடுத்த அந்தச் சுண்டல் கவிஞர் பாரதியாருக்கு அமிர்தம் போல இருந்தது. அமிர்தம் உண்ட அந்தப் புலவர் பெருமானுக்குப் புதுவை நகரம் தெய்வலோகம் போலவும், தாம் ஏறிவந்த சாதாரண வண்டி 'ரத'மாகவும் தோன்றியதிலே வியப்பு இல்லை அல்லவா?

பாரதியார் வாக்கு

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கி யிருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்ய மில்லை; நாளை வரப்போவது ஸத்யம்; மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுதிலும் பரவா விட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்!

•

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழர்களாகிய நாம் சிகரம்போல விளங்குகிறோம்.

•

எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்க முண்டு. இவற்றிலே தமிழைப் போல் வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமே யில்லை.

மொழியின் மேல் பாரத்தைப் போடவும் நம்மில் பலர் தயாராயிருப்போம்.

ஆனால் காந்தி மகானுடைய மனப்போக்கும் கஸ்தூரிபாயின் பிடிவாதமும் வேறு விதமாயிருந்தன. "உயிர் போனாலும் கொள்கையைக் கைவிடக் கூடாது" என்பதில் அவர்கள் இருவரும் உறுதி கொண்டிருந்தார்கள். அதைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பதில் ஒருவரை ஒருவர் மிஞ்சப் பார்த்தார்கள். ஆகவே உடனே அங்கிருந்து புறப்பட்டுப் போனிக்ஸ் ஆசிரமத்துக்குப் போகத் தீர்மானித்தார்கள்.

அப்போது சிறு தூற்றல் தூறிக் கொண்டிருந்தது. காந்திஜி ஒரு ரிக்ஷா வண்டி கொண்டு வந்தார். அதில் கஸ்தூரி பாயை ஏற்றி ரயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார். மிக்க அபாயமான காரியம் என்ற எண்ணத்தினால் காந்திஜியின் நெஞ்சம் பட படத்தது. கஸ்தூரி பாய்க்குத் தைரியம் சொல்லக் கூடிய நிலைமையில் அவர் இல்லை. அதற்கு மாறாகக் கஸ்தூரி பாய் "எனக்கு ஒன்றும் நேராது; கவலைப் படாதீர்கள்!" என்று காந்திஜிக்கு அடிக்கடி ஆறுதல் சொல்லிக் கொண்டு வந்தார்.

பல நாளாக உணவு அருந்தாதபடியால் கஸ்தூரிபாய் உடல் மெலிந்து எலும்புந் தோலுமா யிருந்தார். நடப்பது என்பது முடியாத காரியம். ரிக்ஷாவை ரயில்வே பிளாட்பாரத்துக்குள் கொண்டுபோக முடியாது. எனவே காந்திஜி தம் கரங்களினால் கஸ்தூரிபாயை ரிக்ஷா வண்டியிலிருந்து எடுத்துப் பிளாட்பாரத்துக்குள் தூக்கிக் கொண்டு போய் ரயில் வண்டியில் கிடத்தினார். ரயிலும் புறப்பட்டது.

போனிக்ஸ் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆசிரமம் இரண்டரை மைல் தூரத்தில் இருந்தது. முன்னாடியே ஆள் அனுப்பியிருந்தால் மிஸ்டர் பெஸ்ட் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார். வலைப் பல்லக்கும் சூடான பாலும் வெந்நீரும் கொண்டு வந்திருந்தார். வலைப் பல்லக்கைத் தூக்க ஆறு ஆட்களும் வந்திருந்தார்கள். ஆசிரமத்துக்குப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

ஆசிரமம் சென்ற பிறகு காந்திஜி கஸ்தூரி பாய்க்கு ஜல சிகிச்சை செய்தார். உடம்பு சிறிது சிறிதாகத் தேறி வந்தது. ஜல சிகிச்சையைக் காட்டிலும் கஸ்தூரிபாயின் மன உறுதியே அவர் உடம்பு தேறுவதற்குக் காரணமாயிருந்தது.

இந்தச் சமயத்தில் காவி உடை தரித்த இந்தியச் சாமியார் ஒருவர் வந்து சேர்ந்தார். டர்பனில் நடந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டுக் காந்திஜியின் மனதையும் கஸ்தூரி பாயின் மனதையும் திருப்புவதற்காக அவர் வந்தார். புலால் உண்பதில் தவறு இல்லையென்று ஸ்தாபிதம் செய்ய ஆரம்பித்தார். மனுதர்ம சாஸ்திரத்திலிருந்து மேற்கோள்களும் சொன்னார். காந்திஜியின் புதல்வர்கள் மணிலாலும் ராமதாஸும் அங்கே அச்சமயம் இருந்தார்கள். சாமியாருடைய வாதங்களை யெல்லாம் அவர்களே தவிடு பொடி செய்து விட்டார்கள். கஸ்தூரி பாயிடமும் சாமியார் வாதம் செய்து பார்த்தார். கஸ்தூரிபாய் ஒரே பேச்சில் சாமியாரின் வாயடக்கச் செய்துவிட்டார்:—

"சுவாமி! தாங்கள் என்ன சொன்னாலும் என் விஷயத்தில் பிரயோஜனப் படாது. சாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறதோ எனக்குத் தெரியாது. ஆனால் ஜீவ ஹிம்சை கூடாது என்று எனக்குத் தெரியும். இறைச்சி உணவு கூடாது என்பதும் எனக்குத் தெரியும். என் விரதத்தைக் கைவிட்டாவது உயிர் வாழ்ந்திருக்க எனக்கு விருப்பமில்லை. ஆகையால் என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்!"

போலிச் சாமியார் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போய்ச் சேர்ந்தார். அன்னை கஸ்தூரிபாயின் தேக நிலையும் வர வர அபிவிருத்தி யடைந்து வந்தது.

கவிதைச்



★ ★ ★ கவியரசர் பாரதியாரின் அருமையான பாடல்களிலிருந்து நமது சித்திரக் கலைஞர் ஓவியக் கண்கொண்டு பார்த்துத் தீட்டியது.

'ஒன்று பரம்பொருள்; நாமதன் மக்கள்;
உலகின்பக் கேணி' யென்றே — மிக
நன்று பல் வேதம் வரைந்த கை பாரத
நாயகி தன் திருக்கை

●

நீல முடிதரித்த பல மலைசேர் நாடு
நீரமுதமெனப் பாய்ந்து நிரப்பு நாடு
கோலமுறுபயன் மரங்கள் செழித்துவாழும்
குளிர்காவுஞ் சோலைகளுங் குலவு நாடு

●

ஆய்தம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்

★

சித்திரங்கள்





சுற்றி நில்லாதே போ பகையே
துள்ளி வருகுது வேல்

•

பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே !
பரத நாட்டியக் கூத்திடு வீரே !


•

வெள்ளிப் பனிமலையின்மீ துலவுவோம்—அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்

•

காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கை கொடுத்து
மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி.

★



ஒண்டுக் குடித்தனம்

[ரா. வீழிநாதன்]

பகவத்கீதையிலே பன்னிரண்டாவது அத்தியாயத்தில் பகவான் பக்தனது லட்சணங்களைக் கூறும்போது, "ஹே பார்த்த! குந்தி புத்திரனே! என் பக்தன் அநிகேதனாகவும் [அநிகேதன என்ற வடமொழிச் சொல்லுக்கு வீடு இல்லாதவன் என்று பொருள்] மனஸ் திருப்தி என்பதையே பூஷணமாகக் கொண்டவனாகவும் இருக்கிறான்" என்று கூறுகிறார். அவருடைய பக்தன் உண்மையில் எப்படி இருந்தான் அல்லது இருக்கிறான் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் பகவான் பக்தனைப் பற்றிக் கூறிய அந்த லட்சணங்கள் எல்லாம் இந்தக் காலத்தில் எவரிடமாவது இருக்கிறதா என்று கேட்டால், 'இருக்கிறது. ஒண்டுக் குடித்தனக்காரர்களிடம் பூரணமாக இருக்கிறது' என்று தயங்காமல் கூறலாம். பகவானுடைய பக்தனுக்கென்று தனி வீடு கிடையாது. அதே போல ஒண்டுக் குடித்தனக்காரனுக்கும் தனக்கென்று ஒரு சொந்த வீடு கிடையாது. அப்படியிருந்தால், 'ஒண்டுக் குடித்தனக்காரன் என்ற பட்டப் பெயர் அவனுக்கு ஏன் கிட்டப் போகிறது? வீடோ, அறையோ, கூரைக் குச்சிலோ, அல்லது மாட்டுக் கொட்டிலோ ஏது கிடைத்தாலும் போதுமானது என்று மனத் திருப்திப் படுகிறவர்கள் ஒண்டுக் குடித்தனக்காரர்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? வீடு சின்னதாகவோ, பெரிதாகவோ, சந்திலோ பொந்திலோ எங்கிருந்தாலும் சரி, காற்று நுழையக் கூடியதாக இருந்தாலும் சரி, காற்றே பிரவேசிக்க முடியாத இடமாக இருந்தாலும் சரி, தண்ணீர் வசதி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, வீடு என்று பெயருக்குக் கிடைத்துவிட்டால் மோட்ச



சாம்ராஜ்யத்தையே கண்டு பிடித்துவிட்ட பக்தனைப்போலப் பரவசமுறும் கலை ஒண்டுக் குடித்தனக்காரர் ஒருவருக்கு மட்டும்தான் தெரியும்.

அப்படிப்பட்ட, பக்தர்களுக்கும் மேலே போன ஒண்டுக் குடித்தனக்காரர்கள்— பொறுமையையே பூஷணமாகக்கொண்ட அப்பாவிப் பிராணிகள் வீட்டுக்குச் சொந்தக்காரர்களின் கையில் மாட்டிக்கொண்டு படும் அவஸ்தையை...... அப்பப்பா!...... சொல்லி முடியாது.

உலகத்தில் பல விதமான துஷ்டர்கள் இருக்கிறார்கள், அல்லவா! அவர்களில் முதல் தாம்பூலம் பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் இந்த வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் தாம்.

ஐயா! நான் வசிக்கும் வீட்டுக்குச் சொந்தக்காரரே! உம்மைச் சொல்லவில்லை. நீர்தான் ரொம்பத் தங்கமான மனிதராயிற்றே! எனக்குத் தெரியாதா? அப்படி உம்மைச் சொல்லிவிட்டு, நான் இந்த வீட்டில் அரை நிமிஷம் இருந்து விட முடியுமா? உம்மைச் சொல்லவில்லை. நீர் வித்தியாசமாக எடுத்துக் கொண்டு விடாதேயும்!

இப்பொழுதெல்லாம் வருஷம் தப்பினாலும் தப்பலாம்; வீட்டு வாடகை உயர்வது மட்டும் தப்புவதில்லை. ஒண்டுக் குடித்தனக்காரரின் சம்பளம் உயர்ந்தாலும் சரி, உயரா விட்டாலும் சரி; போனஸ் கிடைத்தாலும் சரி, கிடைக்கா விட்டாலும் சரி; வருஷா வருஷம் வாடகை மட்டும் 'ஆட்டோமாட்டிக் இன்கிரிமென்'டைப் போல உயர்ந்துவிடுகிறது. இப்பொழுதெல்லாம் 'ஆட்டோமாட்டிக் இன்கிரிமெண்ட்' கூட சில சமயம் கிடைக்காமல் தங்கி விடுகிறது. அதுபோல 'இந்த வருஷம் உமக்கு வாடகை உயர்வு இல்லை' என்று எந்த வீட்டுக்காரனும் சொல்லிப் பார்த்ததில்லை.

ஆனால் குப்பையில் மாணிக்கத்தைப் போலவோ, அசுர குலத்தில் பிரஹலாதனைப் போலவோ ஜெனரல் டயரின் சாதியில் தீனபந்து ஆண்ட்ரூஸைப் போலவோ வீட்டுக்குச் சொந்தக்காரர்களிலும் எத்தனையோ நல்லவர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள்! சந்தேகமில்லை.

'பாவம்! வீடே கிடைக்கவில்லையென் கிறீர்களே! எவ்வளவு காட்கள்தான் ஸார், இப்படி ஹோட்டலில் சோற்றைத் தின்றுகொண்டு நடியும் குடித்தனமும் இல்லாமல் இருப்பது? உங்கள் நிலைமைக்கு இரங்கி என் சௌகரியங்களை விட்டுக் கொடுத்துப் போனால் போகிறது என்று உங்களுக்கு இந்தக் கார் ஷெட்டையும் அந்த 'பாத்ரூமை'யும் தருகிறேன். வாடகை முப்பத்தேழு ரூபாய்தான். ஒரு வருஷத்து வாடகையை அட்வான்ஸாகக் கொடுத்து விடவேண்டும். ஆனால் அதற்கு ரசீது தரமுடியாது! மாதாமாதம் முதல் தேதியன்று வாடகை மட்டும் தவறாமல் கொடுத்துவிட வேண்டும்' என்று கண்டிப்பான மனமிரக்கத்துடன் எத்தனையோ வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் வாடகைக்கு விடவில்லையா?

ஏன், நானும் என் வீட்டுக்காரருக்குத் 'திருப்பி வராத கடன்' கொடுத்திருக்கிறேன்! பம்பாயில் 'பக்டி' என்றால் சென்னைக்கு ஒரு 'சலுகை' வேண்டாமா?

இன்னும் சில வீட்டுக்காரர்கள் இருக்கிறார்களே! இவர்களை 'ரிட்ரென்ச்மெண்ட் ஸ்கீமு'க்கு ஆலோசகராகக்கூட நியமிக்கலாம்.

இந்த 'ரிட்ரென்ச்மெண்ட் ஸ்கீமுக்கு' யாரோ ஒரு அரைகுறைப் பேர்வழி ஆள் குறைப்புத் திட்டம் என்று அனர்த்தம் செய்துவிட்டான். உண்மையில் பார்க்கப் போனால் ஒரு பக்கம் பழைய ஆட்களைத் தள்ளுவதும் புதிய ஆட்களை எடுத்துக் கொள்ளுவதுமாகத்தான் இருக்கிறது! ஆகையால் 'பழையன கழித்தல் புதியனப் புகுத்தல் திட்டம்' என்ற பெயர்தான் இதற்குப் பொருத்தமானது.

திடீரென்று ஒரு நாள் இவர்கள் வந்து "சுவாமி, என் பெண் பிரசவத்துக்கு வரப்போகிறாள். ஆகையால் எனக்கு இடம் வேண்டும்" என்றோ, அல்லது "என் மாப்பிள்ளைக்கு இந்த ஊரில் மாற்றல் ஆகிவிட்டது" என்றோ சொல்லி ஒரு பெரிய வெடி குண்டைப் போடுவார்கள். இதெல்லாம் எதற்காக என்கிறீர்கள்? வாடகையை இரட்டிப்பாக்குவதற்குத்தான்! புதியவர் குடி வந்தால் புது வாடகைத் திட்டத்தை அமல் நடத்தலாமே என்ற சபலம்!

குடித்தனக்காரர் ஒரு மாதமோ இரண்டு மாதமோ தவணை கேட்பார். தவணை கேட்டு என்ன பிரயோசனம்? இந்தச் சென்னைப் பட்டணத்தில் வீடு கிடைத்துவிடுவது அவ்வளவு சுலபமா, என்ன? கிடைக்காது. கிடைக்கவே கிடைக்காது. ஒண்டுக் குடித்தனக்காரன்



அந்த மாதம் காலி செய்வதாக மேலும் தவணை கேட்டுத்தான் ஆகவேண்டும்!

அதற்குள் வீட்டுக்காரருக்கு ஆத்திரம் பொறுக்காது. அடுத்த நாள் தண்ணீர் சப்ளைக்குத் தலை வலிக்கும். அதற்கடுத்த நாள் மின்சார விளக்கு உள்ள வீடாக இருந்தால், அந்த மின்சார சப்ளைமீது மின்னலும் இடியும் விழும். சில தினங்களுக்குள் தகராறு வலுத்துத் தடியடி வரை கொண்டுபோய் விடும்.

ஒண்டுக் குடித்தனக்காரருக்கு அந்தக் கஷ்டம் மட்டும்தானா? ரேஷன் ஆபீஸில் போய் விஷயத்தை விவரமாகச் சொல்லி அதிகப்படி மண்ணெண்ணெய் கேட்டால் இலேசில் கொடுத்து விடுவார்களா? மாட்டவே மாட்டார்கள். 'உம் வீட்டில் தான் எலெக்ட்ரிக் லைட் இருக்கிறதே! உமக்கு மண்ணெண்ணெய் அதிகப்படிக் கொடுக்கச் சட்டம் இடம் கொடுக்கவில்லையே' என்று திட்டமாக மறுத்து விடுவார்கள்!

வீட்டுச் சொந்தக்காரருக்கு ஒண்டுக் குடித்தனக்காரரை விரட்டவா வழி தெரியாது? விடாக்கண்டராக நின்று கோர்ட் டேறி எவிக்ஷன் ஆர்டர் — அதுதான் ஐயா, வீட்டை விட்டுத் துரத்துவதற்கு உத்தரவு, வாங்கி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார்! வீட்டுக்காரரிடம் குடித்தனக்காரரின் ஜம்பம் சாயவே சாயாது.

"ஏன் ஐயா, வீட்டுக்குச் சொந்தக்காரர்கள்மீது மட்டும் வீண் பழி சுமத்துகிறீர்கள்? ஒண்டுக் குடித்தனக்காரர்கள் மட்டும் இளேகப் பட்டவர்களோ?" என்று என் வீட்டுக்குச் சொந்தக்காரர் கேட்பது காதில் விழுகிறது. குடித்தனக்காரர்களிலும் எத்தனையோ பேர் ஆண்டுால் பிறந்த ராசியில் ஜெனரல் டயரைப்

போல இருக்கத்தான் செய்கிறார்கள். மேலே கொடுத்த உதாரணங்களெல்லாம் அப்படியே தலைகீழாகத் திருப்பி வாசித்தால், இவர்கள் விஷயத்தில் பொருந்தும்.

வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் பகீரதப் பிரயத்தனப் பட்டு, குடித்தனக்காரரைக் கிளப்ப வாங்கிவரும் எவிக்ஷன் ஆர்டரை ஒரே நிமிஷத்தில் மாற்றியமைக்கும் வல்லமை எத்தனையோ குடித்தனக்காரர்களுக்கு உண்டு. கல்லுப் பிள்ளையார் போல அசையாமல் வீட்டில் இருக்க வழி தேடிக் கொண்டு விடுபவர்களும், வீட்டுக்காரர்களின் கண்களில் விரலை விட்டு ஆட்டிப் படாதபாடு படுத்திவைப்பவர்களுமான சில குடித்தனக்காரர்கள் இந்த உலகத்தில் இல்லாமல் போகவில்லை. வீட்டுக்காரர்கள் தடுக்கில் புகுந்தால், கோலத்தில் புகும் எத்தனையோ வாடகைக்காரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!

என் வீட்டுக்குச் சொந்தக்காரர் இருக்கிறாரே! அவர் ரொம்ப ரொம்ப நல்லவர். எனக்கு முன்னால் குடியிருந்தவன் காரணமாக அவர் ஏறாத கோர்ட்டெல்லாம் ஏற நேர்ந்ததாம். நேற்று முழுவதும் என்னிடம் அதைப் பற்றித்தான் கதை கதையாகச் சொல்லி அழுதார். நேற்று அவர் "குடியிருப்பவர்களின் சௌகரியா சௌகரியங்களைக் கவனிக்க வேண்டியது வீட்டுக்குச் சொந்தக்காரரின் கடமை. அதேபோல குடியிருப்பவரும் நடந்து கொள்ள வேண்டும்" என்று சொன்னார். அவர் சொல்லுவதில் தப்பென்ன இருக்கிறது? நியாயத்தைத்தானே சொல்லுகிறார். என்ன இருந்தாலும் என் வீட்டுச் சொந்தக்காரரைப் போன்ற தங்கமான குணம் படைத்தவர் இடையவே இடையாது.

* * *

"ஸார், தபால்!"

நான் தபாலை வாங்குவதற்காக வாசலில் வந்தேன். ஒரு ரிஜிஸ்தர் வந்திருந்தது. வீட்டுக்காரரின் கையெழுத்துப் போலிருந்தது. வாங்கிப் பிரித்துப் படித்தேன். அட கர்மமே! இதென்ன கூத்து? ஒரு மாதத்துக்குள் இந்த வீட்டை நான் காலி செய்துவிட வேண்டுமாமே!

நேற்றுக் காலையில்கூட மனுஷன் நன்றாகத்தானே பேசிக்கொண்டிருந்தார். ஒரு வேளை மூளை-கீளை கலங்கிவிட்டதோ! சேச்சே! அப்படியெல்லாம் இராது. மனிதர் எமகாதகர்! 'உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்று தெரியாமலா பட்டினத்தார் சொன்னார்!

இருக்கட்டும்! இந்த மனுஷ்யரை ஒரு கை பார்க்காமல் நான் விடப்போவதில்லை. என்னை இந்த வீட்டை விட்டு இவர் தாத்தா வந்தாலும் வெளியேற்ற முடியாது!

ஓய், வீட்டுக்காரரே! என்னை இலேசுப்பட்டவன் என்று நினைக்காதீர்! உமக்கும் பெப்பே! உம்முடைய தாத்தாவுக்கும் பெப்பே! ஜாக்கிரதை!

மூன்று தேசத்து வீரர்கள்

ஒரு அமெரிக்கப் போர் வீரனும், ஒரு பிரெஞ்சுப் போர் வீரனும் ஒரு ஸ்காட்லாந்து தேசத்துப் போர் வீரனும் சென்ற யுத்தத்தின்போது, ஒருநாள் இரவு ஒரு பொது இடத்தில் தங்கவேண்டி யிருந்தது. அப்பொழுது அந்த மூன்று வீரர்களையும் பார்த்து ஒருவர் ஒரு கேள்வி கேட்டார்.

"நீங்கள் இன்று இரவு தூங்கிவிட்டு பொழுது விடிந்து எழுந்திருக்கும்போது, ஆளுக்கு ஒரு கோடிப் பவுன் கிடைத்தால் அதை என்ன செய்வீர்கள்?"

அமெரிக்க வீரன் "நான் உடனே எங்கள் தாய்நாட்டுக்குச் சென்று பெரிய வியாபாரத் துறையில் இறங்குவேன்" என்றான்.

பிரஞ்சு தேசத்து வீரன் "நான் எங்கள் பாரீஸ் நகரத்துக்குச் சென்று விளையாட்டிலும் கேளிக்கைகளிலும் ஈடுபடுவேன்" என்றான்.

ஸ்காட்லாந்து தேசத்துப் போர் வீரன், "நான் அவர்களைப்போல் செய்ய மாட்டேன்; அதற்குப் பதிலாக இந்த இடத்திலேயே தூங்க ஆரம்பித்து விடுவேன்" என்றான்.

கேள்வியைக் கேட்ட மனிதருக்கு இந்தப் பதிலைக் கேட்டதும் ஒன்றும் புரியவில்லை.

"ஏன்?" என்று கேட்டார்.

"இன்னொரு தடவை தூங்கி எழுந்திருந்தால், இன்னொரு கோடிப் பவுன் கிடைக்குமா என்று பார்க்கத்தான்!" என்றான் ஸ்காட்லாந்து தேசத்து வீரன்.

சோதனைக் காலம் ஆரம்பமாகியது!

ரஜனி

இலங்கை, ஆகஸ்டு, 26உ

எதிர்பார்த்தது நடந்து விட்டது. இலங்கை இந்தியர்களின் கடுமையான சோதனைக் காலமும் ஆரம்பித்து விட்டது. இன்னும் எவ்வளவு காலம் இலங்கையி லிருக்க அனுமதிக்கப்போகிறார்கள்? ஊராவில் இந்தியாவுக்குப் போனால் இலங்கைக்குத் திரும்ப முடியுமா? கடை கண்ணிகளையும் வரவாக வேண்டிய பணங்களையும் என்ன செய்வது? இதுதான் இலங்கை இந்தியரிடையே எங்கு பார்த்தாலும் பேச்சாக இருக்கிறது. இந்தியர்களின் தொழில்களும் வியாபாரங்களும் இந்த நிச்சயமற்ற நிலைமையில் ஸ்தம்பித்து விட்டன.

இலங்கைப் பிரஜா உரிமை மசோதாவும் குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாடு மசோதாவும் இலங்கைப் பார்லிமெண்டில் 18 அதிக ஓட்டுகளினால் நிறைவேறி விட்டன. இனி அவை செனட் சபையில் நிறைவேறுவதும், கவர்னர் ஜனரலின் சம்மதத்தைப் பெற்றுச் சட்டமாகப் பிரகடனம் செய்யப்படுவதும் சம்பிரதாய பூர்வமான நடவடிக்கைகள்தான்.

மசோதாக்களை நிறுத்தி வைப்பதற்கு நடந்த முயற்சிகளொன்றும் வெற்றி பெறவில்லை. நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவர்களுக்குப் பிரஜா உரிமையை மறுக்கும் அநியாயம் எந்தத் தேசத்திலாவது உண்டா? காடும் மேடுமாகக் கிடந்த இடங்களைப் பொன் கொழிக்கும் தோட்டங்களாக மாற்றிய இந்தியத் தொழிலாளரை இப்படி விரட்டுவது பெரிய அக்கிரமம் என்று எதிர்க்கட்சியினர் எடுத்துக் காட்டினர். இப்பொழுது இந்தியா பலவீனமாயிருந்தாலும், அடுத்த பத்துப் பதினைந்து வருடங்களுக்குள் பராக்கிரமம் பொருந்திய வல்லரசாகப் போகும் இந்தியாவின் விரோதத்தை விலை கொடுத்து வாங்குவது இலங்கையின் நல்ல காலத்திற்கல்லவென்று அறிஞர் ஸ்ரீ நிசங்கா அழுத்தமாக எச்சரித்தார். வர்க்க பேதம் காட்டிய ஹிட்லர் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனதை போல்ஷிவிக் மெம்பர் டாக்டர் கோல்வின் ஆர். டி. ஸில்வா பிரதம மந்திரிக்குச் சுட்டிக் காட்டி, "ஏன் உங்களுக்கு இந்த வக்கிர புத்தி? ஹிட்லர், ஸ்மட்ஸ், மாலன் கோஷ்டியில் நாங்கள் சேரும் விபரீதம் வேண்டாம்" என்று மன்றாடினார். தர்மத்தின் பெயரையும் புத்த பகவானின் பெயரையும் சொல்லி முறையிட்டனர் இந்தியப் பிரதிநிதிகள்.

மந்திரிகளின் பதட்டம்

இந்த விவாதங்களுக்கு மந்திரிகள் அளித்த கண்ணியமற்ற பதில்கள் அவர்களுக்குப் பெருமை அளிக்கக் கூடியவையல்ல. மேற்படி பதில்களை இந்தியா ஹைகமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரியும் காலரியில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்.



ஸ்ரீ பொன்னம்பலம்

"இந்தியர்கள் இலங்கைக்குத் தேவையில்லையென்றால் அவர்களைத் திருப்பியழைத்துக் கொள்ள இந்தியா தயாராயிருக்கிறது. நாற்பது கோடி ஜனங்கள் வசிக்கும் இந்தியாவில் சுமார் ஆறு, ஏழு லட்சம் இந்தியர்களுக்கு இடமில்லாமற் போகவில்லை" என்று பண்டித நேரு 1939-ம் வருடம் இலங்கைக்கு வந்தபொழுது சொன்னாராம். ஸ்தல ஸ்தா

பண மந்திரி ஸ்ரீ பண்டார நாயகா இதை எடுத்துச் சொல்லி, "எல்லா இந்தியர்களும் வேண்டுமானால் கூட மூட்டை முடிச்சுகளுடன் இந்தியாவுக்கு இப்பொழுதே திரும்பிப் போய்விடட்டும். இந்தியத் தொழிலாளரில்லாமல் ரப்பர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்துகொள்ள நமக்குத் தெரியும்" என்று தள்ளினார். இப்பொழுது இவ்வளவு வீராப்புப் பேசுகிறவர்கள் ஆரம்பத்தில் இந்தியர்களில்லாமலே தோட்டங்களை உண்டாக்கிக் கொள்ளுவதற்கென்ன?

சுருக்கமாகச் சொல்லப் போனால் "தேவைப்பட்டபொழுது இந்தியர்களை அழைத்தோம்; கூலி கொடுத்து வேலை வாங்கிக் கொண்டோம். இப்பொழுது இந்தியர்கள் தேவையில்லை. ஆகையால் விரட்டியடிக்கிறோம். கூலியாட்களை சப்ளை செய்யும் ஒரு தொழிலாளர் டிப்போ தான் இந்தியா!" என்ற தோரணையிலேயே மந்திரிகளின் பேச்சு இருந்தது. பிரஸ்தாப சட்டங்களைப் பற்றி இந்தியா என்ன நினைத்துக் கொண்ட போதிலும் அதைப்பற்றி யாரும் கவலைப்படப் போவதில்லை யென்றும் ஒரு மந்திரி பச்சையாகச் சொன்னார்.

பார்லிமெண்டில் சர்க்கார் கட்சிக்கு மெஜாரிட்டி பலமிருப்பதால் மேற்படி மசோதாக்கள் நிறைவேறி விடுவது நிச்சயம் என்பதை உணர்ந்து மந்திரிகள் நாவடக்கத்துடன் கண்ணியமாகப் பேசியிருக்கலாம். மசோதாக்கள் நிறைவேறியதும் மந்திரிகளின் பேச்சுக்கள் சிங்களவர்களிடையே மேலும் வகுப்புத் துவேஷ வெறியைக் கிளப்புவதாக இருக்கின்றன. அவர்கள் இந்தியர்களைக் கண்டால் ஏளனம் செய்வதும், "எப்போது கப்பலேறுகிறாய்?" என்று கிண்டல் செய்வதும் இப்போது சகஜமாகி விட்டது. இனி இந்திய அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

தமிழர்களுக்குத் துரோகமா?

இலங்கையில் இன்னொரு பெரிய விசேஷம் நடந்திருப்பதையும் இக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும். சிங்கள கருப்பு வாதிகளின் முதல் நம்பர் எதிரியாயிருந்த தமிழ் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் ஸ்ரீ சேனநாயகாவின் அத்யந்த நண்பராகி விட்டார். சில மாதங்களுக்கு முன் ஸ்ரீ பொன்னம்பலத்துக்கு கே. ஸி. பட்டம் கிடைத்த வைபவத்தைக் கொண்டாடுவதற்காக ஸ்ரீ சேனநாயகாவையும் மற்ற மந்திரிகளையும் வீட்டுக்கழைத்து அவர் விருந்து வைத்தார். சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தி மந்திரி சபையில் தமிழர் காங்கிரஸ் சேரத் தீர்மானித்து விட்டதை அவர் அறிவித்துக் கூட்டத்தினரின் சம்மதத்தையும் பெற்றார்.


ஆரம்ப முதல் இந்தியாவின் கோரிக்கைகளைத் தமிழர் காங்கிரஸ் ஆதரித்து வந்திருக்கிறது. ஆகையால் இந்தியர்களைப் பாதிக்கும் மசோதாக்களை ஆதரித்துத் தமிழர் காங்கிரஸ் பார்லிமெண்டு மெம்பர்கள் ஓட்டுக் கொடுப்பதற்கில்லை. இதை உத்தேசித்தே இந்த மசோதாக்கள் நிறைவேறியவுடன் மந்திரி சபையில் சேரத் தீர்மானித்திருப்பதை ஸ்ரீ பொன்னம்பலம் வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீ பொன்னம்பலத்தின் தீர்மானம் தமிழர் காங்கிரஸிலும் தமிழரிடையிலும் ஒரு பெரிய பிளவை உண்டு பண்ணியிருக்கிறது. ஏழு லட்சம் இந்தியர்களை இந்த நாட்டில் அந்நியர்களாக்கும் மசோதாக்கள் நிறைவேறிய சமயம் பார்த்து மந்திரி சபையில் சேர ஸ்ரீ பொன்னம்பலம் தீர்மானித்தது தமிழ்ச் சமூகத்துக்கே செய்த பெரிய துரோகம் என்று கண்டித்துத் தமிழர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி டாக்டர் நாகநாதன் தமிழ் காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சியிலிருந்து விலகிவிட்டார்.

• • • • • • தமிழ் நாட்டின் விழிப்பு! • • • • • •

பூமண்டல முழுதிலும் பெரிய விழிப்பொன்று வரப் போகிறது. அதற்காதாரமாக ஹிந்துஸ்தானம் கண்ணை விழித்து இருபதாண்டுகளாயின. ஹிந்துஸ்தானத்துக்குள் தமிழ்நாடு முதலாவது கண் விழித்தது. ஆனால், இன்னும் புத்தி சரியாகத் தெளியாமல் கண்ணை விழிப்பதும் கொட்டாவி விடுவதுமாக இருக்கிறது'

— பாரதியார் திருவாக்கு



அஸ்தமன வேளை; அந்தி வானம் விசித்திரத்திற்கு ஒரு நிறம் காட்டி ஜால வித்தை செய்து கொண்டிருந்தது. வீட்டின் மொட்டைமாடியில் உட்கார்ந்து, ஒரே தரிசு நிலம் போல் தோன்றிய என் கடந்த கால வாழ்க்கையை எண்ணிச் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தேன். நொந்த புண்ணில் கோலிட்டு வதைப்பதைப் போல், தனது வழக்கமான பல்லவியை ஒப்புவிக்க வந்து சேர்ந்தாள் என் தாயார்.

"ஏண்டா, ராஜு! எத்தனை நாளைக்குத் தான் இப்படியே யோசனை பண்ணிண்டிருக்கப் போறே? நீயும் முடியப்போறது! உன்னைப் போல, ஆம்படையாளைச் சாகக் கொடுத்தவா ளெல்லாம் மறு கல்யாணமே பண்ணிக்கிறதில்லையா, என்ன? அப்படித் தான் அவள் உன்னை எண்ணத்திலே சந்தோஷமாய் வெச்சிட்டா, உயிரோடே இருக்கிறப்போ? காலம் முழுதும் சண்டையும் கூப்பாடும்தான் மிச்சம்! ருக்மிணியைக் கல்யாணம் பண்ணிக்கிறதிலே உனக்கு என்ன கஷ்டமாம்—கேட்கிறேன்? குணத்திலே குறைச்சலா, இல்லே, லக்ஷணத்திலே தான் குறைஞ்சவளா? நன்னு, மகாலக்ஷ்மியாட்டம் இருக்கா! அவ சமத்துக்கு, உன்னையும் உன் பிள்ளையையும் நன்னு கவனிச்சிக்குவா. நீயும்தான் பார்த்துண்டிருக்கயே, உன் குழந்தைமேலே அவளுக்கு எவ்வளவு ஆசை தெரியுமா? தேமேன்னு அவளைக் கட்டிண்டு, சமத்தா யிருக்கலாம்" என்று என் தாயார் சொல்லிக் கொண்டே போனபோது, 'மனித சுபாவத்திற்கும் விசித்திரத்திற்கு ஒரு மாற்று நிறம் காட்டும் இந்த அந்தி வானத்திற்கும் என்ன வித்தியாசம்?' என்றுதான் எண்ணத் தோன்றிற்று எனக்கு.

நல்ல வேளை, அவளுடைய 'தொண தொணப்'புக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் சிரமம் எனக்கு ஏற்படாதபடி திண்ணையிலிருந்த என் அப்பா அவளைக் கூப்பிட்டு விட்டார்.

முன்பெல்லாம் — என் விவாகத்திற்கு முன்பு—ருக்குவின்மேல் எரிச்சலும் இரிச்சலுமாக நின்று, நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளவே கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த என் தாயார், இப்போது அவளைச் சதா புகழ்வதும், அவளை இரண்டாம் தாரமாக மணந்து கொள்ளும்படி என்னை நச்சரிப்பதுமாக இருந்தாள்.

அம்மா சொன்னதுபோல், ருக்மிணி பதவிசுதான்; நல்ல முக வசீகரமும் படைத்தவள். என் ஒரு வயதுக் குழந்தை சந்துருவின் மேல் அவள் தன் உயிரையே வைத்திருந்தாள். நானும் இந்த ஒரு மாத

காலமாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்—எங்கள் ஊர் பெண் பாட சாலை யொன்றில் உபாத்தியாயினியாக இருக்கும் அவள், காலையில் வகுப்புக்குப் போகுமுன்பும் சரி, மாலையில் வகுப்பு முடிந்து வந்த பின்பும் சரி, சந்துருவும் கையுமாகவே யிருக்கிறாள்! — இந்த அன்பும், ஆர்வமும் சந்துருவின் மேல் எங் கிருந்துதான் வந்ததோ, அவளுக்கு?

* * *

அப்பா ஒரு 'ஹைஸ்கூல் ரைட்டர்.' மாதம் அறுபது ரூபாய்தான் சம்பளம். சம்பளத்தைத் தவிர ஆஸ்தி எதுவுமில்லை. அதிர்ஷ்டவசமாக எனக்குப் பின் வேறு குழந்தைகள் கிடையாது. ஒரு மூத்த சகோதரி மட்டும் எனக்கு இருந்தாள். சுக ஜீவனம் என்று சொல்ல முடியாது.

ருக்மிணி எங்கள் குடும்பத்தில் ஒரு அங்கமாக வந்து ஒட்டிக் கொள்ளும்போது எனக்குப் பத்து வயதிருக்கும். அவள் எங்கள் அப்பாவுடன் பிறந்த ஒரே தங்கை யின் புதல்வி. இந்த வயதில் தாயை இழந்தவுடனேயே அவளுடைய தந்தை அவளை எங்களிடம் ஒப்படைத்து விட்டார். அடுத்த சில மாதங்களில் விஷ ஜுரம் கண்டு அவரும் தன் மனைவியைப் பின் பற்றிப் போய் விட்டார். அவர் இறக்கும் போது என் அத்தையின் நகைகளையும், தான் மீத்து வைத்திருந்த ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகமான பணத்தையும் மகளின் பராமரிப்புக்காக என் தந்தையிடம் ஒப்புவித்துச் சென்றார்.

அப்பாவுடைய வர்க்க மென்றாலே, அம்மா வுக்கு வேப்பங்காய்தான். ஆயினும், சுமார் ஐம்பது சவரன் தங்க நகைகளும், ஐயா யிரத்துக்கு மேற்பட்ட பணமும் ருக்குவின் சம்ரக்ஷணைக்காகக் கிடைத்தவுடனே, முத லில் யாதொரு முணு முணுப்பு மில்லாமலே ருக்குவை என் தாயார் ஏற்றுக் கொண்டாள்.

அம்மாவுடன் பிறந்த மூத்த சகோதரர் ஒருவர் சென்னையில் உயர்ந்த பதவியில் இருந்தார். அவர் பெண் கொண்ட இடம் மிகவும் செல்வாக் குள்ள குடும்பம். அவ ருக்கு ஒன்றன் பின் ஒன்றாக மூன்று பெண்கள். ஒவ்வொருத்திக்கும் பத்தாயிரம் ரூபாய் வீதம் பாங்கியில் ஒதுக்கி வைக்கப்பட் டிருந்தது. சொந்த பங்களா, கார், வேலைக் காரர்கள் எல்லாம் உண்டு. தன் அண்ணா வைப் பற்றி என் தாயார் பெருமை யடித் துக்கொள்ளுவதற்குக் கேட்கவா வேண்டும்?


ருக்கு எங்களிடம் வந்து சேரும் சமயத் தில் என் சகோதரி விவாகப் பருவத்தை நெருங்கி யிருந்தாள். நல்ல வரன் அகப் படாமலும், ஒன்றிரண்டு பொருத்தமான இடங்கள் தென்பட்டாலும், அவர்கள் விரும்பும் நகை, வரதக்ஷிணை கொடுக்க இயலாமலும் என் பெற்றோர் உழன்று கொண்டிருந்தனர். இந்த இக்கட்டான நிலைமையில் ருக்கு வந்து சேரவே, அவ ளுடைய தந்தை அவளின் பராமரிப்புக் காகக் கொடுத்துச் சென்ற நகைகள் அம்மா வின் கண்களை உறுத்தின. அவைகளில் உருப்படியானவற்றைத் தன் மகளுக்குப் போட்டு ஒரு நல்ல இடத்தில் அவளைச் சம்பந்தம் செய்து வைத்துவிட வேண்டும் என்பது என் தாயாரின் எண்ணம்.

அப்பாவுக்கு இப்படிச் செய்வதில் சம் மதமே யில்லையானாலும், அம்மாவின் பிடி வாதத்திற்குமுன் அவர் கட்சி பலிக்கவில்லை. முடிவில், சுமார் முப்பது சவரனுக்கதிகமான ருக்குவின் உடைமைகள் என் தமக்கையின் நல்வாழ்விற்குப் பலியாயின. ருக்கு அந்த வயதுச் சிறுமி; தன் உடைமைகள் பறி போவதை அவள் அறிவாளா, பாவம்!

அப்பா, ருக்குவைத் தன் சொந்த மகள் போலவே பாவித்து என்னிலும் பன் மடங்கு அவளிடம் அன்பு செலுத்தினார். சுய நலத்திலேயே ஊறித் தடித்த என் தாயாருக்கு இது பிடிக்குமா? அப்பா அவளை அதிகமாய் நேசிக்க நேசிக்க, அம்மா வுக்கு அவள்மேல் ஆத் திரம் அதிகரித்தது.



ருக்கு இளமை முதற் கொண்டே புத்திசாலி யாக விளங்கினாள். சாமர்த்தியமாக படித்து, அத்தையின் அன்பைப் பெறத் தன்னால் இயன்றதை முயன்றாள். எல்லாவதான் முயன் றென்ன? வயதிற்கதிக மான புத்தி நுட்பமும், குடிகையும் தன்னுடைய



சாத்வியின் பெண்ணிடம் காணப்படுவதைக் கண்ட என் தாயாருக்கு அவள் மேல் அசூயைதான் ஏற்பட்டது. என்னே, மனித சுபாவம்! தன் பெண்ணிடத்தில் அதே நற்குணங்கள் அமைந்திருந்தால் பெருமிதம் அடையும் உள்ளம், அதே குணங்கள் அடுத்தவள் பெண்ணிடத்தில் காணப்படும் போது புழுங்கி வேதனை யடைகிறது!

2

வருஷங்கள் கடந்தன. ருக்கு மூன்றாவது பாரம் தேறினாள். நானும் 'இண்டர்மீடியேட்' பரீக்ஷையில் வெற்றி பெற்றேன். என் படிப்பை அத்துடன் நிறுத்திவிட்டு, ருக்குவை ஹைஸ்கூலில் சேர்த்தார், அப்பா. அவளைப் படிக்க வைப்பதில் என் தாயாருக்கு அணுவளவேனும் சம்மதம் கிடையாது. அவளை நிறுத்திவிட்டு என்னை பி. ஏ.க்குப் படிக்க அனுப்பும்படி அடிக்கடி தூண்டுவாள். ஆனால், அப்பா விட்டுக் கொடுக்கவில்லை; முன்பு நகை விஷயமாய் என் தாயார் செய்த அநீதிக்குப் பிராயச்சித்தமாகவோ என்னவோ, ஒரே பிடிவாதமாய் ருக்குவைப் பத்தாம் வகுப்பு வரை படிக்க வைத்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டார்.

ருக்குவின் தந்தை கொடுத்துச் சென்ற பணத்தில்தான் அவளுடைய கல்விக்கான செலவுகள் நடந்தன. இதில் அம்மாவுக்கு என்ன சங்கடம்? அப்பணத்தை வேறும் தன் குடும்ப சௌகரியங்களுக்காகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்ற கெட்ட எண்ணம் அவளுக்கு ஏன் உதிக்கவேண்டும்? இந்தப் பெண்களின் பேராசைக்கு ஓர் எல்லையே இல்லை போலும்?

எனக்கும் மேலே படிக்கவேண்டுமென்று ஆசைதான். ஆயினும், என் ஆசையை நிறைவேற்ற அப்பாவுக்குச் சக்தியில்லை என்பதை அறிந்து உத்தியோக வேட்டையில் இறங்கினேன். ஒவ்வொரு துறையாக முற்றுகை யிட்டேன் — குமாஸ்தா பதவிக்குத்தான். எத்தனையோ 'பி. ஏ., பி. காம்'களையும், 'எம். ஏ., எம். எஸ்ஸி'க்களையும், 'ஐ. டி. ஏ., ஆர். ஏ'க்களையும் கால்கோக அலைந்துக் களைகண்ட கம்பெனி மானேஜர்களுக்கு, தொழிலுக் கென்று விசேஷப் படிப்பு எதுவுமில்லாத வெறும் இண்டர்'களை வேலைக் கமர்த்திக் கொள்ளப் பைத்தியமா, என்ன?

ஆசையுடைய கோர [illegible]யெல்லாம் தலையில் ஏற்றுக் கொண்ட பெருமையுடன் சாயங்காலம் வீடு வந்து சேர்வதைத் தவிர வேறொரு பலனும் கிட்டவில்லை. இதனால் மனம் வெதும்பி, என்னை மேல் படிப்புக்கு அனுப்பத் திறமை யில்லாததற்காகச் சில வேளைகளில் அப்பாவிடம் குறைப்பட்டுக் கொள்ளுவேன். மேல் படிப்பில் எனக்குள்ள ஆர்வத்தையும், நான் கல்வி கற்றுக் கொள்வதில் அம்மா வுக்கிருந்த மனப் புழுக்கத்தையும் அறிந்த ருக்கு, "நான் என்ன, படித்து உத்தியோகம் பண்ணப் போறேனா, மாமா? வீணாய் எனக்கு ஏன் பணத்தைக் கொட்டறேள்? அத்தை சொல்றதும் நியாயந் தானே! அந்தப் பணத்தை வெச்சு அத்தானை பி. ஏ.க்குப் படிக்க வெச்சாலும் புண்ணியமுண்டு. அவர் ஆண்பிள்ளை. அதை விட்டுவிட்டு என்னைக் கட்டி அழறேளே! என் பணத்திலே அத்தானைக் காலேஜுக்கு அனுப்பிச்சு வைங்கோ மாமா, அடுத்த வருஷம்!" என்று அடிக்கடி அப்பாவை நச்சரிப்பாள். அப்பா பிடிவாதமாய் மறுத்து விடுவார். இதற்கிடையில் அவளும் எஸ். எஸ். எல். ஸி. தேறி, உபாத்தினித் தொழிலுக்குப் படிக்க ஆரம்பித்தாள்.

என் பெற்றோருக்குள் சகஜமாய் நடக்கும் வாக்குவாதங்களின் மூலம், தன் நகைகளில் பெரும் பகுதியை இழந்ததற்கு என் தாயார்தான் காரணமாக இருந்தாள் என்பதை அவள் அறிவாள். ஆயினும் அதற்காக அவள் கொஞ்சமும் கவலைப்பட வில்லை. "மன்னிக்கு ஒரு நல்ல இடம் கிடைக்கட்டும், அதுவே போதும், மாமா! அதுக்கு ஏன் சும்மா அத்தையை இடித்துக் காட்டறேள்? இவ்வளவு காலமும் நான் உங்கள் ஆதரவில் இருக்கலையா!" என்று

அத்தைக்காகப் பரிந்து பேசித் தன் மாமாவை அன்பாகக் கடிந்து கொள்ளுவான்.

இத்தகைய உயரிய குணங்கள் அமைந்த அவன் சில வருஷங்களுக்கு முன்பே என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதில் வியப்பேதுமில்லை. அழகிலும் அவன் கொஞ்சமும் குறைந்தவனல்ல. என் இளம் உள்ளத்தில் பொங்கி எழும் காதற் பெருக்கை, அவன் செவிகளில் பாய்ச்சி, அவனுடன் உல்லாசமாகப் பேசிச் சிரித்துக் காலங் கழிக்க என் உள்ளம் தனியாய்த் தவிக்கும். அவனும் பரஸ்பரம் என்னை நேசிக்கிறான் என்பதை அவனுடைய அன்பின் செயல்களால் அனுமானித்துக் கொண்டேன். ஆயினும் அவனுடைய காதல் மொழிகளை என் காதுகள் கேட்டுப் பரவசமடைய வில்லையே என்று ஏக்கம் அடைவேன். நாங்கள் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசிக் கொள்ளலாமென்றால்தான் அதற்கு என் தாயார் இடையூறாக நிற்கிறாளே!

3.

மூன்று வருட விடா முயற்சியின் பயனாக, ஒரு பெரியவரின் பேரில் ஒரு பாங்கில் என்னைக் குமாஸ்தாவாக எடுத்துக் கொள்ளச் சம்மதித்தார்கள். காலியான இடம், பணம் கையாளவேண்டிய பகுதிக்குட்பட்டதால் முன் பணமாக ஆயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்பதுதான் அந்த நிபந்தனை. நியாயமான வேலை; நல்ல சம்பளம்; சம்பளத்திலும் பதவியிலும் நாளுக்கு நாள் உயரக்கூடிய உத்தியோகம். ஆனால், முன் பணத்திற்கு எங்கே போவது? அதற்கும் எங்கள் க்ஷேமத்திலே கண்ணும் கருத்துமாயிருந்த ருக்கு முன்வந்தாள். அப்பாவும் நானும் எவ்வளவோ மறுத்தும் கேளாமல், மிஞ்சியிருந்த தன் நகைகள் யாவையும் — மூக்குப் பேசரி முதற்கொண்டு — அப்பாவிடம் கழற்றிக் கொடுத்து, அவற்றை விற்றுத் தனக்காக ஒதுக்கி வைத்திருக்கும் பணத்தையும் சேர்த்து 'டிபாஸிட்' தொகையைக் கட்டி, வேலையை எனக்குப் பண்ணி வைக்கும்படி பிடிவாதம் பிடித்தாள்.

அவ்விதம் ஒப்புக்கொண்டு அவளை மூளிக் கோலத்துடன் பார்க்க எனக்கு மனம் துப்பவில்லை. என்றும் உத்தியோகம் கிடைத்தவுடன் அவளை என் மனைவியாக்கிக் கொண்டு, நாளடைவில் அவளை ஆபரணங்களால் அலங்கரித்து ஈடு செய்து விடலாம் என்று மனதில் தீர்மானித்தவனாய், முடிவில் சம்மதித்தேன். அப்பாவும் வேறு வழியின்றி, நான் சம்பாதிக்கும் பணத்தை அவள் பேரால் மாதா மாதம் பாங்கியில் போட்டுவிட வேண்டுமென்ற நிபந்தனையை என்னிடம் ஏற்படுத்திக் கொண்டு, ருக்குவின் வேண்டுகோளுக்கு இணங்கினார். ஆனால், 'என் எண்ணம் ஈடேறாது; விதி என் விஷயத்தில் வேறு விதமாய்ச் சதி செய்துவிடும்' என்பதை நான் அப்போது அறிவேனா?

பாங்கியில் வேலைக்கமர்ந்து ஆறு மாதங்களாகவில்லை. இம்பீரியல் பாங்கின் மீது எண்பதினாயிரம் ரூபாய்க்கு வரையப்பட்டிருந்த 'செக்' ஒன்றை அங்கிருந்து மாற்றிப் பணம் வாங்கி வரும்போது, எவ்விதமாகவோ ஆயிரம் ரூபாய் நோட்டுகள் கொண்ட கட்டு ஒன்று தவறி விட்டது. கைத்தவறுதலால் நேர்ந்ததேயன்றி மனதாரக் கையாடப்படவில்லையென்று கோர்ட்டார் தீர்மானித்ததால், புண்ணிய வசமாகச் சிறைவாசமின்றித் தப்பினேன். சோர விட்ட பணத்திற்கு ஈடாக முன் பணமாகக் கட்டிய தொகையை இழக்க நேரிட்டதுமன்றி, 'கவனக் குறைவானவன்' என்ற காரணத்திற்காக வேலையினின்றும் நீக்கப் பெற்றேன்.

என்னைப் பொறுத்த வரையில் வேலை தொலைந்ததைப் பற்றி எனக்குக் கவலையில்லை. 'ருக்குவின் அற்ப சொற்ப நகைகளும் பணமும் அந்தப் பாழும் வேலையால் பறிபோயிற்றே, அவள் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்ளுவாள்?' என்பதுதான் பெருத்த கவலையாய்ப் போயிற்று. அவளோவென்றால், 'பொருள்





"பந்தைத் தரையிலே அடிச்சுட்டான்! சுத்த வானரமா இருக்கிறாங்களே, இந்தப் பசங்கள்! எந்தக் காலேஜிலே படிக்கிறாங்க இவனுங்க?"
"மாருதி காலேஜிலே நான்!"

போனதைப் பற்றிக் கவலையில்லை; நல்ல வேலை போயிற்றே!' என்று வருந்தினாள்.

ருக்குவின் இத்தகைய தியாகச் செயல்களாலும், அன்பான பேச்சுக்களாலும் என் தாயாரின் கல் மனம் மட்டும் இளகவில்லை. அவளுடைய மனோபீஷ்டம் நிறைவேறுவதற்கு, ருக்குவின் தயாளமும் அன்பும் இடையூறாக நிற்குமென்பதை யறிந்த என் தாயார் முன் ஜாக்கிரதையாக, "தம்பி! அவள் ஒன்றும் காரியமில்லாமல் இப்படி யெல்லாம் நகையையும் பணத்தையும் உனக்குக் கொட்டிடறான்னு நினைச்சிண்டிராதே! எல்லாம் காரியமாய்த்தான். அவள் பசப்பிலே மயங்கிடப் போறே! ஆமாம், ஜாக்கிரதை!" என்று என்னை எச்சரிப்பாள்.

என் தாய்க்குத் தன் அண்ணாவின் இளைய பெண்ணை எனக்கு மணம் செய்து வைத்து விட வேண்டுமென்று ஆசை. அதனால்தான் நான் ருக்குவிடம் பழகாதபடி அவள் முன் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டாள். ஆனால் செல்வச் செருக்கு நிறைந்த என் மாமாவும் மாமியும் தங்கள் பெண்ணை எனக்கு மணம் செய்து கொடுக்க முன் வந்தால்தானே அம்மாவின் வீண் மனோரதம் நிறைவேறப் போகிறது?

இவ்வாறு நான் எண்ணிக் கொண்டிருந்த போதுதான் எதிர்பாராத விதமாகச் சென்னையிலுள்ள என் மாமாவிடமிருந்து அந்தக் கடிதம் வந்தது. தன் கடைசிப் பெண் சரோஜாவை என் தாயாரின் வேண்டுகோளுக்கிணங்க, எனக்கு மணம்செய்து கொடுக்கச் சம்மதிப்பதாக அவர் எழுதியிருந்தார். கலியாணத்திற்குப் பின் என்னைக் காலேஜுக்கு அனுப்ப உத்தேசித்திருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது.

என் விவாகத்தைக் குறித்து அப்பாவின் மனோநிலையை ஏற்கெனவே என் தாயார் அறிவாள். என்றாலும் தன் அண்ணாவின் வீட்டார் சம்மதிக்கும் பக்ஷத்தில் அவரைத் தன் வழிக்குக் கொண்டுவந்து விடலாமென்று எண்ணியிருந்தாள். அப்பா விட்டுக் கொடுப்பதாக இல்லை. எனவே, சென்னையிலிருந்து கடிதம் வந்தது முதல் என் பெற்றோருக்குள் ஓயாச் சண்டை; வீடு அமர்க்களப் பட்டது. அப்பா என் பக்ஷத்தில் இருக்கும் வரை அவர்களுடைய வாக்கு வாதங்களில் தலையிட்டுக்கொள்ள நான் விரும்பவில்லை. ருக்குவும் வழக்கம்போல் 'தானுண்டு தன் காரியமுண்டு' என்று நடந்து கொண்டாள்.

சென்னையிலிருந்து மேற்சொன்ன கடிதம் வந்து ஒருவாரமிருக்கும். கூடத்தில் உட்கார்ந்து என் விவாகப் பிரச்னைக்கு எப்போது ஒரு முடிவு ஏற்படுமோ என்று சிந்தித்த வண்ணம் இருந்தேன். ருக்கு வகுப்பு முடிந்து வரும் நேரம். சுமார் எட்டு வயதுள்ள ஒரு சிறுமி தன் பாவாடை மடிப்புகளுக்குள் ஏதோ ஒன்றை மறைத்துக் கொண்டு, "ருக்மணி டீச்சர் இல்லீங்களா?" என்று என்னிடம் கேட்டாள். அவளுடைய உதடுகளில் ஒரு குறும்புச் சிரிப்பு காணப் பட்டது.

"ஏன்? இப்போது வந்து விடுவாள். அது என்ன?" என்று பாவாடைக்குள் மறைத்து வைத்திருந்த வஸ்துவைப்பற்றிக் கேட்டேன்.

கொஞ்சம் பிகு பண்ணிவிட்டு, தன் பாவாடைக்குள்ளிருந்து ஒரு கடிதத்தை எடுத்து, "இதை அவங்கக் கிட்டே கொடுத்துடுறீங்களா?" என்று என்னிடம் கொடுத்தாள்.

"யார் கொடுத்தனுப்பியது?" என்ற என் கேள்விக்கு "எங்கண்ணன்!" என்று சொல்லிவிட்டு ஓடிப் போய்விட்டாள், அச் சிறுமி.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. "அச் சிறுமியின் அண்ணன் ருக்மணிக்குக் கடிதம் எழுத வேண்டியதின் அவசியமென்ன?" என்ற கேள்வி என் மனத்துள் எழுந்தது. ருக்குவின் நடத்தையில் முதல் தடவையாக என் உள்ளத்தில் சிறிது சந்தேகம் உதித்தது. சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ள எண்ணி உறையைக் கிழித்துக் கடிதத்தை நோக்கினேன். ஆ! என் தலை சுழல ஆரம்-

பிறந்தது; இருதயமே நின்றுவிடும் போலிருந்தது; துக்கம் தொண்டையை அடைத்தது. காதல் மொழியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த அந்த இரண்டு ஆங்கில வார்த்தைகள் என் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்தன. ருக்குவுக்கு ஒரு காதலன்! என்ன துணிவு அவனுக்கு? மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு முழுவதையும் வாசித்தேன். அதன் தமிழ் மொழிபெயர்ப்பு பின்வருமாறு:

"என் அன்பே,

நேற்று என் தங்கை வசம் நீ கொடுத்தனுப்பிய கடிதம் கிடைத்தது. உன் இக்கட்டான நிலைமையை அதன் மூலம் அறிந்து மிகவும் வருந்தினேன். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. 'எனக்குக் கலியாணமே வேண்டாம்' என்று உன் மாமாவிடம் சொல்லி விடேன். அதற்கு மேலும் உன்னை வற்புறுத்த மாட்டாரென்று எண்ணுகிறேன். அப்புறம் உன் அத்தான் அவருடைய மாமா பெண்ணை மணந்து கொள்வார். அதன் பின்பு நாமிருவரும் மணந்துகொள்வதில் யாதொரு தடையுமிருக்காதல்லவா? இதன்படி நடந்து, முடிவை அடுத்த கடிதத்தில் எனக்குத் தெரியப்படுத்து. ஆபீஸுக்கு நேரமாயிற்று; மற்றவை பின்னர்.

உன் அன்புள்ள,
ஸ்ரீநிவாசன்."

விஷயம் தெளிவாகிவிட்டது. ருக்கு இரகசியமாய் அவனைக் காதலிக்கிறாள். "என்ன ஆச்சரியம்! பார்ப்பதற்குப் பதுமை போல் இருந்துகொண்டு அந்தரங்கத்தில் காதல் வாழ்க்கை! ஓகோ! ஆகையால்தான் என்னைக் கண்டு ஒதுங்கி நடந்து கொண்டாளோ? அம்மட்டில் இரட்டை நாடகம் ஆடாமலாவது இருந்தாளே! இவ்விஷயம் மட்டும் இப்போது வெளிப்படாவிட்டால், என் வாழ்க்கையே பாழாகியிருக்குமே!" என்று பலவாறாக எண்ணி மனதை அலட்டிக் கொண்டிருக்கையில், ருக்குவே வந்து விட்டாள். அவளுடைய முகத்தில் சவலாரம் நிரம்பி யிருந்தது.

"ஒரு பிள்ளை எனக்கொரு கடிதம் கொண்டு வந்து உங்களிடம் கொடுத்தானாமே? தயவு செய்து அதை............" என்று தடுமாறினாள்.

"மன்னித்துக்கொள்; சில காரணங்களால் அதை வாசிக்க வேண்டியதாயிற்று. காதற் கடிதமென்று தெரிந்திருந்தால் உடைத்திருக்கமாட்டேன்....ஹும்!" என்று உறுமிக்கொண்டே கடிதத்தை அவளிடம் வீசியெறிந்தேன்.

அவள் கீழே விழுந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு, "ஆனால், ஒரு விண்ணப்பம்: இவ்விஷயத்தை ஒருவரிடமும் சொல்ல மாட்டீர்களே?" என்று கெஞ்சும் பாவனையில் கேட்டாள்.

என் கோபம் அதிகரித்தது. "ஓகோ. யார், யார் எவனைக் காதலிக்கிறார்கள், கலியாணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு அலைவதுதான் என் ஜோலி என்று எண்ணிக் கொண்டாயோ? யார், எப்படி நாசமாய்ப் போனால் எனக்கென்ன?" என்று சீறினேன்.

"என்மேல் கோபித்துக் கொள்ளக் கூடாது. அவர் என்னை அதிகமாய் நேசிக்கிறார்!"

"ரொம்ப சரி! நன்றாய் நேசிக்கட்டும்! நீயும் அவனைக் கலியாணம் செய்துகொள்; அதெல்லாம் இங்கே யார் கேட்டது?"

"இல்லை...ம்...ம்...இதை நீங்கள் மாமாவிடமாவது அத்தையிடமாவது சொல்லி விட்டால் என் மானம் போய்விடும். மாமா என்மேல் வருத்தப்படுவார். இந்த ஒரு ஒத்தாசையையும் நீங்கள் எனக்குச் செய்யத்தான் வேண்டும்!" என்று அழாக் குறையாகக் கெஞ்சி, பரிதாபம் நிறைந்த பார்வையோடு அவள் என்னை நோக்கினாள்.

அவள் மேல் அனுதாபம் பிறந்தது; என் புத்தி விசாலப்பட்டது; அவள் எனக்குச் செய்த நன்றிகள் யாவும் என் மனக் கண் முன் தோன்றின. 'அத்தை பெண் என்றால் வேறு ஒருவனைக் காதலிக்க அவளுக்கு உரிமையில்லையா? அதற்காக ஏன் அவள் மேல் ஆத்திரம் கொள்ள வேண்டும்?' என்று மனம் சமாதானம் கற்பித்தது. சற்றுச் சாதாரணமான குரலில், "சரி! அப்பா, அம்மாவுக்கு இதைத் தெரிவிக்க மாட்டேன்; என்னை நீ நம்பலாம்" என்றேன்.

"தாங்ஸ்" என்று சொல்லி விட்டுச் சென்றாள் ருக்கு. [அடுத்த இதழில் முடியும்.]

தமிழ் வசன நடை

தமிழ் வசன நடை பிறந்து வெகு காலமாகவில்லை. தொட்டில் பழக்கம் கடுகளவு மட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமமென்பது என்னுடைய கட்சி.

—பாரதியார் திருவாக்கு.



ஒரு ராஜாவுக்கு ஒரே பெண். அவள் ரொம்ப ரொம்ப அழகாயிருப்பாள். ராஜாவுக்கும் ராணிக்கும் அவளிடத்தில் அளவு கடந்த பிரியம். அவளைக் கண்ணுக்கு கண்ணாக அவர்கள் வளர்த்து வந்தார்கள்.

ராஜகுமாரி மணப் பருவத்தை அடைந்த பொழுது, அநேக நாட்டு மன்னர்கள் அந்த ராஜாவுடன் சம்பந்தம் செய்து கொள்ள முன் வந்தனர். அதி ரூபவதியான ராஜ குமாரியை மருமகளாக்கிக் கொள்ள எந்த அரசன்தான் விரும்பமாட்டான்?

ஆனால் ராஜகுமாரி மட்டும் ஆரம்பத்திலிருந்து ஒரே பிடிவாதமாயிருந்தாள். அவளை மணக்க விரும்பி வந்த எந்த ராஜகுமாரனையும் அவள் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. தன் மணாளனைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அவள் ஒரு நிபந்தனை ஏற்படுத்தியிருந்தாள். எந்த ராஜகுமாரன் அவள் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் கொடுத்து அவளைத் தோற்கடிக்கிறானோ அவனுக்கே மாலையிடுவது என்பதுதான் அவள் தீர்மானம். அத்துடன் தோல்வியுற்றவர்கள் மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை அநுபவிக்க வேண்டும் என்றும் அவள் கடுமையாக விதித்து விட்டாள். இந்தக் கடுமையான நிபந்தனைக்குப் பயந்தாவது, தன்னை நாடி வரும் ராஜகுமாரர்களின் எண்ணிக்கை குறைபடும் என்று அவள் நினைத்தாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக, நாலா பக்கங்களிலிருந்தும் பல தேசத்து ராஜகுமாரர்கள் நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு வந்து சேர்ந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவராவது ராஜகுமாரியின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவில்லை; அவ்வளவு ராஜகுமாரர்களும் முகங்களைத் தொங்கவிட்டுக் கொண்டு அவமானத்துடன் சிறைச்சாலையில் கடுங்காவல் தண்டனையை அநுபவித்தனர்.

ராஜகுமாரியின் இந்த விபரீத நிபந்தனையினால், சிறைச்சாலை முழுவதும் ராஜகுமாரர்கள் மயமாக இருந்தது. இது விஷயமாய், ராஜாவுக்கும் ராணிக்கும் அளவு கடந்த மனவருத்தம். அவர்கள் தங்கள் பெண்ணைக் குறித்துக் கவலைப் பட்டதோடல்லாமல், சிறையில் வாழும் ராஜகுமாரர்கள் மீதும் அநுதாபங் கொண்டார்கள். ராஜாவும் ராணியும் அந்தப் பிடிவாதமான நிபந்தனையை விட்டுவிடும்படி எவ்வளவோ கூறியும் ராஜகுமாரி கேட்கிற வழியாயில்லை.

நாளடைவில் ராஜகுமாரியை மணந்து கொள்ள ஆசைப்பட்டு வரும் ராஜகுமாரர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. ராஜாவுக்கும் ராணிக்கும் பயம் பிடித்துக் கொண்டது. ராஜகுமாரிக்குக் கல்யாணமே ஆகாமல் போய்விடுமோ என்ற பயந்தான் அது.



கடைசியில் வெகு நாட்களுக்கப்புறம், ஒரு நாள் காலை ஒரு ராஜகுமாரன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். அவனது அகத்தினழகு அவன் முகத்தில் நன்ருய்த் தெரிந்தது. ராஜாவுக்கும், ராணிக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவனைக் கண்டதும் தங்கள் புத்திரி கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறி அவன் கட்டாயம் வெற்றி பெற்றே தீருவான் என்ற நம்பிக்கை அவ்விருவருக்கும் ஏற்பட்டது.

ராஜகுமாரி கேள்வி கேட்கத் தொடங்குமுன், அந்த ராஜகுமாரன் தான் அவளை ஜெயித்துவிட்டால் ஒரு வேண்டுகோளுக்கு அவள் இணங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். அவளும் அந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டாள். தான் ராஜகுமாரியை ஜெயித்ததும், சிறையில் அடைப்பட்டிருக்கும் மற்ற ராஜகுமாரர்களை விடுதலை செய்துவிட வேண்டும் என்ற நிபந்தனைதான் அது. பிறகு ராஜகுமாரி அவனைக் கேள்வி கேட்க ஆரம்பித்தாள்:—



"இப்போது என் மனதில் என்ன எண்ணிக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தங்களால் கூற முடியுமா?"

இது தான் ராஜகுமாரியின் முதல் கேள்வி.

"மற்ற ராஜகுமாரர்களையும் போலவே என்னையும் ஜெயித்துச் சிறையில் அடைத்துவிடலாம் என்றுதான் நீ இப்பொழுது நினைத்துக் கொண்டிருக்கிருய்" என்ருன் ராஜகுமாரன்.

எதிர்பாராத விதமாக இந்தப் பதிலைக் கேட்டதும், ராஜகுமாரி ஆச்சரியத்தினல் ஸ்தம்பித்து விட்டாள். ஏனெனில் அவள் மனதில் அப்பொழுது இருந்த எண்ணமும் அது தானே!

மெள்ளச் சமாளித்துக் கொண்டு, அவள் தனது அடுத்த கேள்வியைப் போட்டாள்:—


"என்றுமே வாடாமல், அன்றலர்ந்த மலராகவே காட்சியளிக்கும் ஓர் அழகிய தாமரையை உங்களால் காட்ட முடியுமா?"

"ஏன், அப்பேர்ப்பட்ட மலர் இதோ என் அருகிலேயே இருக்கிறதே! ராஜகுமாரியின் திருமுகந்தான் அது!" என்ருன் போக்கிரி ராஜகுமாரன்.

அவ்வளவுதான்; ராஜகுமாரி நாணத்தால் வெட்கித் தலை குனிந்தாள்.

உண்மையில் இந்தப் பதில் எல்லோரையுமே திகைக்க வைத்தது. யாவரும் ராஜகுமாரனின் சமயோசித புத்தியைக் கண்டு பிரமித்து மூக்கில் விரலை வைத்தனர். ராஜகுமாரிக்கு வெட்கம் ஒரு புறம், ஆச்சரியம் ஒரு புறம். அதற்கு மேல் அவள் ராஜகுமாரனை எந்தக் கேள்வியும் கேட்க விரும்பவில்லை. அவனையே பார்க்காமல் பார்ப்பதும், சிரிக்காமல் சிரிப்பதுமாக இருந்தாள்.

அப்புறம் கேட்க வேண்டுமா, ராஜா ராணியின் சந்தோஷத்திற்கு! வெகு தடபுடலாக அவ்விருவருக்கும் கல்யாணம் செய்து வைத்தார்கள். அத்துடன் மற்ற ராஜகுமாரர்களுக்கும் விமோசனம் கிடைத்தது. அவர்கள் சிறைச்சாலையிலிருந்து விடுதலையடைந்ததும் தங்களுக்கு ஒரு வழி தேடிக் கொடுத்த அந்த ராஜகுமாரனை மனமார வாயார வாழ்த்தினர்கள்.



அவர் இட்ட மருந்து!

ஜெயமணி

"என்ன சௌக்கியம்தானே?"

"சௌக்கியமாவது, மண்ணாங்கட்டியாவது! எனக்கு இந்த வாழ்க்கையே வெறுத்து விட்டது. இந்த ஒரு பெண்ணை வைத்துக்கொண்டு மூன்று வருஷ காலமாக அலைகிறேன், பிரயோஜனமில்லை. ஒரு பையன் எஸ். எஸ். எல். ஸி., பாஸ் செய்திருக்கிறான். சொத்து எதுவுமில்லை. இரண்டாயிரம் ரூபாய் கேட்கிறான். நகைகளும் பாத்திரங்களுமாக இரண்டாயிரம் ரூபாய்க்கு ஜாப்தா கொடுக்கிறான். இந்த லட்சணத்தில் மேற்கொண்டு படிக்க வைக்க வேண்டுமாம்! பெண்ணுக்கு வரன் தேட அலைந்தது போதாதென்று இவனுக்காகக் காலேஜில் இடம் தேடுவதற்காக வேறு நான் அலைய வேண்டும்!" என்று கும்பேசுவரன் அடுக்கிக் கொண்டே போனார்.

சேஷாத்ரி கேட்ட அந்தச் சாதாரணக் கேள்வி அவரை ஓர் உலுக்கு உலுக்கி, தமது விதியையே நொந்து கொள்ளும் படி செய்து விட்டது.

"மற்றொரு பையன் பி. ஏ., பாஸ் செய்து விட்டான். அதைப் போல 'டபிள்' கேட்கிறான். மேற்கொண்டு அவனைப் படிக்க வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. ஆனால் அவனுக்கு வேலை தேடிக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் தலையில்தான் விழும்போல் இருக்கிறது" என்று மேலும் அங்கலாய்த்துக் கொண்டார்.

"படிப்பு, படிப்பு என்று எதற்காக அடித்துக் கொள்கிறீர்கள்? படிப்பு இரா விட்டாலும் ஏதோ கொஞ்சம் சொத்து உள்ள பையனைப் பார்த்துக் கொடுப்பதுதானே?" என்றார் சேஷாத்ரி.

"காசமாய்ப் போச்சு. ஒரு பையனுக்குப் படிப்பு இல்லை. கிராமத்திலேயே நிலபுலன்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய தகப்பனார் என்ன சொன்னார் தெரியுமா? 'பணம், பணம் என்று பறக்கும் வழக்கம் எனக்கு இல்லை. எனக்கு ஏதோ ஈசுவரன் கொடுத்திருக்கிறார். பையனுக்குத் திருப்தியாய் இருப்பதற்காகக் கல்யாணத்தை மாத்திரம் ஒரு நாளாக இருந்தாலும் கொஞ்சம் சிறப்பாகச் செய்து விடுங்கள்' என்றார்."

சேஷாத்ரி இடைமறித்து, "பேஷ்! இந்தக் காலத்தில் கூட அப்படி ஒரு மனுஷன் இருக்கிறாரா? அவர் சொல்வது நியாயம்தானே? கல்யாணத்தைச் சிறப்பாகச் செய்யத்தான் வேண்டும்" என்றார்.

"எனக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அப்படிப்பட்ட உதார குணம் படைத்தவரின் புதல்வனுக்கு நமது பெண்ணைக் கொடுக்கும் பாக்கியம் கிடைக்க வேண்டுமே என்று எண்ணினேன். பிறகு அம்மணி வந்தாள்."

"யார்?"

"அவள் தான் ஐயா, அந்த மனுஷனின் தர்ம பத்னி. தனது கணவன் கூறியதை அவளும் ஒப்புக் கொண்டாள். மூன்று வருஷ காலமாகப் பட்ட கஷ்டம் பலனைக் கொடுத்தது என்று என் மனம் துள்ளிக் குதித்தது. ஆனால் என் குதூகலம் அதிக நேரம் நீடிக்கவில்லை. அந்த அம்மணி போட்ட வெடிகுண்டினால் என் சந்தோஷம் சின்னாபின்னமாகியது."

'உங்கள் குழந்தைக்கு நகைகள் மாத்திரம் போட்டு விடுங்கள்' என்று அந்த அம்மணி கூறிச் சுமார் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் அடிகோலி விட்டாள்!

எனக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. 'அது ரொம்ப அதிகம்' என்று கொஞ்சம் உஷ்ணமாகவே சொன்னேன்.

'அதிகமாவது! எங்களுக்கா கொடுக்கப் போகிறீர்கள்? உங்கள் குழந்தைக்கு நகைகள் போட்டு நீங்கள்தானே கண் குளிரப் பார்க்கப் போகிறீர்கள்?' என்று அந்த அம்மணி இன்னும் என்னவெல்லாமோ சொன்னாள்.


"அதற்குமேல் என் காதில் ஒன்றும் ஏற வில்லை 'சரி, கடிதம் எழுதுகிறேன்' என்று சொல்லிவிட்டுத் தள்ளாடிக் கொண்டே ஊருக்கு வந்து சேர்ந்தேன்" என்று கும்பேசுவரன் சலிப்புடன் கூறினார்.

"காலமே அப்படி விபரீதமாக இருக்கிறது. தானங்களுக்குள் தலை சிறந்தது கன்னிகாதானம்தான் என்று சொல்லுகிறார்கள். ஆனால் கன்னிகை பிறந்த உடனேயே கவலை வந்து சூழ்ந்து கொள்கிறது. அந்தக் கன்னிகையைத் தானம் செய்து கொடுப்பதற்குள், போதும் போதும் என்றாகி விடுகிறது" என்று சேஷாத்ரி அனுதாபமாகச் சில வார்த்தைகள் சொன்னார்.

"தாய்மையை உபநிஷதங்கள் உயர்த்திக் கூறுகின்றன. இல்லற தர்மத்தை எல்லாரும் புகழ்கிறார்கள். இல்லாள் இல்லாத வீடே பாழ் என்கிறார்கள். ஆனால் இதற்கெல்லாம் காரணமான கன்னிகையைக் கல்யாணம் செய்து கொள்ள ஆயிரத்தெட்டு நிபந்தனைகளை விதிக்கிறார்கள். இது என்ன அக்கிரமம்?" என்று கும்பேசுவரன் சொல்லிக் கொண்டிருக்கையில், "யார் என்ன அக்கிரமம் செய்து விட்டார்கள்?" என்று கேட்டுக் கொண்டே அவ்விடத்துக்குச் சிவசைலம் வந்து சேர்ந்தார்.

சிவசைலத்தைக் கண்டதும் கும்பேசுவரன், "உங்களுக்கு என்ன ஐயா? அதிர்ஷ்டக்கார மனுஷன். ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்க வருஷக்கணக்காய்த் தலைகீழாக நின்று வருகிறேன். நீங்கள் என்னடா என்றால் நகக்கணுவில் அழுக்குப் படாமல், ஒரு பல் கூட உதிராமல், தலையில் வழுக்கை விழாமல், முகத்தில் அசடு தட்டாமல் நாலு பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டீர்கள். உங்களைப் பார்த்தால் நாலு பெண்களைப் பெற்றவன் என்று யாருமே சொல்ல முடியாது. சேஷாத்ரியை வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள்!" என்றார்.

கும்பேசுவரன் அவ்விதம் சொல்லி வாய் மூடுமுன், "அதில் என்ன சந்தேகம்? நீங்களும் நானும் மாத்திரமா அதை ஒப்புக் கொள்ளுகிறோம்! ஊர் முழுதும் ஒப்புக்கொண்டிருக்கிறதே" என்று சேஷாத்ரியும் அதற்கு முத்திரை வைத்தார்.



"ஹஹ்...ஹா" என்ற சிரிப்பின் மூலம் சிவசைலமும் அதை ஆமோதித்தார்.

"பெண்ணைச் சுலபமாகக் கல்யாணம் செய்து கொடுக்கும் யுக்தியை எனக்குக் கொஞ்சம் சொல்லக் கூடாதா?" என்று குப்பேசவரன் விளையாட்டாகவோ அல்லது வினையாகவோ ஒரு கேள்வி கேட்டு வைத்தார்.

அந்தக் கேள்விக்குச் சிவசைலம் அளித்த பதில் என்ன என்பதை அறியுமுன், சிவசைலம் தம்முடைய நாலு பெண்களுக்கும் சுலபமாக விவாகம் செய்து வைத்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

• • •

பெயரில் என்ன இருக்கிறது என்கிறார்கள். ரோஜா புஷ்பத்தை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அதன் மணம் போய்விடுமா என்று கேட்கிறார்கள்.

அது எப்படியாயினும் சிவசைலத்தின் பெண்களுக்குச் சுலபமாகக் கல்யாணமானதற்குக் காரணம் அவர்களுடைய பெயர்கள்தான்!

சிவசைலத்துக்குப் பாக்கிய லக்ஷ்மி, ஸௌக்கியலக்ஷ்மி, அன்னலக்ஷ்மி, ஆனந்த லக்ஷ்மி என்று நாலு பெண்கள் உண்டு. ஜோஸ்யத்தில் நிபுணரும் சிவசைலத்துக்கு அத்தியந்த நண்பருமான நாகேசுவரனின் யோசனைக்கு இணங்கவே சிவசைலம் தமது பெண்களுக்கு அவ்வாறு நாமகரணம் செய்தார். அவர்கள் முறையே சுருக்கமாக பாக்கியம், ஸௌக்கியம், அன்னம், ஆனந்தம் என்று அழைக்கப்பட்டு வந்தனர்.

அவர்கள் ஒவ்வொருவராக விவாக வயதை அடைந்தபோது, அவர்களுக்கு வரன் தேடும் பொறுப்பை நாகேசுவரனே ஏற்றுக் கொண்டார். உண்மையைச் சொல்லப் போனால், வரன் தானாகத் தேடிக் கொண்டு வரும்படி செய்யும் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டார் என்றே சொல்லவேண்டும்!

• • •

அந்தக் கிராமத்திலிருந்து சுமார் முப்பது மைல் தூரம் உள்ள வேறொரு கிராமத்துக்கு நாகேசுவரன் சென்றிருந்தார். மேற்படி கிராமத்தைச் சேர்ந்த பெரிய மிராசுதார் வீட்டில் நாகேசுவரனுக்கு அன்றிரவு போஜனம் நடந்தது. மிராசுதார், அவரது ஏக புத்திரன் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொதுவாக பல விஷயங்களைப் பற்றிப் பேசிய பின், நாகேசுவரன் தமது வேலையை ஆரம்பித்தார்.

"குழந்தைக்குக் கல்யாணம் ஆகவேண்டும் போலிருக்கிறது" என்று பேச்சைத் தொடங்கினார்.

"ஆமாம், பல இடங்களிலிருந்து ஜாதகங்கள் வந்திருக்கின்றன" என்றார் மிராசுதார்.

"இந்த இடத்துக்கு ஜாதகங்கள் வந்து குவியத்தான் செய்யும். எத்தனை ஜாதகங்கள் வந்தால்தான் என்ன? இவனைப் பாணிக்கிரஹணம் செய்ய ஒரே ஒரு லக்ஷ்மி பாக்கியம் செய்திருக்கிறாள். இவனும் பாக்கியசாலிதான்"

இவ்வாறு கூறியதும் மிராசுதாருக்கும் அவருடைய மனைவிக்கும் பேச்சில் ஒரு உற்சாகம் தோன்றியதை நாகேசுவரன் கவனியாமல் இல்லை. எனவே தம்முடைய சொக்குப் பொடியைக் கொஞ்சம் துரிதமாகவே பிரயோகம் செய்ய ஆரம்பித்தார்.

"இந்தக் காலத்தில் பெண்ணின் அதிர்ஷ்டம், குணம் இதைப்பற்றி யார் கவனிக்கிறார்கள்? பணம்தான் முக்கியம், பெண் லட்சணமா என்பதைக் கூட அடுத்தபடியாகத்தான் கவனிக்கிறார்கள். பத்தாயிரமோ, இருபதாயிரமோ கொடுத்தால், பெண் எப்படி இருந்தாலும் விவாகம் செய்துகொண்டு விடுகிறார்கள்."

இந்தக் கடைசி வாக்கியத்தைக் கேட்டதும் மிராசுதாருக்குச் 'சுருக்' கென்றது. ஏனென்றால் அவரும் தமது குமாரனுக்கு இருபதாயிரத்துக்கு மேல் தொகை வாங்கத் திட்டமிட்டிருந்தார்.

பலே பேர்வழியான நாகேசுவரன், மிராசுதார் முகத்தில் அசடு தட்டியதையும் கவனித்துக் கொண்டே பேசலானார்.

"உதாரணமாக இந்த இடத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். ஒருவர் தமது பெண்ணைக் கொடுத்து ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுத்தாலும் அந்தப் பணம் இங்கு யாருக்கு வேண்டும்? ஏழைப் பெண்ணாக இருந்தாலும் குணவதியாக இருக்க வேண்டும்; பாக்கியவதியாக இருக்க வேண்டும். வீட்டுக்கு லக்ஷ்மி போல் விளங்க வேண்டும்; எனக்குத் தெரிந்த பல இடங்களில் பெரிய இடத்துப் பெண்கள் வந்து கால் அடி வைத்ததும்...மன்னிக்க வேண்டும். அதிகப்படியாகப் பேசி விட்டேன்" என்று தளுக்காக நிறுத்திக் கொண்டார் நாகேசுவரன்.

ஆயினும் அவ்வளவு போதும்! நாகேசுவரனின் பிரசங்கம் மிராசுதார் தம்பதிகளின் மனதில் பெரும் புரட்சியை உண்டு பண்ணியது. மற்றும் கடைசியாக நாகேசுவரன் சொல்லிய கதை அவர்களுடைய மனதையே அடியோடு மாற்றி விட்டது.

"மயிலாடி கிராமம் இருக்கிறது அல்லவா? அங்கு சிவசைலம் என்று ஒருவர் இருக்கிறார். நானும் எத்தனையோ ஜாதகங்களைப் பார்த்திருக்கிறேன். அவருடைய பெண்ணின் ஜாதகத்தைப் போல நான் பார்த்ததில்லை அவ்வளவு உயர்ந்த ஜாதகம். என் குமாரனுக்கு அந்தப் பெண்ணை விவாகம் செய்து கொள்ள பிரம்மப் பிரயத்தனம் செய்தேன். நடக்கவில்லை. அது நமக்கெல்லாம் கிடைக்கக் கூடியதா? அவளை விவாகம் செய்து கொள்ள எந்தப் பாக்கியசாலி கொடுத்து வைத்திருக்கிறானோ? அப்படிப் பட்ட லக்ஷ்மியை வருந்தியல்லவா வீட்டுக்கு அழைத்து வர வேண்டும்" என்று நாகேசுவரன் சொல்லி முடித்தார்.

நாகேசுவரனின் மருந்து வெகு வேகமாக வேலை செய்யத் துவங்கியது. மறுநாளே மிராசுதாரிடமிருந்து சிவசைலத்துக்குக் கடிதம் பறந்தது. அதிலும் சிவசைலத்தினுடைய பெண்ணின் பெயர் பாக்கிய லக்ஷ்மி என்று கேள்விப் பட்டதும் மிராசுதாரிணிக்கு உண்டான குதூகலம் கொஞ்சநஞ்சமன்று.

"பாக்கிய லக்ஷ்மி! எவ்வளவு அழகான பெயர்! வாய் நிறைய இருக்கிறது. இங்கு அக்கம் பக்கத்தில் பாருங்கள். குஞ்சு, செச்சு, லாச்சி, சுப்பு என்றெல்லாம் கூப்பிடுகிறார்கள். ஐய, காது கொப்பளித்துப் போகிறது" என்றாள் தன் கணவரிடம்.

அதிகம் சொல்லுவானேன்! அந்த வருஷத்தில் மிராசுதார் குமாரனுக்கும் பாக்கிய லக்ஷ்மிக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. அந்த வருஷம் விளைந்த அதிக விளைச்சலுக்கும், மிராசுதாரின் பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்ததற்கும் பாக்கிய லக்ஷ்மி தான் காரணம் என்று மிராசுதாரிணி எல்லோரிடமும் சொல்லிப் பெருமிதம் கொண்டாள்!

மற்ற மூன்று பெண்கள் விஷயத்திலும் நாகேசுவரன் சற்றேறக்குறைய அதே மருந்தையே கையாண்டு வெற்றியும் பெற்றார். முக்கியமாக நாகேசுவரனின் யுக்தியும், அடுத்தபடியாகச் சிவசைலத்தின் நல்ல காலம், அவரது பெண்களின் அதிர்ஷ்டம் இவையும் சேர்ந்து, அந்தப் பெண்களைச் சீரும் செல்வமும் வாய்ந்த பெரிய குடும்பங்களில் கொண்டு போய்ச் சேர்த்தன.

• • •

கடைசியாகக் கும்பேசுவரனுக்குச் சிவசைலம் அளித்த பதில் என்ன என்று கேட்கிறீர்களோ?

"நான் சொல்லும் யுக்தி என்ன வென்றால், ஸ்டிரைக் செய்யுங்கள் என்பதுதான்" என்றார் சிவசைலம்.

சேஷாத்ரிக்கும் கும்பேசுவரனுக்கும் ஒன்றும் புரியவில்லை.

"ஆமாம், வாயைப் பிளக்கிறீர்கள். ஸ்டிரைக் செய்வதுதான் சரியான யோசனை. அதாவது பெண்களைப் பெற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கத்தை ஆரம்பிக்க வேண்டும். பிள்ளைகளைப் பெற்றவர்கள் தாங்களாக வலிய வந்து கேட்டாலன்றி, பெண்களை விவாகம் செய்து கொடுப்பதில்லை என்று சபதம் செய்து கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக, தங்களுடைய பிள்ளைகளுக்குத் தாங்களே பெண் வரன் தேடிப் போக வேண்டும். அப்படியே ஒன்றிரண்டு வருஷங்கள் உறுதியுடன் இருந்தால், பிள்ளைகளும் பிள்ளைகளைப் பெற்றவர்களும் அலறிக் கொண்டு வழிக்கு வந்துதானே தீர வேண்டும்? என் யுக்தி எப்படி?" என்று சொல்லிக்கொண்டே சிவசைலம் புறப்பட்டார்.

மற்ற இருவரும் அவரையே பார்த்துக் கொண்டு நின்றனர்.



முதல் பிச்சைக்காரன்:— அண்ணே! இப்போ உனக்கு லக்ஷ ரூபாய் கிடைத்தால் நீ என்ன செய்வாய்?

இரண்டாவது பிச்சைக்காரன்:— அப்படிக் கிடைத்தால் இந்த நகரத் திண்ணைத்தனை விட்டு எழுந்து வீட்டுத் தங்கத் திண்ணையில் வாங்கிப் பிச்சை எடுக்கமாட்டேனா?

முதல் பிச்சைக்காரன்:— அதுதானே கேட்டேன்: எங்கே தொழிலை விட்டுவிடப் போகிறாயோன்னு பார்த்தேன்!



சரிதான் !

டாக்டர் (ஒரு பையனின் காயத்தைப் பரிசோதனை செய்யும்போது):—இதை நாய்க் கடி என்றும் சொல்ல முடியவில்லை, குதிரைக் கடி என்றும் சொல்லமுடியவில்லை. நாய்க் கடியை விடப் பெரிதாயிருக்கிறது இந்தக் காயம்; குதிரைக் கடியை விடச் சின்னதா யிருக்கிறது !

பையன்:—உங்கள் சந்தேகம் சரிதான்! இது குதிரை கடித்ததுமல்ல; நாய் கடித்ததுமல்ல. இன்னொரு பையனும் நானும் சண்டை போட்டுக் கொண்டதில் அவன் என்னைக் கடித்து விட்டான்!

★

பதில் எப்படி ?

ஒருவர் (ஆபீஸ் பையனைப் பார்த்து) :— எஜமான் உள்ளே இருக்கிறாரா ?

பையன் (ஆபீஸுக்குப் புதிதாக வந்தவன்) :—நீங்கள் யார் ? வியாபார விஷயமாக வந்திருக்கிறீர்களா ? பில் கலெக்டரா? அல்லது எங்கள் எஜமானரின் சிநேகிதரா?

ஒருவர் :—ஏன் ? மூன்று விஷயமாகவும் தான் வந்திருக்கிறேன் !

பையன் :—அப்படியானால் இதோ மூன்று விதமான பதில்கள். எஜமான் உள்ளே வேலையா யிருக்கிறார்; அவர் ஊரில் இல்லை; உள்ளே போய் அவரைப் பார்க்கலாம் !


★

புரிந்துவிட்டது !

நண்பன் :—டேய் ராமு, உங்கள் அகத்திலே எல்லோருக்கும் ஏன் 'அ' பிடிக்கிறது என்கிற காரணம் நேற்றைக்கு நன்றாய்ப் புரிந்து விட்டது !

ராமு :—என்ன, அப்படிப் பிரமாதமாய்க் கண்டு பிடித்து விட்டாய் ?

நண்பன் :— நேற்றைக்கு உங்கள் அகத்திலே காப்பி சாப்பிட்டுப் பார்த்தேனே !



சந்தேகம் இல்லை !

சில நாட்களாக ஒருவர் மார்பு வலியினால் கஷ்டப்பட்டு வந்தார். தாம் அதிகமாகச் சுருட்டுப் பிடிப்பதனால்தான் தமக்கு அந்த வலி உண்டாகி விட்டதோ என்று அவருக்குச் சந்தேகமாய்ப் போய்விட்டது. உடனே ஒரு டாக்டரிடம் போனார்.

அவர் :—டாக்டர் ஸார், சுருட்டுப் பிடிப்பதனால் ஒருவனுடைய வாழ்நாட்கள் குறைந்து விடுமோ ?

டாக்டர் :—ஆஹா ! சந்தேகமென்ன ? இந்த விஷயத்தில் என் சொந்த அநுபவத்தைக் கூறுகிறேன், கேளுங்கள். நான் முன்பு ஒரு சமயம் சுருட்டுப் பிடிக்கும் வழக்கத்தையே நிறுத்தி விட்டேன். அந்தச் சமயம் என் வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் 90 மணி நேரமாக நீண்டு இருந்தது!

★

அவ்வளவுதான் !

சுந்தரம் :—என் அப்பா, சோமு! போன தடவை நான் பம்பாயிலிருந்து வந்தபோது உனக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகும் போலிருக்கிறது என்று சொன்னாயே ! பெண்ணைக் கூடப் போய்ப் பார்த்தாயே ! அது என்ன ஆயிற்று ?

சோமு :—அதுவா ! அது அப்பொழுதே நின்று போய்விட்டதே !

சுந்தரம் :—ஏன், நீ வேண்டா மென்று கூறி விட்டாயா ?

சோமு :—இல்லை; பெண்ணைப் பார்த்தேன். அவளுடன் பேசிக் கொண்டிருந்தேன். அவள் தன் ஆடை அலங்காரங்களுக்காக ஆகும் செலவைச் சொன்னாள். நான் என் சம்பளத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்; பேச்சுவார்த்தை முடிந்தது!

★

எது பிரமாதம் ?

ஒரு கதாசிரியர் தம் நண்பரைத் தாம் புதிதாக எழுதிய சினிமாப் படத்துக்கு அழைத்துச் சென்றார். படம் பார்த்து முடிந்ததும் இருவரும் வெளியே வந்தனர்.

கதாசிரியர் :—படம் எப்படியிருக்கிறது ?

நண்பர்:—ரொம்பப் பிரமாதம், போங்கள் !

கதாசிரியர் (சந்தோஷத்துடன்) :—உண்மையாகவா ?

நண்பர் :—ஆமாம்; படம் முடிவதற்கும் என் தூக்கம் கலைவதற்கும் சரியாயிருந்தது!



தாய்மையும் குழந்தை வளர்ப்பும்

கமலா ஊருக்குப் புறப்பட்டாள். அவளைப் பிறந்தகத்துக்கு அழைத்துக்கொண்டு போவதற்காக, ஊரிலிருந்து அவளுடைய அண்ணு வந்திருந்தான். கமலா எல்லோரையும் வணங்கி விடை பெற்றுக்கொண்டாள். "போய் வா, அம்மா!" என்று எல்லோரும் மனப்பூர்வமாக அவளை ஆசீர்வதித்து அனுப்பினுர்கள். ஆனுல் அந்த ஆசீர்வாதத்துக்குப் பின்னுல், ஒவ்வொருவருடைய மனதிலும் ஒரு பெரு வேதனை குடிகொண்டிருந்தது. "இவளை மறுபடியும் காண வேண்டுமே! பகவானே, கிருபை செய்!" என்று எல்லோரும் மௌனமாகக் கடவுளை வேண்டிக்கொண்டார்கள். கமலாவுக்கும் அவளை அறியாமலே அவளுடைய கண்ணில் நீர் ததும்பியது. அந்த வீட்டிலே மீண்டும் காலடி எடுத்து வைக்க முடியுமா என்ற சந்தேகம் அவளுக்குத் தோன்றியது. மனதிலே வேதனை ததும்ப வண்டியில் ஏறிப் புறப்பட்டாள்.

மனைவியை அனுப்பிவிட்டு அன்றிரவு வீட்டுக்குத் திரும்பி வந்த ரகுராமனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. கமலா தப்பிப் பிழைப்பாளா? அவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடுமா?. அப்படி ஏதாவது நேர்ந்தால், அப்புறம் அவன் எப்படி இந்த உலகத்தில் வாழ்க்கை நடத்த முடியும்?

* * *

தமிழ் நாட்டுப் பெண்களைப் பொறுத்த வரை, பிரசவம் என்பது மறு பிறப்பு எடுப்பதைப் போலத்தான். கர்ப்பிணிகள் 'பெற்றுப் பிழைக்க வேண்டுமே' என்பதற்காக அவர்களுடைய உறவினர்கள் இஷ்ட தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொள்ளுகிறுர்கள்.

நம் நாட்டுப் பெண்களிடையே தாய்மையைப் பற்றிய அறியாமை குடிகொண்டிருப்பதுதான் இதற்கு முக்கிய காரணமாகும். கர்ப்ப காலத்திலே எப்படி வாழ்க்கை நடத்த வேண்டும், குழந்தை பிறந்த பிறகு எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி நம்முடைய பெண் மக்களுக்குப் போதிய அறிவு இல்லாமலிருக்கிறது.

இந்தக் குறையைப் போக்குவதற்காக ஸ்ரீமதி பார்வதி சீனிவாசன் அவர்கள் ஓர் அருமையான தொண்டு செய்திருக்கிறுர்கள். அவர் எழுதியிருக்கும் "தாய்மையும் குழந்தை வளர்ப்பும்" என்ற நூல், வளரும் தமிழுக்கு ஒரு சிறந்த தொண்டு: பெண் குலத்துக்கு ஓர் ஒப்பற்ற சேவை. தாய் கர்ப்பமாயிருக்கும்போது முதல், குழந்தை பிறந்து அதற்கு ஒரு வருஷமாகும் வரை பெண்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றி ஸ்ரீமதி சீனிவாசன் இந்த நூலில் வெகு அருமையாகவும் சுவாரஸ்யமாகவும் எழுதியிருக்கிறுர். இந்த அருமையான நூலுக்கு டாக்டர் ராஜன் ஒரு அருமையான முகவுரை அளித்திருக்கிறுர்.

பிறந்தகத்துக்குப் போகும் கமலாவும், அவளைப் போன்ற ஆயிரக்கணக்கான தமிழ் நாட்டுப் பெண்மணிகளும் இந்த அருமையான புத்தகத்தின் ஒரு பிரதியை வாங்கிப் படித்தார்களானுல், அவர்களோ அவர்களுடைய உறவினர்களோ பிரசவத்தைப் பற்றிக் கொஞ்சங்கூடக் கவலைப்படவேண்டியதே இல்லை. அதற்காக பயந்தால் இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்திக்க வேண்டிய அவசியமும் இல்லை

விலை ரூ. 3-0-0; காலிகோ பதிப்பு 4-8-0 கிடைக்குமிடம்: ஸ்ரீமதி பார்வதி, c/o டாக்டர் சீநாபதி, கோகுலம், மயிலாப்பூர், சென்னை.

Memories of Bapu

காந்திஜிக்கு, தம்மை யாராவது போட்டோ எடுப்பது கொஞ்சங்கூடப் பிடிக்காது. ஒரு முறை ஒரு புகைப்படக்காரர் காந்திஜியை போட்டோ எடுக்கப்போனுராம். காந்திஜி அவருடைய காமிராவைப் பிடுங்கி வைத்துக் கொண்டாராம். ஆனுல் பக்கத்தில் இருந்த மற்றொரு புகைப்படக்காரர் இந்த சம்பவத்தைப் போட்டோ எடுத்து, அதை காந்திஜியிடமே காட்டினுராம்!

காந்திஜிக்கு போட்டோ எடுப்பது கொஞ்சங்கூடப் பிடிக்காவிட்டாலும், உலக மகா புருஷராகிய அவரை புகைப்படக்காரர்கள் விடுவார்களா? உலகத்திலே அதிகமாகப் போட்டோ எடுக்கப்பட்டவர்களிலே காந்திஜியும் ஒருவராம். காந்திமகானுடைய போட்டோக்கள் பலவற்றைச் சேர்த்துச் சில மாதங்களுக்கு முன்பு டில்லி "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகைக் காரியாலயத்தார் ஒரு புத்தகமாக வெளியிட்டிருந்தார்கள். அப்புத்தகம் இப்போது இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. முதல் பதிப்பில் இல்லாத பல அருமையான படங்களும் வர்ணப் படங்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நல்ல கடுதாசியில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. காந்தி மகானுடைய ஸ்தூல தேகத்தை இனி பார்க்கக் கொடுத்து வைக்காத நமக்கு இந்தப் புகைப் படங்கள் எவ்வளவோ ஆறுதல் அளிக்கும். இதன் விலை ரூ. 5. தபால் செலவு 10 அணு. விலாசம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ், புது டில்லி.

"நான் தூங்குவேன்" என்று தெய்வத்தினிடம் சொன்னுல் தெய்வம் "சுகமாகத் தூங்கு, உனக்கு மெத்தென்ற படுக்கை போட்டுத் தருகிறேன்" என்று சொல்லி நம்மைத் தட்டித் தூங்கப் பண்ணுகிறது.

"மாட்டோம், நாங்கள் எழுந்து உலக விஷயங்களைக் கவனிக்க வேண்டும். இதோ, இதோ எழுகிறோம்" என்ருல், "எழுந்திரு, குழந்தாய், இதோ பார்; உனக்கு இந்தப் பெரிய வழியை ஏற்படுத்தியிருக்கிறேன். அந்த வழியே போய் நீ நன்மை அடை" என்கிறது.

ஆகையால் தெய்வத்தை நம்பி முன்னேற்றமடையும் வழியை நாமே தேட வேண்டும். —பாரதியார் திருவாக்கு.

அவள் பிரார்த்தனை

எஸ். கிருஷ்ணன்



என் அத்தை மகன் ராமநாதன் ஒரு பாங்கியில் மானேஜர். அவன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு நான் என் மனதில் தோன்றுவதை எழுதுகிறேன். உள்ளத்தில் பொங்கி எழும் எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டும் என்ற அவா என்னை எழுதத் தூண்டுகிறது.

சற்று முன்தான் என் மனைவி கல்யாணி பள்ளிக்கூடம் சென்றாள். ஆம், இருபத்தைந்தாம் வயதில் அவள் உபாத்தியாயினிப் பயிற்சி பெறுவதற்காகப் பள்ளிக்கூடம் போகிறாள். மூன்று மைல் மலை இறங்கிப் போக வேண்டும் அவள். மாலையில் அதே மலை ஏறி வீட்டுக்கு வர வேண்டும். அவள் கால் வலிக்கிறதோ? தலை வலிக்கிறதோ? வானம் இருள்கிறது. மழை மூட்டம் போடுகிறது. அவள் போகிற பாதையில் மழைக்கு ஒதுங்கக்கூட இடமில்லை. ஆனாலும் அவள் போகவேண்டும். பயிற்சி பெற்று ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினி வேலையமர்ந்து எனக்கும் குழந்தை கோபுவுக்கும் சாப்பாடு போட்டுத் தானும் சாப்பிட வேண்டும். பயிற்சி பெறும் வரை அத்தான் ராமநாதன் வீட்டில் இருக்கலாம். அதற்கப்புறமும் இருந்தால் நன்றாயிருக்குமா?

கல்யாணி ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் போகும்போது கோபு அவளருகில் வந்து, "அம்மா நானும்" என்று காலைக் கட்டிக் கொள்கிறான். அப்பொழுது அவனை ராமநாதன் மனைவி ஜயம் வாரி அணைத்துக் கொண்டு, "நீ பெரியவனானப்புறம் பள்ளிக்கூடம் போகலாம். இப்பொழுது என்னோடு விளையாடிக் கொண்டு இங்கேயே இரு" என்று சமாதானம் சொல்லி உள்ளே அழைத்துச் செல்கிறாள். இதே சமயம் சமையலறையிலிருந்து ஜயத்தின் தாயாரின் குரல், "அடியே ஜயம், அடுப்பில் வாழைக்காய் தீயறது. நீ அந்தக் குழந்தையை விட்டு விட்டு இங்கே வா. அப்புறம் அவனை வைத்துக் கொண்டு கொஞ்சலாம்" என்று கேட்கிறது. ஜயம் கோபுவை என்னருகில் விட்டு விட்டுச் சமையலறைக்குப் போகிறாள். கோபுவும் நானும் சில நிமிஷம் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறோம். பிறகு கோபு தாயாருடன் பள்ளிக்கூடத்துக்குப் போக முடியாத தாபத்தை மறந்து தெருவில் விளையாடப் போய்விடுகிறான்.

நான் என் மனைவியுடனும் குழந்தையுடனும் ராமநாதன் வீட்டில் அடைக்கலம் புகுந்து மூன்று மாதமாகிறது. யாருக்கும் பயனில்லாமல் வெட்டிப் பொழுதும் வீண் சோறுமாய்ப் பிறருக்குச் சுமையாய் நான் எத்தனை காலம் இருக்க வேண்டுமோ? என்னால் எத்தனை பேருக்குச் சிரமம்? ஆனால் பெருந்தன்மையே உருவெடுத்தவர்களான ராமநாதனும் ஜயமும் சிரமத்தைச் சிறிதும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் அவர்களுக்கும் என்னால் சந்தோஷமில்லை.

* * *

என்னால் யார்தான் சந்தோஷமடைந்தார்கள்? என் வாழ்க்கையின் போக்கே விசித்திரமானது. என் தகப்பனார் முன்சிப் கோர்ட்டில் குமாஸ்தாவாயிருந்தார். சிரமப்பட்டுத் தன் மூன்று பெண்களையும் சுமாரான இடத்தில் விவாகம் செய்து கொடுத்தார். நான் ஒரே பையன். அவரைப் போல் சொற்ப சம்பளத்தில் நான் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக எப்பாடு பட்டாவது என்னை பி. ஏ. வரையில் படிக்க வைத்தே தீருவது என்று அவர் கனவு கண்டார். ஆனால் நான் படிப்பை வெப்

பங்காயாக எண்ணினேன். வேறு விஷயங்களில் எல்லாம் என் கவனம் செல்லும்.

ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு அல்லது மூன்று வருஷங்கள் உட்கார்ந்திருந்து விட்டு மேல் வகுப்புக்குத் தூக்கி எறியப் படுவேன். எப்படியோ பதினாறும் வயதில் நான் நான்காம் பாரத்தை அடைந்தேன்.


என் தந்தைக்குப் 'பென்ஷன்' ஆக ஆறு மாதங்களே பாக்கி. அவருடைய ஆசைகளொன்றும் என்னால் நிறைவேறாது என்று உணர்ந்த அவர் பொறுமை இழந்து அடிக்கடி என்னை இரைவார். சில சமயம், "யாரைச் சொல்லி என்ன பயன்? நல்ல பிள்ளையைப் பெற முன் பிறவியில் நான் புண்ணியம் செய்திருந்தால்தானே?" என்று தம்மைத்தாமே நொந்து கொள்வார். அவருடைய மன வேதனையைச் சிறிதும் உணராத நான் அவர்மீது ஆத்திரமும் வெறுப்பும் கொண்டேன். வீட்டை வெறுத்தேன். அவரிடம் பேசத் துணிவில்லாத நான் அவர் வீட்டிலில்லாத சமயம் என் தாயார்மேல் ஆத்திரத்தைக் கொட்டுவேன். என்றைக்காவது காலையில் இட்டிலியோ தோசையோ செய்து கொடுக்கவில்லை என்றால் தாயாரை அழ அழ வைப்பேன்.

ஒரு முறை தாயாருக்கு உடம்பு சரியில்லை. ஆகையால் காலையில் தட்டில் பழைய சோற்றைப் பரிமாறிவிட்டு, "சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போய்ச் சேரு" என்றாள். நான் சாப்பிடவில்லை. சாதத்தை அப்படியே தட்டோடு எடுத்துச் சாக்கடையில் கொட்டி விட்டு வந்தேன். தாயார் கோபமும் வருத்தமும் பொங்க, "துரோகி, நீ சோற்றுக்கு ஆலாய்ப் பறக்கப் போகிறாய். அன்னத்தைப் பழிக்காதே" என்றாள். அவள் சொன்னது நடந்துவிட்டது. ஆனால் அந்தக் காலத்தைப் பார்த்துக் கொண்டு தவிக்காமல் என் தாயார் முன்னமேயே போய்விட்டாள்.

நான்காம் பாரத்தில் நான் படிக்கும் போது எங்கள் பள்ளியின் பொன் விழா நடந்தது. விழாவன்று இரவு பெரிய சங்கீத வித்வான் ஒருவர் பாட்டுக் கச்சேரி செய்தார். அவரை நான் பழக்கம் செய்து கொண்டு அவரிடம் சங்கீதம் பயில வேண்டும் என்று விரும்பினேன். கச்சேரி முடிந்த பின் அவரிடம் என் ஆசையைத் தெரிவித்தேன். அவரும் என்னைத் தன் சிஷ்யனாய் ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தார். நான் சங்கீதம் பயிலவேண்டும் என்று ஆசைப்பட்டது என் தந்தைக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. ஆனாலும் அவர் "எப்படியாவது நீ முன்னுக்கு வந்து நன்றாயிருந்தால் சரி" என்று சொல்லி என்னைச் சங்கீத வித்வானுடன் அனுப்பி வைத்தார். ஐந்து வருஷ காலம் குருவுடனிருந்து நல்ல பயிற்சி பெற்றேன். தனியாகப் பாட்டுக் கச்சேரிகளுக்கும் போகலானேன். இந்தச் சமயத்தில் தான் என் தந்தை இறந்தார்.

எனக்குச் சுமாராய் வருமானம் வந்து கொண்டிருந்தது. என் நடத்தையைப் பற்றிக் கவலை கொண்ட என் தாயார் ஒரு பெண்ணைப் பார்த்து எனக்கு விவாகம் செய்து வைத்தாள். அவள்தான் கல்யாணி. மூன்றாம் பாரம் வரையில் படித்திருந்த கல்யாணி என் வீட்டில் நுழைந்த போது என்ன என்ன பொற் கனவுகள் கண்டு கொண்டிருந்தாளோ? ஆனால் அவள் இப்படிக் கஷ்டங்கள் அனுபவிக்க நேரும் என்று கனவிலும் கருதியிருக்க மாட்டாள் என்பது மட்டும் நிச்சயம்.

இரண்டு வருஷகாலம் கல்யாணி என்னைத் திருத்த எவ்வளவோ முயன்றாள். நான் பாட்டுக் கச்சேரியிலிருந்து வந்ததும் என் பணப்பையை எடுத்து ஒளித்து வைத்துப் பார்த்தாள். இரவில் நான்




வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது என்று என் கால்களில் விழுந்து கெஞ்சினள், அழுதாள். ஆனல் ஒரு பலனும் ஏற்படாமற் போகவே கடைசியில் அவள் என் வழியில் குறுக்கிடுவதையே நிறுத்தி விட்டாள்.

நான் பிரபலமடைந்தேன். இருநூறு ரூபாய் முந்நூறு ரூபாய் என்று ஒரு கச்சேரிக்கு வாங்கலானேன். மாதம் இருபத்தைந்து ரூபாய் விகிதம் ஊதியம் கிடைத்த நான்கு 'டியூஷன்கள்' வேறு எடுத்துக் கொண்டிருந்தேன்.

ஆனல் அந்தப் பணமெல்லாம் மிக வெட்கக்கேடான முறையில் என்னல் செலவு செய்யப்பட்டு வந்தது. என் தாய் இறந்த போது அவளுடைய சமச் சடங்குகளை நிறைவேற்றக் கல்யாணியின் கையிலிருந்த வளையல்களை விற்க வேண்டிய தாயிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. இன்று என்னையும் என் மனைவியையும் காப்பாற்றும் ராமநாதன் ஒருநாள் என் வீட்டுக்கு வந்திருந்தான். அவன் அப்பொழுது ஏழைதான். பாவம். நான் நிறையச் சம்பாதிப்பதாகக் கேள்விப்பட்டு என்னிடம் உதவி நாடி வந்திருந்தான். முன் தினம் ஒரு சங்கீதக் கச்சேரியில் கிடைத்த பணத்தை ஒழித்து விட்டுக் காலையில்தான் நான் வீட்டுக்கு வந்திருந்தேன்.



ராமு என்னிடம் வந்து, "அம்மாஞ்சி!" என்று கூப்பிட்டுவிட்டுத் தயங்கினன். அவன் முகத்தில் ஒருவிதமான பயமிருந்தது. சற்றுப் பொறுத்து, "அம்மாஞ்சி, உன்னிடம் ரூபா யிருந்தால் ஒரு பத்து ரூபாய் கொடு. வருஷ ஆரம்பம், புத்தகம் வாங்க வேணும். சொக்காயே இல்லை. இரண்டு சொக்காய் தைக்க வேணும்" என்ருன். நான், "என்னிடம் கையில் காலணாகூட இல்லை" என்றேன். பொய் சொல்லவில்லை. நான் அப்பொழுது வெறும் கையுடன்தான் வீட்டுக்கு வந்திருந்தேன். ராமநாதன் சற்றுத் தயங்கிவிட்டு, "சரி, அப்படியானல் நான் போய் வருகிறேன்" என்ருன். அவன் கண்களில் ஏமாற்றத்தால் ஏற்பட்ட வருத்தம் தோய்ந்திருந்தது.

அதே சமயம் அங்கே வந்த கல்யாணி அவனிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து, "இதைக்கொண்டு வேண்டுமென்பதை வாங்கிக்கொள்" என்ருள். அவளுடைய அண்ணன் புடவை வாங்கிக் கொள்வதற்காக அவளுக்குக் கொடுத்திருந்த பணம் அது.

* * *

மூன்று வருஷங்கள் ஓடின. இந்த மூன்று வருஷங்களைப் பற்றி நினைக்கக்கூட எனக்கு அவமானமாயிருக்கிறது. மூன்றும் வருஷக் கடைசியில்தான் குழந்தை கோபு தர்ம ஆஸ்பத்திரியில் பிறந்தான்.

உள்ளே ராமநாதன் மனைவி ஜயத்துக்கும் அவள் தாயாருக்கும் இடையே நடக்கும் சம்பாஷணை என் காதில் விழுகிறது. என் யோசனை குலைகிறது. ஜயத்தின் தாயார் "ராணி ஒரு மட்டுக்கும் பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டுப் போய் விட்டாள். அவளுக்குச் சுடச்சுடப் பொங்கிப் போட்டு மத்தியான டிபனும் பண்ணிக் கொடுத்தாயிற்று. இனிமேல் தின்னைத் தூங்கிக்கு வெந்நீர் போட்டு வைக்கனும். துரைவாள் குளித்து விட்டுச் சாப்பிட வர வேண்டுமோ, இல்லையோ? இவர்களுக் கெல்லாம் உழைத்து என் பிராணனே போய்விட்டது. உன்னைத்தான் பெற்றேன். உனக்கு உழைக்கக் கடமைப்பட் டிருக்கிறேன். ஆனல் எங்கேயோ கிடந்தவர்களுக் கெல்லாம் கூட நான் உழைக்க வேணும்

என்று என் தலையில் எழுதினானே, பிரமன்!'' என்று கல்யாணியையும் என்னையும்தான் குறிப்பிடுகிறாள்.

ஜயம், "அம்மா! நீ பேசாமல் போய் படுத்துக்கொள். உனக்கு உடம்பு நன்னாவில்லை. வீணாய் வார்த்தையைச் செலவிடாதே. நானே எல்லாவற்றையும் செய்து கொள்கிறேன். தொலையாத காரியம் என்ன வந்துவிட்டது?'' என்று தாயாருக்குச் சாந்தமாய்ப் பதில் சொல்கிறாள்.

தாயாருக்கும் பெண்ணுக்கும் எவ்வளவு வித்தியாசம்! அந்த அம்மாள் சொல்வதற்காக அவளை நான் நோகவேண்டிய அவசியமில்லை. அவள் சொல்வது உண்மை. என் மேல் இரக்கம் ஏற்படும்படி நான் அவளுக்கு உறவா அல்லது ஏதாவது உபகாரம்தான் முன்னால் செய்திருக்கிறேனா? ஏதோ புண்ணியத்துக்கு ராமநாதனும் ஜயமும் எங்களைத் தங்களுடன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

எனக்கு என்னைப் பற்றி வருத்தமில்லை. ஆனால் கல்யாணியைப் பற்றித்தான் வருத்தப்படுகிறேன். 'என் மனைவி' என்ற குற்றத்துக்காக அவள் படும் கஷ்டம் எப்பொழுதுதான் தீருமோ?

இந்த வீட்டில் நாங்கள் தஞ்சம் புகுந்த போது ஜயத்தின் தாயார் இங்கே இல்லை; தன் கிராமத்தில் இருந்தாள்.

ராமநாதன் முயற்சி எடுத்துக் கல்யாணியை டிரெயினிங் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினிப் பயிற்சி பெறுவதற்காகச் சேர்த்தபோது கல்யாணி காலை எட்டரை மணிக்குச் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்குப் புறப்படவேண்டியதாயிருந்தது. அதற்குள் சமையல் செய்வது ஜயத்துக்குச் சிரமமாக இருந்தது. கல்யாணிக்கோ பள்ளிக்குத் தயார் செய்யவேண்டிய பாடங்கள் காரணமாக காலையில் வீட்டு வேலையில் ஜயத்துக்கு ஒத்தாசை செய்ய முடியவில்லை. அதனால்தான் ஜயம் ஊரிலிருந்த தன் தாயாரை வரவழைத்தாள்.

அன்று 'ஒருநாள் மத்தியானம் கல்யாணியை உட்கார வைத்து ஜயம் தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். சமையலறையில் சிற்றுண்டி தயார் செய்துகொண்டிருந்த ஜயத்தின் தாயார் "கண் தெரிகிறதா இந்தக் கிழட்டுக் கழுதைக்கு? கை பொசுங்கிப் போய் விட்டது'' என்று தன்னை நொந்து கொண்டாள். ஜயம் சட்டென்று எழுந்து சமையலறைக்குப் போனதும் ஜயத்தின் தாயார், "போய் அவளைப் பின்னிச் சிங்காரித்து விட்டுவா. நான் இங்கே வெந்நீரைக் கையில் கொட்டிக் கொண்டால் என்ன? வெந்து மடிந்தால் தான் உனக்கு என்ன?'' என்று இரைந்தாள்.

ராமநாதன் ஞாயிற்றுக் கிழமையானதால் வீட்டிலேயே இருந்தான். அவன், "ஜயம், நாளைக்கே ஒரு சமையற்காரியை ஏற்பாடு செய்து கொள். உங்கம்மா பேச்சு எனக்குக் கேட்கப் பிடிக்கவில்லை. அவள் வாய் திறவாமல் இருந்து சாப்பிட்டு விட்டுப் போனாலே போதுமானது'' என்றான்.

ஜயம் முன்புறத்தில் அவனிருந்த அறையில் வந்து, "உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. எங்களுக்குள்ளே பதினாயிரம் இருக்கும். நீங்கள் தயவு செய்து தலையிட்டுக் கலகத்தை உண்டாக்காதீர்கள்'' என்று கெஞ்சினாள்.

"கலகமாவது, கிலகமாவது? உங்களுக்குள்ள பதினாயிரமும் உங்களுடன் மட்டுமிருக்கக் கூடாதா? உன் அம்மா பேசும் பேச்சு பிறரையும் அல்லவா புண்படுத்தும் போலிருக்கிறது!'' என்றான் ராமநாதன்.

"நான் யாருக்கென்றுதான் ஆடுவேன்!'' என்று தன் கண்களைத் துடைத்துக் கொண்டே உள்ளே போனாள் ஜயம்.

நேற்று சிவராத்திரி. ஜயத்தின் தாயார் குளித்து விட்டுப் பூஜைக்கான ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள். அந்த அம்மாள் பூஜை நைவேத்தியத்துக்கு என்று எடுத்து வைத்திருந்த பழத்தை எடுத்துக் கோபு தின்றுவிட்டான். இதைப் பார்த்த ஜயத்தின் தாயார், "அட பாவி, உன் வயிறு வெடித்துத்தான் போகும். சுவாமிக்கு வைத்திருப்பதை எடுத்துத் தின்கிறாயே!'' என்று இரைந்தாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜயம் கொதிப்புடன், "அம்மா, குழந்தையை என்ன சொல்கிறாய்? தெரியாமல் அவன் பழத்தைத் தின்று விட்டதற்காக உன் பகவான் கோபித்துக் கொள்ள மாட்டார். அவனை நீ வைதால்தான் கடவுளுக்குப் பொறுக்காது. இத்தனை வயதாகியும் உனக்கு இது தெரியவில்லையே!'' என்றாள்.

ஒரு கணம் பிரமித்துப்போய்ப் பெண்ணையே பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு ஜயத்தின் தாயார், "பெற்றவள் கூட வாயைத் திறக்கவில்லை, உனக்கென்னடி

அவ்வளவு கர்வம் வந்து விட்டது?" என்றான்.

"ஆம், பெற்ற தாயார் பேசமாட்டாள் என்ற தைரியம்தானே உன்னை இப்படிப் பேசச் சொல்கிறது! இனிமேல் நீ இப்படி எல்லோரையும் குத்தலாய்ப் பேசிக் கொண்டிருக்க முடியாது" என்று பதிலளித்தான் ஐயம்.

"அப்படியானால் நான் உங்களுக்கெல்லாம் அடிமையாகப் படிந்து இடக்கணும் என்கிறாயா? அது என்றும் முடியாது, அம்மா. நான் நாளைக்கே ஊருக்குப் போய்விடுகிறேன்" என்றாள் ஐயத்தின் தாயார்.

"போவதுதான் நல்லது என்று எனக்கும் படுகிறது. எனக்கு உன்னைப் பார்க்க வேணும்போலிருந்தால் வந்து பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறி விட்டுக் கோடுவை இடுப்பில் வைத்துக் கொண்டு வாசற்புறம் சென்றுவிட்டான் ஐயம்.

ஐயத்தின் தாயாருக்கோ நாங்கள் இங்கே வந்து ஐயத்துடன் தங்கியிருப்பது கட்டோடு பிடிக்கவில்லை. ஆனால் ராமநாதனுக்கும் ஐயத்துக்கும் நாங்கள் இங்கே வந்து தங்கியிருப்பதில் மனதுக்குச் சற்றும் அதிருப்தியில்லை. அதன் காரணமாகத்தானே ஐயத்துக்கும் ஐயத்தின் தாயாருக்கும் அடிக்கடி மனஸ்தாபம்கூட முற்றிவிடுகிறது! இதற்கெல்லாம் மூலகாரணம் கைகளும் கால்களும் வாதத்தினால் முடக்கப்பட்டுத் துன்பமுறும் ஆத்மாவான நான்தானே! எப்பொழுதும் நோயாளியான என்னை மணந்து கொண்டு கல்யாணி தான் என்ன சுகத்தைக் கண்டாள்? எதற்கும் உதவாக்கரையாகப் பிறருக்குப் பாரமாக நான் உயிர் வாழ்வதை விட இறந்து விடுவதே மேல் அல்லவா! நான் தற்கொலை செய்துகொண்டு விட்டால் என்ன?

ஆனால் ஒரு வாரத்துக்கு முன்னால் நடந்த சம்பவம் என் முடிவை அடியோடு மாற்றிக் கொள்ளும்படி செய்து விட்டது!

அன்றொரு நாள் கல்யாணி பள்ளியிலிருந்து மாலையில் வீட்டுக்கு வந்து கொண்டிருக்கும் போது கால் இடறிக் கீழே விழுந்து விட்டாள். இரவு ஐயம் அவள் காலில் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஐயத்தின் தாயார், "நீ கஷ்டப் பட்டுப் படித்து விட்டுச் சம்பாதித்துப் போடு. உன் புருஷன் சாப்பிட்டு விட்டு இப்படியே திண்ணையில் உட்கார்ந்திருப்பான்" என்றாள். அதற்குக் கல்யாணி "அப்படியாவது அவர் உயிர் வாழ்ந்தால் சரி. நான் தீர்க்க சுமங்கலியாக இருக்க வேண்டும் என்று



தூங்கிய பையன்:—அம்மா! நல்ல காலம்! நீ என்னை எழுப்பினே! நான் ஒரு சொப்பனம் கண்டேன்! என்னை ஒரு சிங்கம் தூக்கிக் கொண்டு ஓட்டோட வந்து விட்டது. நீ எழுப்பி விடாவிட்டால் அது என்னைப் பிடிச்சுத் தின்றிருக்கும். தப்பிச்சேன்!

ஆசி கூறுங்கள், மாமி!" என்றாள் தழு தழுத்த குரலில்.

சில நிமிஷங்களுக்குப் பின் என் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு, "பகவான் நம்மை எவ்வளவு பரிசுித்தாலும் என் தாலிப் பிச்சையை மட்டும் குறைவில்லாமல் வைக்க வேண்டும் என்று நான் சதா பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள் கண்ணீருக்கிடையே.

* * *

அவளுடைய பேச்சைக் கேட்டதும் என் மனம் அடியோடு மாறிவிட்டது. நான் என் உயிருக்குயிரான கல்யாணிக்காகவும், என் குல விளக்கான கோபுவுக்காகவும் உயிர் வாழ வேண்டியது தானே நியாயம்!

நான் உலகத்தின் கண்களுக்கு வேண்டுமானால் உதவாக்கரையாக இருக்கலாம். ஆனால் கல்யாணிக்கோ நான் தானே சர்வமும்! பாரதநாட்டுப் பெண்கள் மாங்கல்ய பலத்தைப் பிரதானமாகக் கொண்டு தானே உயிர் வாழ்கிறார்கள்! பதியை விட்டால் அவர்களுக்கு வேறு தெய்வமேது!

ஆகவே நான் கல்யாணிக்காக, இந்த நோயுடனும், யமனுடனும் எதிர்த்துப் போராடி எப்படியாவது உயிர் வாழ்ந்தே தீருவது என்று முடிவுக்கு வந்து விட்டேன்.

சங்கீத சம்சாரம்

என். என்.

ஒரு பிரபல மனோ தத்துவ ஆசிரியர் 'ஒவ்வொரு மனிதனுக்கும் சிறிதளவாவது மூளைக் கோளாறு இருக்கத்தான் செய்கிறது. அது ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விதமாக வெளிப்படுகிறது' என்று சொல்லியிருக்கிறார்.

ஆனால் நான் மீனாவைக் கலியாணம் செய்துகொண்ட பொழுது, அவளுடைய மூளையில் எவ்விதக் கோளாறும் இருக்குமென்று சிறிதளவும் சந்தேகப்படவில்லை. "நல்ல அழகும், படிப்பும், சங்கீதத் தேர்ச்சியும் உள்ள மனைவி நமக்குக் கிடைத்தது நமது அதிர்ஷ்டம்தான்!" என்று எண்ணிப் பூரித்தேன். நாளாக ஆக, அவளுக்குச் சங்கீதப் பித்துப் பிடித்துவிட்டது என்பது வெளியாகியது. அபரிமிதமான சங்கீதத்தால் அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, அல்லது பைத்தியத்தால் சங்கீதத்தில் மூழ்கி விட்டாளா என்பதே புரியவில்லை!

எந்த வேளையில் முதன் முதலாக அவள் ஹார்மோனியத்தை எடுத்து வைத்துக் கொண்டு, 'ஸரிகம' வரிசைகளைக் கற்க ஆரம்பித்தாளோ, அவளுக்கு இப்படிச் சங்கீதப் பைத்தியம் பிடித்து விட்டதே! மூன்றே வருஷங்களில் ஹார்மோனியத்தில் கரை கண்ட வித்வாம்சியாகி விட்டாள்! பின்னர் பிடில் கற்க ஆரம்பித்தாள். பிடில் வாசிப்பு இரண்டரை வருஷங்களில் முடிந்தது. அதற்கடுத்தாற் போல் வீணைப் பயிற்சி நடந்தது. 'வைணிகர்' பட்டம் பெற்ற பின், தற்சமயம் அவள் புல்லாங்குழல் ஊதிக் கொண்டிருக்கிறாள். எங்கள் வீட்டைத் தாண்டி நீங்கள் எந்தச் சமயத்தில் போக நேரிட்டாலும், உங்கள் காதில் வேணுகானம் கேட்கும் என்பதில் சந்தேகமில்லை! குழலுக்கு அடுத்தாற்போல் 'ஸிதார்' வாத்தியமா அல்லது கோட் வாத்தியமா, அல்லது நாதஸ்வரமா என்பது இன்னும் நிச்சயப்படவில்லை என்று தெரிகிறது. அரை மணிக்கொரு தடவை, "பிடிலுக்குத் தந்தி வேண்டும்" என்றோ; "ரோஜனம் ஆகி விட்டது. வாங்கி வாருங்கள்" என்றோ ஏதாவது கேட்டுக் கொண்டே என் பிராணனை வாங்குவது அவளுக்கு வழக்கமாகி விட்டது!

ரேடியோ நிலையங்களிலாவது பல சமயங்களில் இடை வேளை இருக்கிறது; வாத்தியங்களுக்கும் மனிதர்களுக்கும் ஓய்வு அளிக்கிறார்கள். ஆனால், என் வீட்டில் சங்கீதத்தைப் பற்றிய வரை ஓய்வு என்பதே கிடையாது!

மீனாவின் சங்கீதத்தால் எனக்கு என்ன கஷ்டம் அல்லது தொந்தரவு என்று யாராவது கேட்கலாம். 'சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டிருக்க வலிக்கிறதோ?' என்றும் வினவலாம்.

மீனாவின் சங்கீதப் பித்தால் ஏற்பட்ட முதல் விபத்து எனக்கு வயிற்று வலி உண்டானதுதான். ஆம். அவள் சமைத்த சாப்பாட்டைச் சாப்பிட்டவர்கள் யாரா யிருந்தாலும் சரி, அவர்களுக்குக் கண்டிப்பாக வயிற்று வலி வந்துதான் தீரும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!

'தன்யாசி ராகத்திலிருந்து தோடி ராகத்திற்கு எப்படித் தாவுவது' என்று ஆராய்ச்சி செய்த வண்ணம் சாம்பாருக்கு உப்புப் போட மறந்து விடுகிறாள்; அல்லது இரண்டு தடவை போட்டு விடுகிறாள்! தோசைக் கல்லில் மாவை ஊற்றி விட்டு, பல்லவி பாடத் தொடங்கி விடுகிறாள். ஸ்வரம் பாடி முடிப்பதற்குள் தோசை இரும்புத் தகடாக மாறி விடுகிறது! இதே மாதிரி ஒவ்வொரு பண்டமும் ஒவ்வொரு விதமாகச் சீரழிந்து, உருக்குலைந்து வருகிறது! ஏதாவது கேட்டால், 'பாட்டில் மறந்தே போய்விட்டேன்!' என்ற பதில் தான் கிடைக்கிறது!

கொஞ்ச காலமாக மீனா ராகங்களின் குணங்களைப் பரிசீலனை செய்யத் தொடங்கியிருக்கிறாள். ஒவ்வொரு ராகமும் ஒவ்வொரு குணமுடையது என்பது உண்மைதான் என்று கூறுகிறாள். நான் சற்றுக் கோபமாக இருந்தால், என்னை, மோகன ராகம் பாடிச் சாந்தப்படுத்திவிட முடியும் என்கிறாள். 'ஆனந்த பைரவி'யால் என்னைச் சந்தோஷப்படுத்த முடியும் என்றும், குந்தலவராளியால் சோகத்தில் ஆழ்த்த முடியும் என்றும், இன்னும் என்னவோ ராகங்களால் என்னவோ செய்விக்க முடியும் என்றும் கூறுகிறாள்!

'எந்த ராகம் பாடினால் உனக்குப் பிடித்திருக்கும் சங்கீதப் பித்தம் தெளியும்?' என்று அவளைக் கேட்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்!

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

225. ராமனிடம் சமர்ப்பிக்கிறேன் உன்னை!

சிறையிலிருக்கும் சீதைக்கு ஒரே எக்களிப்பு. "உலகத்திற்க் காண முடியாத அன்பையும் அருளையும் அல்லவா ராமன் என்னிடத்தில் காட்டுகிறான். இந்தச் சிறையிடந்தான் தெரிந்து விட்டதே அவனுக்கு. அனுமன் அல்லவா துணை" என்றெல்லாம் எண்ணுகிறாள். "ஜன்ம சாபல்யமே கிடைத்து விட்டது. இந்த க்ஷணமே உயிர் போகட்டும், ஒரு குறையுமில்லை" என்று அபூர்வமான பெருமிதத்தோடு பேசுகிறாள்.

மாண்டனென் என்னும் பழுதன் றே:
இன்றே மாயச் சிறைநின் றும்
மீண்டனென்; என்னை ஒறுத்தா ரைக்
குலங்க ளோடும் வேரறுத் தேன்:
பூண்டனென் எங்கோன் பொலங்கழல் கள்:
புகழே யன்றிப் புன்பழி யும்
நீண்டனென், என்று மனமகிழ்ந் தாள்
திருவின் முகத்துத் திருவன் னாள்.

[இன்றே மாயச்சிறை நின்றும் மீண்டேன்: யாராலும் கண்டு பிடிக்க முடியாத இந்தச் சிறையினின்றும் இப்போதே மீண்டேன்: என்னை ஒறுத்தாரை: என்னைத் துன்புறுத்திய அரக்கரை; பூண்டேன் எங்கோன் பொலங் கழல்கள்: என் நாயகன் ராமனது அழகிய திருவடிகளைத் தலைக்கு அணியாகப் பூண்டு கொண்டேன்;—ராமனை வணங்கும் பாக்கியம் இப்போதே கிடைத்து விட்டது; புகழே யன்றிப் புன்பழியும் நீண்டேன்: புகழ் என்னை வந்து அடையுமே அன்றாமல் கேவலமான பழி என்னை அடையாது; திருவின் முகத்துத் திருவன்னாள்: ஆனந்தமும் அழகும் முகத்தில் பொங்கிய லக்ஷ்மிக்குச் சமானமான சீதை.

குறிப்பு:—மீளாச் சிறையில் இருந்த சீதையின் மனதில் எத்தனையோ ஆசைகளும் ஏக்கங்களும் வந்து வந்து போகும். அவ்வளவும் சித்தியாய்விட்டால் என்ன ஆனந்தம் ஏற்படுமோ அந்த ஆனந்தம் ஏற்பட்டு விட்டது. அனுமனைப் பார்த்த மாத்திரத்தில். அந்த க்ஷணமே உயிர் போய்விட்டால் குற்றமில்லை என்பது. ஒரு அற்புத ஆனந்தத்தின் உச்சத்தைக் காட்டுகிறது.]

* * *

பார்த்தான் அனுமான்—சீதையின் அன்பையும் ஏக்கத்தையும்! "ராமனைக் கிட்டாமல் இருந்தால் இவள் பாடு என்ன ஆகும்? அரக்கர்களால் இவளுக்கு என்ன ஆபத்து வருமோ? அடடா, துணை என்று சொல்லுவதற்கு இங்கு ஒருவன்கூட இல்லையே" என்று நைகிறான்.

தான னன தன்ன னன
தன்ன னன தன் ன

உண்டு துணை என்ன, இவன்
ஒன்று மிலை அம் மா;
புண்ட ரிகை போலும் இவள்
இன்னல் புரி கின் றள்;
அண்ட முதல் நாய கனை(யு)
ஆவி அனை யா னைக்
கொண்(டு) அகல்வ தெங ஙனம்
என்று அயர்வு கொண் டான்.

[உண்டு துணை என்ன இவன் ஒன்றுமிலை அம்மா: துணை போன்று இங்கே அடடா ஒன்றுமே இல்லை; (அம்மா: அடடா!) புண்டரிகை போலும் இவள்: தாமரையில் இருக்கும் லக்ஷ்மி போன்ற இவள்; இன்னல் புரிகின்றாள்: எவ்வளவோ துன்பத்தை அனுபவிக்கின்றாள்; அண்டம் முதல் நாயகனை

ஆவி அனையாளை: பரப்பிரம்மத்தோடு ஒத்துச் சொல்ல வேண்டிய அந்த ராமனுக்கு உயிர் போன்ற இவளை; கொண்டு அகல்வதே கருமம் என்று: எடுத்துக் கொண்டு திரும்புவதே என் கடமை என்று; உணர்வு கொண்டான்: உறுதி பண்ணி விட்டான்.]

சீதையின் பரிதாப நிலையைப் பார்க்க இயலாதவனாய், அவளை அப்படியே எடுத்துக் கொண்டு போவதே சரியான காரியம் என்று எண்ணினான். அதைச் சீதையிடம் சொல்லுகிறான். "தாயே நான் சொல்லுவதைக் கேட்க வேண்டும்; என்னைக் கோபிக்கக் கூடாது. பகைவர்கள் உங்கள் உயிரை வாங்கி விடுவது என்று ஏற்பட்டு விட்டால்!—பிறகு அந்த ராவணனை வெல்லுவது ஒரு காரியமாகுமா?"

கேட்டி அடி யேனு ரை:
முனிந்த ருளல்: கே ளிர்
விட்டி யிடு மேல்,அ வனை
வேறல் வினை அன் றால்:
நீட்டி யினி என்ப யன்?
இராமன் எதிர் நின் னைக்
காட்டி அடி தாழ்வென் இது
காண்டி: இது கா லம்!

[கேட்டி அடியேன் உரை: என் வார்த்தையைக் கொஞ்சம் கேட்கவேண்டும்; முனிந்து அருளல்: தயவு செய்து கோபிக்காமல் இருக்க வேண்டும்; கேளார் விட்டிடும் மேல்: பகைவர்கள் உன்னை மாய்த்து விட்டாலோ! அவனை வேறல் வினை அன்றால்: அந்த ராவணனை வெல்லுதல் ஒரு காரியம் அல்லவே: வேறல்: வெல்லுதல்: உன் பொருட்டுத்தானே அவனோடு போர் செய்யவேண்டும். நீட்டி இனி என் பயன்: இந்த விஷயமாக நான் நீளமாய்ப் பேசுவதால் என்ன பிரயோசனம்; ராமன் எதிர் நின்னைக் காட்டி அடி தாழ்வென்: உன்னை எடுத்துக்கொண்டு போய் ராமன் முன்னிலையில் வைத்து நமஸ்கரிப்பேன்; இது காண்டி: இது உறுதி என்று கொள்வாயாக; இது காலம்: மேலும் இது தான் தருணம்-ராமனிடம் உன்னை கொண்டு சேர்க்க.]

அனுமன் சீதாபிராட்டியை எங்கே காணப் போகிறோம் என்று எண்ணினான். காணவே முடியாது என்று கூட எண்ணினான்.

அந்த நிலையில் அவளைக் கண்டு கொண்டான். உள்ளம் இப்படியும் அப்படியுமாக எப்படி யெல்லாமோ பாய்கிறது. தனியாய் இருக்கிறாளே என்று கவலை. அவளுக்குக் கேடு நேர்ந்துவிடக் கூடாதே என்று பயம். இத்தனை உணர்ச்சிகளும் செய்யுளில் பாவாக உருவெடுக்கின்றன.

அனுமனது உள்ளத்தின் படபடப்பை ஓசைகளும் தாளங்களும் வெளியாக்குகின்றன.

கவிகளுக்கு ஞாபகச் சின்னம்

பாரதியார் திருவாக்கு

★

[நம்முடைய கவிகளைப் போற்றி அவர்களுக்கு ஞாபகச் சின்னங்கள் அமைக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை மகாகவி பாரதியார் கீழ்க்கண்ட கட்டுரையிலே ரொம்பவும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்.]

தமிழ் நாட்டு வீரருக்கும் கவிகளுக்கும் இதுவரை எவ்விதமான திருவிழாவையும் காணவில்லை. பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித் தவறி ஓரிருவர் தோன்றினாலும் அவர்களுக்குத் தக்க மதிப்பு இராது. பண்டைக் காலத்துச் சக்திமான்களை வியப்பதும், அவர்களுடைய பெருமையை உலகமறிய முழக்குவதும், கூடியவரை பின்பற்ற முயல்வதுமாகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சக்திமான்களை என்ன வகையிலே கணிப்பார்கள்?

எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது; எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்துபோகும்; பழக்கத்தில் இல்லாத திறமை இழந்துவிடப்படும். அறிவுடையோரையும் லோகோபகாரிகளையும் வீரரையும் கொண்டாடாத தேசத்திலே அறிவும் லோகோபகாரமும் வீரமும் மங்கிப்போகும். தமிழ் நாட்டில் இப்போது 'புதிய உயிர்' தோன்றியிருப்பதால் நாம் இவ்விஷயத்தில் தமோ குணஞ் செலுத்தாமல் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகா கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங்களும் ஏற்பாடு செய்யவேண்டும்.

பெண்கள் நாகரிகம்

பட்டு

என் 'கிருஹலக்ஷ்மி' தையற்காரனோடு சண்டையிட்டுக்கொண்டிருக்தாள்:

"என்னப்பா இது! ஜாக்கெட் தைக்கக் கொடுத்து நாலு நாளாகிறது: இன்னும் கொண்டுவந்து கொடுக்கவில்லையே! நீ தைத்துக் கொண்டு வருவதற்குள் 'பாஷன்' மாறிவிடும் போலிருக்கிறதே!"

அதில்தான் எவ்வளவு உண்மை அடங்கியிருக்கிறது! வேகமாகச் செல்லும் மோட்டார் கார்கள், 1946 'மாடல்' 1947 'மாடல்' என்று வருஷத்திற்கொரு முறை மாறினால் ஸ்திரீகளின் நாகரிகம் மாதமொரு முறை, தினமொரு முறை, ஏன் மணிக்கொரு முறைகூட மாறும்! ஸ்திரீ நாகரிகத்தின் வேகத்தைக் கண்டு உலகமே பிரமிக்கிறது! மனிதன் திணறித் திக்குமுக்காடிப் போகிறான்!

மாலை வேளையில் மெரினா கடற்கரையிலோ உத்தியானவனங்களிலோ, அன்றி சைனா பஜார், மவுண்ட் ரோட் போன்ற ஜன சந்தடி நிறைந்த பெரிய வீதிகளிலோ ஒருபுறமாக நின்று கவனியுங்கள். விதவிதமான வர்ணச் சேலைகளுடனும் ஜம்பர்களுடனும் மகரந்தத் தூளின் (முகப் பவுடர்) நறுமணத்தை வாரி இறைத்துக்கொண்டு பட்டாம் பூச்சிகள் போல் அங்குமிங்கும் உலாவி வரும் நாகரிக நாரிமணிகள் உங்களை ஒரு மாந்திரீக உலகிற்கு அனுப்பிவிடுவார்கள்!

இளம்பெண்களின் தலையை இழைய வாரித் தாழம்பூவைத்து இறுக்கிப் பின்னிப் பாட்டிமார்கள் மகிழ்ந்த காலம் மலையேறி விட்டது. 'எஸ்' கட்டு, 'லைகின்' கட்டு, 'சக்கரக்' கட்டு என்று கூந்தலைச் சிங்காரித்துக் குதூகலித்த அரட்டுத்தனத்தை எண்ணி நகைக்கிறது இன்றைய இளம்பெண்கள் உலகம்!

இப்பொதெல்லாம் ஒரு பெண்மணி ரொம்ப நாகரிக முன்னவள்தானா என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவள் தலையில் எத்தனை பின்னல்கள் இருக்கின்றன வென்று எண்ணிப் பார்க்க வேண்டும். கேசத்தை இரண்டாகப் பின்னிக் குதிரையின் லகானைப் போல், பிடரியின் இருபுறமும் தொங்கவிட்டுக் கொண்டிருப்பவள்தான் நாகரிகத்தின் சிகரத்தைக் கண்டவள்!

முன் புறத்துக் கூந்தலை மேல் நோக்கி சுருள் பூரி மாதிரிச் சுருட்டிவிட்டு, பின் தலை மயிரை ஜாங்கிரி மாதிரி சுற்றியோ அல்லது அடைபோல் தட்டியோ ஒரு மெல்லிய கருப்புவலைப் பைக்குள் போட்டு வைப்பது ஒருபடி உயர்ந்த பாஷன். ஆனால் 'விரித்த செஞ்சடை யாட' வரும் ஆங்கிலோ இந்திய அரம்பையரைப் பின்பற்றித் தலை மயிரை க்ஷவரத் தொழிலாளியிடம் ஒப்படைக்கும் தீவிரவாதிகளான அழகியரின் நாகரிகத்தை வர்ணிக்க யாரால் முடியும்?


ஆடை நாகரிகம் துரிதமாக முன்னேறி வந்து மீண்டும் பின்னுக்கு அடித்துக் கொண்டு போயிருக்கிறது.

அன்றொரு நாள் என் சஹதர்மிணி "புடவைக் கடையில் புத்தம் புது 'பாஷனில்' ஒரு புடவை வந்திருக்கிறது. 'மீரா' உடலில் 'ஐஸ் கிரீம் பார்டர்' ஒரு பக்கம்; இன்னொரு பக்கம் 'பெங்களூர்'. எவ்வளவு நன்றாயிருக்கிறது தெரியுமா?" என்றாள்.

அப்படி என்னதான் அபூர்வமான புடவையோ என்று கடைக்குப் போய்ப் பார்த்தால் அது எங்கள் பாட்டி நாளில் 'பாஷனா'யிருந்த சன்ன வாழைப் பூப் புடவையாக இருந்தது!

பாட்டிமார்கள் உடுத்திக் கிழித்த புளியங் கொட்டை, சன்ன வாழைப் பூ, பெரிய வாழைப் பூ முதலிய ரகங்களெல்லாம் புதிய புதிய பெயர்களில் புனர் ஜன்மமெடுக்க ஆரம்பித்து விட்டன. புடவை விஷயம்தான் இப்படியென்றால் ஜாக்கெட் விஷயம் இதற்கு மேல்!

முதலில் கை (ஜாக்கெட்டின் கைதான்) கொஞ்சங் கொஞ்சமாகத் தோள் பட்டையை நோக்கி ஓட ஆரம்பித்து 'இது ஜாக்கெட்டா, அல்லது 'ஸாண்டோ பனியனா' என்ற சந்தேகத்தை உண்டாக்கியது. அதன் பிறகு கொஞ்சங் கொஞ்சமாக இறங்கி நடுத்தர நிலைக்கு வந்து 'பப்பும்' 'கப்பும்' 'பிரில்லும்' மல்லிகை மொட்டும் ரோஜா மொட்டும் வெற்றிலை மடிப்புமாக விளங்கியது. அதுவே இன்னும் கொஞ்சம் முன்னேறி மேல்நாட்டுப் பெண்களின் 'பிராக்' (Frock)கின் பாணியில் உயர்ந்த புஜங்களுடன் காட்சியளிக்கத் தொடங்கியது! இப்பொழுது அந்த நாகரிகம் எல்



மனைவி:—விளையாட்டாகக் கொஞ்சம் 'டான்ஸ்' சொல்லிக்கொடுத்தேன். குழந்தை எவ்வளவு அழகாய் ஆடறது பாருங்கோ!

கணவர்:—போதும் நிறுத்து. இப்ப விளையாட்டாத்தான் இருக்கும். நாளைக்கு அதுவே விளையாக முடிந்தாலும் முடியும்.

லாம் மறைந்து விட்டது. முழங்கை வரையில் மூடிக்கொண்டிருக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பாட்டி காலைய 'சோளி' ரவிக்கை ஆடை நாகரிகத்தை ஆட்சிபுரியத் தொடங்கிவிட்டது! அது தான் இப்போதைய 'பாஷ'னும். யாரைப் பார்த்தாலும் ஒரே 'சோளி' மயம்!

'மாதவியின் அஞ்சனம் தீட்டிய கயல் விழிகளைக் கண்டு கோவலன் மதி மயங்கினான். கண்ணுக்கு மை தீட்டாததால் கண்ணகி கணவனின் அன்பை இழந்தான்' என்று பயமுறுத்தும் விளம்பரத்தைப் பார்த்தவுடன் என் மனைவி மை டப்பா வாங்கிக்கொண்டு வரக் கடைக்கு ஓடினான்.

நேற்று 'காளிகா' ஸ்நோவை உபயோகித்துத் தன் அழகைப் பாதுகாத்து வருவதாக விளம்பரத்தில் கூறிய சினிமா நட்சத்திரம் இன்று 'சாந்தாயி' ஸ்நோவைத்தான் தவறாமல் உபயோகிப்பது வழக்கம் என்று மற்றொரு விளம்பரத்தில் கூறுகிறாள். கடை வீதியில் இரண்டு ரகங்களுக்கும் நல்ல கிராக்கி. 'பாஷனை' வளர்க்கும் பாவையர்கள் பலர் 'க்யூ'வில் நின்று ஸ்நோ வாங்குகிறார்கள்.

இவ்வளவு பாஷனுக்குச் சிங்காரித்துக் கொள்ளும் நாகரிக யுவதி கையில் 'வானிடி பாக்' என்னும் ஜம்பப் பையுடன் 'ஷாப்பிங்' செய்யப் புறப்படும் காட்சியை என்னவென்பது? அவளது அசாத்திய தைரியத்தைக் கண்டு ஆண்கள் அதிசயத்தால் வாயைப் பிளப்பார்கள்! மணிக்கு மணி பச்சோந்தி போல் உடையின் நிறத்தை மாற்றிக் கொண்டு 'சோல்ஜர்' போல் தலை நிமிர்ந்து நடப்பாள். பஸ், டிராம், எலக்ட்ரிக் ரெயில் முதலியவைகளில் ஏறியவுடன் ஆண்களுக்குப் பக்கத்தில் காலியாயுள்ள இடத்தில் 'ஜக்' கென்று ஆசனம் அதிர அவள் உட்காருகையில் பக்கத்திலுள்ள பயந்தாங் கொள்ளியும் அப்பாவியுமான ஆண்மகன், என்சாணுடம்பை ஒரு சாணாகக் குறுக்கிக் கொண்டு ஒடுங்கி ஒதுங்குவான். இல்லாவிட்டால் மரியாதையாக எழுந்து நிற்பான்.

நாகரிகப் பெண்கள் உடம்பு பூராவும் நகைகளைப் பூட்டிக் கொள்ள மாட்டார்கள். 'ஸிம்பி'ளாக இருப்பார்கள்! காதுகளில் வைரத் தோடுகளுக்குப் பதிலாகக் கேடயமோ, தேர்ச் சக்கரமோ போன்ற எனாமல் கொப்புகளை அணிவார்கள்! அவர்களுக்கு முத்துக்களின் மேல் அலாதிப் பிரியம்! அசல் உயர்ந்த ஜாதி முத்தாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. இமிடேஷன் 'கல்' முத்துச் சரங்களைக் கூட கழுத்தில் அலங்காரமாக அணிவார்கள்! இதைப் பார்த்துவிட்டு 'கரிக் குறத்தி' மாதிரி இருக்கிறது என்று யாராவது பரிகாசம் செய்தால் அது சொல்பவர்களுடைய அநாகரிகத்தையே குறிக்கும். அரசிளங் குமரிகள் முத்துமாலைகள் அணியவில்லையா?

இப்படி வாயுவேக மனோ வேகத்தில் துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கும் நாகரிகத்தின் மூல கர்த்தாக்கள் யார்? அது எங்கே ஆரம்பிக்கிறது? எப்படிப் பரவுகிறது? 'இதுதான் இன்றைய பாஷன்' என்று எந்த மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள்? என்பதெல்லாம் கடவுளால்கூடப் புரிந்து கொள்ள முடியாத ஒரு பெரிய புதிர்!

இன்றைக்கு மாம்பலத்தில் ஒரு மடந்தை ரவிக்கையை ஒரு மாதிரியாகத் தைத்துப் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு நீங்கள் அதிசயித்தீர்களானால் நாளைக்கு மானாமதுரையில் ஒரு மங்கை அதே பாஷனில் காட்சி யளிக்கக் காண்பீர்கள்! சொல்லுங்கள் பார்க்கலாம், மேற்படி 'பாஷ'னுக்கு யார் ஆதிகர்த்தா?

அட்டைப்பட விளக்கம்

பேசும் பொற் சித்திரம்

குழந்தைகளுடைய மோகனப் புன்னகையிலே சொக்கி மகிழாதவர்கள் யார்? அவர்களுடைய யாழினும் இனிய மழலை மொழியைக் கேட்டு மயங்காதவர்கள் யார்?

இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்பு தெய்வத் திருமறையாகிய திருக்குறளைத் தமிழுலகத்துக்கு அருளி விட்டுச் சென்ற வள்ளுவர் பெருமான் இதையே,

"குழல் இனிது யாழ்இனிது என்ப தம்மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்"

என்பதாகவும்,

"அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்"

என்பதாகவும் வெகு அழகாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் சொல்லியிருக்கிறார்.

குழந்தைகளுடைய பேரழகிலும் அவர்களுடைய மோகனப் புன்னகையிலும் அப்படியே மயங்கி மனதைப் பறிகொடுத்த மற்றொரு தமிழ்க் கவிஞர் ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியார்.

உலகத்தில் இதுவரை தோன்றிய எந்தக் கவியும், எந்த பாஷையிலும் கண்டறியாத முறையிலே அவர் குழந்தைகளைப் பற்றி அற்புதமாகச் சில கவிகளைப் பாடியிருக்கிறார். அவற்றுள் சில:

சின்னஞ் சிறு கிளியே — கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே — உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்

பிள்ளைக் கனியமுதே — கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே
அள்ளி யணைத்திடவே — என் முன்னே
ஆடி வருந் தேனே

ஓடி வருகையிலே — கண்ணம்மா
உள்ளங் குளிருதடீ;
ஆடித் திரிதல் கண்டால் — உன்னைப்போய்
ஆவி தழுவுதடீ




சொல்லும் மழலையிலே — கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே — எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்

எளிய, கொஞ்சுத் தமிழில் பாடப்பட்ட இந்த ஒப்புயர்வற்ற கவிகள் தமிழுக்கு ஒரு பொக்கிஷம்; தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு மகா கவி அளித்த ஈடு இணையில்லாத பரிசு; உண்மையாகவே லட்சாலட்சம் பெறக்கூடிய பாடல்கள்.

பாரதியார் சொல்லிலே புனைந்திருக்கும் மேற்படி சித்திரத்தை நம்முடைய சித்திரக்காரர் அட்டைப்படத்திலே வர்ணச் சித்திரமாகப் புனைந்திருக்கிறார்.

* * *

மகா கவி பாரதியாருடைய தினம் இம்மாதம் 11ம் தேதி தமிழ் நாடெங்கும் கொண்டாடப்படும்; தமிழ்நாட்டுக்கு அப்பால் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் கொண்டாடப்படும்; பாரதியார் பிறந்த எட்டயபுரத்தில் பாரதி ஞாபகார்த்த மண்டபத்தில் பேராசிரியர் வ. ரா. அவர்களுடைய தலைமையில் பாரதி தினத்தைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறது.



செய்திகளை முந்தித்தருகிற தினப் பத்திரிகைகள்

தினத்தந்தி சென்னை

தந்தி . . மதுரை

தினத்தூது திருச்சி

தினத்தாள் சேலம் & கோயமுத்தூர்

"தினத்-தந்தி" ஆபீஸ்,
41, கச்சேரி ரோட், மைலாப்பூர், சென்னை

திருவல்லிக்கேணி

நேஷனல் (பெண்கள்) ஹைஸ்கூல்

கட்டிட நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★

ஆஸ்தான வித்வான்

மைசூர் சௌடய்யா	...	பிடில்
கல்பாத்தி ராமநாதன்	...	மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன்	...	கடம்

★

29-11-48 ஞாயிறு மாலை 6 மணிக்கு

திருவல்லிக்கேணி

டாக்டர் பெஸண்டு ரஸ்தாவில்


பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள

பந்தலில்

டிக்கட்டுகள் :

ரூ. 250/: ரூ. 100/: ரூ. 50/: ரூ. 25/:
ரூ. 10/: & ரூ. 5/:

No. 3.



இதய நோயா?

...என்ன செய்யவென்று கூறுவேன்



இவ்வுபாதைகள் அநிகோரமானவை என்றாகானது பவன், மிக அசாதாரணமாகவும், உண்ணுக்குப் பின் வயிற்றில் அதிரணம், உப்புச உணர்வுகளைத் தரும் அமிலத்தின் பிரக்கையாலேயே இவ்வுபாதைகள் ஏற்படுகின்றன. விஷ அமிலங்களுக்கு மாறாய், எப்போதும்போல ஜீரண சக்தி வளிப்பது. என உயர்ந்த பிஸ்மாக் கொடுக்க செய்யுமென, இம்மிஷத்தில் கள் இடைஞ்சலின்றி ஜீரணமாக உதவுகிறது. இன்று பரிக்ஷியுங்கள்

உங்களுக்கு வேண்டியது

எல்லா கெமிஸ்டு களிடமும் ஸ்டோர் களிலும் பவுடராக வும் மாத்திரையாக வும் கிடைக்கும்.

BISMAG

சோல் ஏஜண்டுகள்:

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.

பம்பாய்-கல்கத்தா-மதராஸ்-லாகூர்

எந்த வேகத்துக்கும் தகுதியான ஓட்டம்

ஆனால் ஒருபோதும் அதிகமாக மை கொட்டாது



நீங்கள் வெகு வேகமாக எழுதுபவராயினும் சரி, அல்லது மெதுவாக எழுதுபவராயினும் சரி, மெண்ட்மோர் ஆட்டோ-ப்ளோ பேனாவில் புத்தம் புதிதாக வெகு நவீன முறையில், நிப்புக்குக் கீழ் அமைக்கப்பட்ட நாக்கு, எழுதும் சக்திக்கு ஏற்றபடி, சுலபமாகவும், ஒரே சீரானமாகவும் மைக் கசிவு ஏற்படுமாறு செய்யப்பட்டுள்ளது. இந்த நவீன அடிப்படை மாறுதல், நிப்பின் நுனியில் அதிக மை செம்பைத் தடுப்பதோடு அல்லாமல் கடைசி ஒரு துளி மை தீரும் வரை ஒரே சீரானமாகவும் ஒழுங்காகவும் மைக் கசிவு ஏற்படும்படி உதவுகிறது. மெண்ட்மோர் பேனாக்களில் மட்டுமே எவ்விதக் கஷ்டமுமில்லாமல், இந்த மைய அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது.

ஆஸ்மி இரிடியம் தோய்க்கப்பட்ட 14 காரெட் கெட்டித் தங்க நிப்புடன் கூடியது. ரூ. 15/-



மை கசிதல் நவீனமாக நிப்பின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நாக்கு மூலம் நன்கு சப்ளை செய்யப்படுகிறது.

மெண்ட்மோர் ஆட்டோ - ப்ளோ பௌண்டன் பேனாக்கள்

MENTMORE

இங்கிலாந்தில் செய்யப்பட்டது.

முல்லர் & ப்பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்.

15, கச்சூராம செட்டித் தெரு, மதராஸ்-1



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI செப்டெம்பர் 12, 1948

4 அணா

REGD. No. M. 4392



போர் முரசு கொட்டுக!

அன்று துரியோதனனிடம் கிருஷ்ண பரமாத்மாவின் இறுதி முயற்சி தோல்வியுற்றது போல், இன்றும் ரஸாக்கர் கூட்டத்தினிடம் ராஜாஜியின் இறுதி முயற்சி தோல்வியடைந்து விட்டது.

அடுத்தபடியாக நடக்கப் போவது என்ன என்பதில் இனி எவருக்கும் சந்தேகம் இருக்க இடமில்லை.

இந்தியா—ஹைதராபாத் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன் செகண்டிராபாத்தில் இந்தியாவின் துருப்புகள் இருந்தன.

அந்தத் துருப்புகள் அங்கு இருந்த வரையில் அவை ஹைதராபாத் பிரஜைகளுக்குத் தகுந்த பாதுகாப்பாக இருந்தன. ஆனால் எப்பாடு பட்டாவது ஹைதராபாத்துடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் என்ற நோக்கம் கொண்டு இந்திய சர்க்கார், ஒப்பந்தத்துக்கு இணங்க மேற்படி துருப்புகளை வாபஸ் செய்து கொண்டனர். அதிலிருந்தே ஹைதராபாத்தின் மீது ஆக்கிரமிக்கும் உத்தேசம் இந்திய சர்க்காருக்குக் கொஞ்சமும் இல்லை யென்பதை எவரும் அறிந்து கொள்ளலாம்.

ஆனால், நைஜாம் கோஷ்டியினரோவெனில் மேற்படி துருப்புகள் தங்களுடைய எதேச்சாதிகாரத்துக்கு இடையூறாக இருக்கின்றன என்று எண்ணி, அவைகளை இந்திய சர்க்கார் வாபஸ் செய்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே, ஒரு வருஷ காலத்துக்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போது, அதை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் நைஜாம் சர்க்காருக்கு இல்லவே இல்லை யென்பது பின்னர் நிகழ்ந்த சம்பவங்களிலிருந்து சந்தேகமின்றி வெளியாகிவிட்டது.

செகண்டிராபாத்திலிருந்து இந்தியத் துருப்புகள் வாபஸானதிலிருந்தே அந்தச் சமஸ்தானத்தில் ரஸாக்கர்களின் சகிக்க முடியாத அட்டூழியங்கள் ஆரம்பமாகி விட்டன.

அந்தப் பாதகர்கள், ஒரு வருஷத்துக்கு முன் மேற்குப் பஞ்சாபில் நடந்த அக்கிரமங்களை அப்படியே 'காப்பி' யடிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அத்தகைய அக்கிரமங்களை வேறெந்த சர்க்காரும் ஒரு சில நாட்கள் கூடப் பொறுத்திருக்க மாட்டார்கள்.

ஆனால், பொறுமையையே பூஷணமாக உடைய நமது மாபெரும் தலைவர்கள் எல்லாவற்றையும் பொறுத்தனர். நைஜாம் கோஷ்டியினரின், ரஸாக்கர்களின் மத வெறியும் இரத்த வெறியும் அடங்கிவிடும் என்று எதிர்பார்த்தனர். ஹைதராபாத்திலும் இந்தியாவிலும் உள்ள ஜனங்களின் க்ஷேமம் ஒன்றையே முக்கியமாகக் கருதி, யுத்தம் ஏற்படாமல் தவிர்க்கப் பாடுபட்டனர். ஆனால் அவையெல்லாம் வியர்த்தமாகி விட்டன.

தற்போதுள்ள நிலைமையில் இந்தியா—ஹைதராபாத் யுத்தம் நிச்சயம் என்றாகிவிட்டது. எனவே அந்த யுத்தத்தை இந்தியா வெற்றிகரமாக முடிக்க ஜாதி, மத, கட்சி பேதமின்றி எல்லோரும் இந்திய சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களை ரஸாக்கர்களின் அட்டூழியங்களை எதிர்த்து நிற்கும் போர்வீரராகக் கருதவேண்டும். அரக்கர்களை அழித்து நிரபராதிகளைக் காப்பாற்றவும், பெற்ற சுதந்திரத்தைப் பரிபாலிக்கவும் அஞ்சா நெஞ்சத்துடனும் ஆண்மையுடனும் முன் செல்ல வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களும் தங்களுடைய கடமையை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். ஹைதராபாத் பிரச்னைக்கும் மதத்துக்கும் அணுவளவும் சம்பந்தமில்லை. எத்தனையோ முஸ்லிம்கள் பாகிஸ்தானில் பரிதவித்து வருவது போல், ஹைதராபாத்திலும் பரிதவித்து வருகிறார்கள். எனவே ஹைதராபாத் பிரச்னை, அரசியல் சதியையும் சூழ்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டது.

இந்தியாவிடம் தங்களுக்குப் பூரண விசுவாசம் இருப்பதாக ஏற்கெனவே இந்திய முஸ்லிம்கள் உறுதி கூறியிருக்கிறார்கள். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அல்லது இந்தியாவுக்கும் ஹைதராபாத்துக்கும் யுத்தம் ஏற்பட்டாலும் கூட தாங்கள் இந்தியாவின் சார்பில் ஆயுதந்தாங்கிப் போர் புரிவோம் என்றும் கர்ஜித்திருக்-

கிறார்கள். அவர்களுக்கு இப்போது சோதனைக் காலம் வந்திருக்கிறது. எனவே, ஏற்கெனவே பாகிஸ்தானை ஆதரித்தவர்கள் இந்தச் சோதனைக் காலத்திலாவது மோசம் போகாமல் விழித்துக் கொள்வார்களாக.

* * *

“சத்தியமே ஜயம் என்பது இந்தியர்களின் அடிப்படையான தர்மம். அந்த தர்மத்திலிருந்து வழுவாவிடில் நாம் வெற்றி பெறுவது நிச்சயம். பொய், பித்தலாட்டம், துரோகம் இவற்றை அடிப்படையான ‘தர்ம’மாகக் கொண்டுள்ள தேசம் எக்காலத்திலும் வெற்றி பெற முடியாது” என்று நமது பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு, இந்தியா பார்லிமெண்டில் காஷ்மீர் பிரச்னையைப் பற்றிப் பேசியபோது குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர யுத்தத்தை நிறுத்தும் விஷயத்தில் ஐ. நா. கமிஷனின் முயற்சி அடியோடு தோல்வி யுற்றது என்றே கூறவேண்டும். அதற்குக் காரணம் பாகிஸ்தானின் பிடிவாதம்தான்.

யுத்தத்தை நிறுத்த இந்திய சர்க்கார் தயாராக இருந்தனர். சர்வ தேச சபைக்கும் சர்வ தேச சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம்தான் இந்திய சர்க்கார் அவ்விதம் தயாராக இருந்ததற்குக் காரணம்.

ஆனால் பாகிஸ்தான் சர்க்காரோவெனில், போரை நிறுத்துவதற்கு நேர்மை யற்ற சில நிபந்தனைகளை விதித்தனர். அந்தகைய நிபந்தனைகளுக்கும் கமிஷனின் கோரிக்கையை நிராகரிப்பதற்கும் வேற்றுமை எதுவுமில்லை. ஜவாஹர்லால்ஜீ குறிப்பிட்டிருப்பதுபோல், பல மாதங்கள் வரையில் தங்களுக்கும் காஷ்மீர யுத்தத்துக்கும் சம்பந்தம் இல்லையென்று கூறி வந்த பாகிஸ்தான் சர்க்கார், மேற்படி போரில் தங்களுடைய துருப்புகளுடன் நேரடியாகக் கலந்து கொண்டது சர்வதேச சட்டத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் முற்றிலும் விரோதமாகும்.

காஷ்மீர யுத்தத்தில் பாகிஸ்தான் துருப்புகள் கலந்து கொண்டுள்ள அக்கிரமத்தை ஐ. நா. கமிஷனர்கள் நேரிலும் பார்த்திருக்கிறார்கள். எனவே இந்நிலைமையில் பாகிஸ்தான் சர்க்காரின் பொய்மையையும், வஞ்சகத்தையும், துரோகத்தையும் ஐ. நா. பாதுகாப்பு சபைக்கு அறிவித்து, போர் வெறி கொண்டுள்ள பாகிஸ்தானுக்குப் புத்தி வரும்படியான முறைகளைக் கைக்கொள்ளும்படி செய்ய வேண்டியது மேற்படி கமிஷனின் கடமையாகும்.

இந்த வாழ்க்கை இனி உண்டோ?

இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காக இரண்டு வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு பிரிட்டிஷ் மந்திரி சபைக் கமிஷன் வந்திருந்ததல்லவா? அந்த மந்திரிகளில் ஒருவர் தென்னிந்தியாவிலுள்ள சில முக்கிய நகரங்களுக்குச் சென்றிருந்தார். அகண்ட காவேரியையும் அற்புத சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த ஆலயங்களையும் பார்த்து அகமகிழ்ந்தார். ஊருக்குத் திரும்பிச் செல்லுமுன் ஓர் அறிக்கை விடுத்தார்.

“புழுதிக்குப் பெயர் போன அந்த நகரைப் பார்த்தேன்” என்று மேற்படி அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்!

அந்த நகரத்தின் சிறப்பினால் அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியெல்லாம் அங்கு இடைவிடாது கவிந்து நிற்கும் புழுதி மண்டலத்தால் மறைக்கப்பட்டு விட்டது!

கலைச் சிறப்பும் கவிதை உயர்வும், இனிய பொழில்களும் செழிய வயல்களும் நிறைந்த பாரத நாட்டில், சேரிகளையும் சாக்கடைகளையும் தவிர வேறெதையும் காண மிஸ் மேயோவினால் முடியவில்லை!

அதுபோலவே மேற்படி பிரிட்டிஷ் மந்திரியின் கண்களையும் தமிழ்நாட்டிலுள்ள நகரங்களின் அழகைக் காண முடியாதவாறு புழுதி மண்டலம் மறைத்து விட்டது!

எனினும் அவர்களின் கூற்று முற்றிலும் உண்மை என்பதை நாம் ஒப்புக் கொண்டுதான் தீரவேண்டும்.

தற்போது கங்கையும் யமுனையும் பொங்கி வழிந்து ஆற்றுக் கணக்கான

கிராமங்களை வெள்ளக் காடாக்கி விட்டன. ஆனால் சென்னைமா நகரிலுள்ள லட்சக் கணக்கான ஜனங்கள் போதிய குடி தண்ணீரும் குளி தண்ணீருமின்றி அவஸ்தைப் பட்டு வருகிறார்கள். குழாய்களில் வேண்டா வெறுப்புடன் வரும் கொஞ்ச நஞ்சம் தண்ணீரும் குடிக்கவும் குளிக்கவும் தகுதியற்றதாய் நாற்றம் வீசுகிறது.

பெரு வெள்ளம் ஏற்படாமல் பாதுகாப்பதோ அல்லது பெரு வெள்ளத்தைத் தடுப்பதோ மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்ட காரியம் ஆகும்.

எனினும் குழாய்த் தண்ணீரை அபிவிருத்தி செய்வது மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டதல்ல என்பதுடன், லட்சக் கணக்கான ஜனங்களின் ஆரோக்கியத்துக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாப்பதற்காக அந்தத் தண்ணீரை அபிவிருத்தி செய்ய வேண்டியது மனிதனின் முழுமுதற் கடமையும் ஆகும்.

* * *

தமிழ் நாட்டைச் சேர்ந்த பல நகரங்களின் வழியாக காவேரி நதி கம்பீரமாகச் செல்வது அந்த நகரங்களுக்குத் தனி அழகைக் கொடுக்கின்றது. ஆனால் மேற்படி நகரங்களில் கண்ட விடங்களிலெல்லாம் தேங்கி நிற்கும் சாக்கடைகள் அந்த அழகை அடியோடு கெடுத்து விடுகின்றன.

சென்னைக் கடற்கரையின் அழகுக்கு ஈடு உலகிலேயே இல்லை என்று கூறப்படுகின்றது. பல மைல்கள் தூரம் கடற் கரையில் இயற்கைப் பஞ்சணை போன்று மணல் மேவி நிற்கும் அற்புதக் காட்சியை வேறெங்குமே காண முடியாது.

இந்த மாபெரும் நகரில் வானளாவ நிற்கும் கட்டிடங்களும், பூச்செடிகளாலும் பசுந்தோட்டங்களாலும் சூழப்பட்டு 'மனிதனின் போக வாழ்க்கை என்பது இது தான்' என்று அறைகூவும் பங்களாக்களும் ஏராளமாக இருக்கின்றன.

ஆனால் அவையெல்லாம் பாலைவனத்தின் மத்தியில் இருக்கும் ஒரு சிறு பூஞ்சோலையைப் போன்று காட்சியளிக்கின்றன.

பத்து லட்சக்கணக்கான பெரும்பாலோர் பாலைவனத்தைப் போன்று கங்கு கரையற்ற வரண்ட வாழ்க்கை நடத்துகிறார்கள். அற்ப மழை பெய்தாலும் ஆபத்துக்கு உள்ளாகும் பள்ளத்தாக்கான சேரிகளில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வேளை கூடப் போதிய கஞ்சி கிடைப்பதில்லை. அவர்களுடைய ஆடையோ அவர்களின் வறுமையையும் பிணியையும் உலகத்தினிடம் முறையிடுவதாக இருக்கிறது.

அவர்களுக்குத் தரை தான் தலையணை; வானம் தான் போர்வை!

எண்பது சதவிகிதத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் அத்தகைய வாழ்க்கை நடத்தி வரும் ஒரு சமுதாயத்தை ஒப்பிலாத சமுதாயம் என்று எவ்வாறு வர்ணிக்க முடியும்?

* * *

அவர்களை உய்விப்பதற்குற்ற வழிகளைச் செய்ய வேண்டிய முயற்சி சென்னை மாகாணத்தில் இப்போது ஆரம்பமாகியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

சென்னை மாகாண முனிசிபல் தலைவர்கள் அகில மகாநாடு ஒன்று சில தினங்களுக்கு முன் ராஜாஜி மண்டபத்தில் நடந்தது.

அந்த மகாநாட்டைக் கூட்டியவர்கள் சென்னை சர்க்காரே யாதலால், அதில் அநேகமாக எல்லா சென்னை மந்திரிகளும் கலந்து கொண்டு தங்களுடைய அரிய யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவித்தார்கள்.

சாதாரணமாக அரசியல் கொள்கைகளில் அபிப்பிராய பேதம் கொண்டவர்கள் கூட முனிசிபாலிடிகளின் கொள்கைகளில் அபிப்பிராய பேதம் கொள்ளமாட்டார்கள்.

சேரிகளை ஒழித்து ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்.

சாக்கடைகளைச் சீர்திருத்திக் கொடிய நோய்களுக்குக் காரணமாக இருக்கும் கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுக்க வேண்டும்.

ஒரு சிலர் மாளிகைகளில் வசிப்பதும், ஆனால் பெரும்பாலோர் மண்ணில் புரளுவதும் என்ற விபரீதம் மறைந்து, குறைந்த பட்சம் எல்லோரும் மனிதர்களாக வாழ வழி கோல வேண்டும்.

இந்தக் காரியங்கள் எல்லாம் நிறைவேறுவதில் யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க இடமில்லை.

சென்னை மாகாணத்திலுள்ள நகர சபைகள் எல்லாம் மேற்படித் துறைகளில் முதன்மையாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகிறோம். இந்தியா சுதந்திரம் அடைந்த முதல் மூன்று வருஷங்களுக்குள் இந்தியாவிலுள்ள நகரங்களிலும் பட்டணங்களிலும் சேரிகள் இல்லாமல் ஒழிந்தன என்று ஏற்பட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?